# கல்கி

ஆண்டு மலர்

அதிக பக்கங்கள்

KALKI 4.8.96
ரூ. 3.00





அமைச்சருடன்... களத்தில் கல்கி!

ரூ. 5000 பரிசுப் போட்டி அறிவிப்பு

"மனசுல இருந்தது; கொட்டிட்டேன்!"

- மீனா

# KANNAALAN

## GROUP OF COMPANIES

Regd Office : 17/A, Woods Road, Ist Floor,
Royapettah Clock Towers, Madras - 600 002.
Ph : 8555488/8552973/8547764

# கன்னாளன்

வருமானத்தின் அதிக பங்கினை
வாடிக்கையாளர்களுக்கு வட்டியாக வழங்குகிறோம்.

“வைப்பு நிதிக்கு கணிசமான வட்டி RBI
விதிகளுக்கு உட்பட்டு வழங்குகிறோம்”

ரூ.25,000 முதல் ரூ.5,00,000 வரை
சிட்டு குருப்கள் - எல்லா தரப்பினருக்கும் ஏற்ற வகையில்

## KANNAALAN
GROUP OF COMPANIES

**KANNAALAN BENEFIT FUND LTD.**
**KANNAALAN CHITS INDIA (P) LTD.**
**KANNAALAN CONSTRUCTIONS (P) LTD.**
**KANNAALAN FINANCE LIMITED**
**KANNAALAN TRADE CREDITS**

Office Hours : 9.00 a.m. to 1.00 p.m. — 2.00 p.m. to 6.00 p.m.

★ *Property Loan* ★ *Jewell Loan* ★ *Special Loan*

Transaction With Members Only

R. RAJA, Chairman

***Worth your Trust — Truly!***



# காதல் கோட்டை

ஒருத்தருக்கு ஒருத்தர் பார்த்துக் கொள்ளாமல், கடிதங்கள் மூலமே காதலிக்கிறார்கள், காதலிக்கிறார்கள், காதலிக்கிறார்கள், அஜீத்குமாரும் தேவயானியும். கிளைமேக்ஸில் பார்த்துக் கொள்வதோடு படம் முடிந்து விடுகிறது.

இதென்ன கதை? என்று அவசரக் கேள்வி போடுகிறவர்கள், படத்துக்குப் போனால், இன்டர்வலில் கூட எழுந்திருக்க மாட்டார்கள். அப்படிக் கட்டிப் போடுகிறார் இயக்குநர் அகத்தியன். கேரக்டர்களைச் செதுக்கி இருக்கிற நேர்த்தி, யாருக்கும் பிரமிப்பு தரும்.

காதலர்களுக்காகவே தொலைபேசிச் சேவை நடத்துகிற மணிவண்ணன், தன்னை 'ஸார்' போட்டுக் கூப்பிட்டதாலேயே புளகாங்கிதமடைந்து, ஹீரோவுடன் நட்பு கொண்டு, கடைசி வரை உதவுகிற ஆட்டோ டிரைவர் விஜய், தேவயானிக்கு வேலை கிடைக்க, சர்ச்சில் சிறப்புப் பிரார்த்தனைக்கு ஏற்பாடு செய்து பரவசப்படுத்துகிற அந்த ஹாஸ்டல் பெண் என்று படத்தில் மிகக் கொஞ்சம் நேரம் வருகிறவர்கள் கூட மனத்தில் குடிபுகுந்து விடுகிறார்கள்.

அப்புறம், அந்த ஹீரோயின் தேவயானி. கிட்டத்தட்ட பாப்பா முகமும் படபடக்கிற விழிகளும், ஃப்ரீஸ் பண்ணி ஃப்ரேம் அடித்து வைத்துக் கொள்ள மாட்டோமா என்று ஏங்கச் செய்யும் புன்னகையுமாக... வசனங்களே இல்லாமல் அதிகபட்சம் கண்களாலேயே பேசும் கலை எப்படிக் கைவந்ததோ?



முதல் முதலாகத் தன் கடிதக் காதலனுடன் போன் பேசப் போய் - அவன் ஜெய்ப்பூரில், அம்மணி ஊட்டியில் - ஏதோ ஊர்வல கோஷம் குறுக்கே புகுந்து காரியத்தைக் கெடுக்க, அந்த முகம் வெளிப்படுத்துகிற தவிப்புணர்ச்சிக்கே விருது கொடுக்கலாம்!

பாதிப் படத்துக்கு மேல் கவர்ச்சிக்காக வருகிற ஹீரா கூட சில முத்திரைகள் வைக்கிறார். அஜீத்தை, தன்னைக் காதலிக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்துகிற தருணங்களில் வெளிப்படுகிற அந்த வெறித்தனமான எக்ஸ்பிரஷன் அநாயாசம்! அதைவிட அநாயாசம், அஜீத் - தேவயானி காதல் தெரிந்தபின் அவர் தேவயானியிடம் பேசுகிற இடம். இயல்பான பொறாமை உணர்ச்சியை குரல் உயர்த்தாமல் காட்டுகிற நேர்த்தி அற்புதம்.

அகத்தியனின் முந்தைய இரண்டு, மூன்று படங்களில் இத்தனை தரம் இருந்ததாக ஞாபகமில்லை. இந்தப் படத்தில் அவர் அணு அணுவாகச் செதுக்கி இருக்கிறத விதம் அவரை முதல்தர இயக்குநர்களின் வரிசைக்குக் கூட்டிப் போயிருக்கிறது.

லேடீஸ் ஹாஸ்டல் சுவரில், கற்பின் பெருமை சொல்லும் திருக்குறள் எழுதி இருப்பது, சாலையோர டிபன் கடையில் 'முனியாண்டி விலாஸ்' என்று ஸ்பெல்லிங் மிஸ்டேக்கோடு போர்டு இருப்பது என்பது தொடங்கி, பல சின்ன விஷயங்களில் கூட நேர்த்தி காட்டி இருக்கிறார்.

இந்த மாதிரி ஒரு படம், ஹீரா மைனஸ் பாதி உடை, கனவுப் பாட்டு, ஆட்டோ ஸ்டாண்ட் சண்டை எல்லாம் இல்லாமலே நடந்தவாக்கில் சில்வர் ஜூப்ளி பார்க்கக் கூடும்.

தவிர்த்திருக்கலாம்.

— ஆர்.பி.ஆர்.

# வித்தகர்

கதை, கவிதையைப் படித்து மனசில் வாங்கிக் கொண்டு, அதில் வரும் ஏதாவது ஒரு வரி அல்லது சொல் கூடப்போதும் - அதில் அமிழ்ந்து தம் மனோதர்மப்படி படம் வரைந்துவிடுகிறார்.


"மிக அவசியம் என்கிறபோது மட்டும் அந்த ஓவியத்தில் கதை நிகழ்வதும் இடம் பெறும். சமயங்களில் கதைக்கும் படத்துக்கும் என்ன தொடர்பு என்று யோசிக்க வைத்தாலும், கதையை மனசில் நினைத்து அசை போடுகிற மாதிரி, படத்தையும் தனியாக அனுபவித்து மகிழ - சிந்திக்க வைப்பதே நோக்கம்" என்கிறார் மருது.

தம்முடைய பாணி என்பதற்கு இவருடைய விளக்கம் 'அசைவை நோக்கிய தேடல்' என்பதே. சிறுவயதில் பார்த்த அனிமேஷன் படங்கள், சினிமா இவற்றின் பாதிப்பால் விளைந்தது இது என்கிறார்.

"மதுரை மீனாட்சி யம்மன் கோவில், அமைதி யான கிராமம் என்ற நிலையிலிருந்து மெள்ள நகரமாக மாறிக் கொண்டிருந்த கோரிப் பாளையம் வட்டாரச் சூழல், மாரியம்மன் கோவிலில் முளைப்பாரித் திருவிழா, அய்யனார் மண்குதிரைகள் செய்வதில் அசாத்தியத் திறமை வாய்ந்த கலைஞர்கள், தமுக்கம் மைதானம், காந்தி மியூசியம், கோரியின் சமாதி..." என்று அடுக்கிக் கொண்டே போகிறார் மருது.

இவை தம்முள் உருவாகிக் கொண்டிருந்த கலைஞனுக்கு ஊக்க மூட்டி உற்சாகப்படுத்திய கணங்கள் என்று அவர் கூறுகிறபோது; என்னமோ, இந்தக் காட்சிகள் கண்முன்னே படமாக உயிர்பெற்று நிற்பது போன்ற உணர்வை அவருடைய கண்கள் வெளிப்படுத்துகின்றன!

நர்சரிப் பள்ளியிலேயே 'பெயிண்டிங்' கலையில் மருதுவுக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் ஆர்வம் ஏற்பட்டது. அதற்கு நீர் வார்த்து, செழித்து வளரப் பண்ணியவர் தந்தை மருதப்பன்தான்.





கிடைத்தற்கு அரிய மேனாட்டு ஓவிய மேதைகளின் விலையுயர்ந்த புத்தகங்களை யெல்லாம் (ஹென்றி கெய்ஸர், ஆட்ரின் ஹில்...) பள்ளி நாட்களிலேயே வாங்கிக் கொடுத்து ஊக்கப்படுத்தியிருக்கிறார்.

"பாலைவனங்களைப் பற்றிப் பள்ளிக் கூடத்தில்தான் படித்திருப்பாய்... இப்போது போய்ப் பார்த்து விட்டுவா" என்று பரீட்சை நேரத்தில் கூட 'லாரன்ஸ் ஆஃப் அரேபியா' படத்துக்கு அனுப்பிய அப்பாவை நினைவு கூர்கிறார் மருது.

சின்ன வயசிலே தொடங்கி பதினேழு வயது வரை மதுரையில் இருந்த காலம் வரை அங்கு வெளியான 'வால்ட் டிஸ்னி' படங்களை ஒன்று விடாமல் பார்த்ததும், காந்தி மியூசிய அரங்கில் சத்யஜித் ராய் போன்றவர்களின் தரமான படங்களை ஞாயிற்றுக்கிழமைகளில் பார்த்ததும் இவருடைய வித்தியாசமான ஓவியத் திறமைக்கு உதவியிருக்கின்றன.

சரியான பருவத்தில் மிகச் சரியான விஷயங்களை அறிந்து கொள்ள உதவியவர் மருதப்பன். காந்தி பக்தராக இருந்து, பின்னாளில் பொதுவுடைமைச் சித்தாந்தங்களால் ஈர்க்கப்பட்டார்.

"அவர் ஒரு டிராட்ஸ்கியிஸ்ட்" என்கிறார் மருது! மருதுவின் முழுப் பெயரே 'டிராட்ஸ்கி மருது' என்பதுதான். (லெனினின் வலக்கரமாக விளங்கியவர் டிராட்ஸ்கி. பின்னால் ஸ்டாலினின் ஆட்களால் இவர் படுகொலை செய்யப்பட்டார் என்பது ஒரு வீர வரலாறு).

பள்ளிப்படிப்பை முடித்துக் கொண்டு ஓவியக் கல்லூரியில் சேரவேண்டும் என்று டிராட்ஸ்கி விரும்பியபோது மட்டும் அப்பா அதை அவ்வளவாக விரும்பவில்லை. ஆனால் கதை, வசனகர்த்தா சோலைமலை (இவருக்குத் தாத்தா முறை) உதவியோடு சென்னையில் அவர் வீட்டிலேயே தங்கி ஓவியக் கல்லூரியில் சேர்ந்து ஆறாண்டுப் பயிற்சியை முடித்தார் மருது.

"அந்த ஆறு ஆண்டுகள் மிக அருமையான காலம். டக்ளஸ், முரளி, பழனியப்பன் என்று நிறையப் பேர் உருவானோம்" என்று பெருமை பொங்கச் சொல்கிறார் மருது.

டீன் ஏஜ், சிறுவனாக இருந்தபோது அறுபத்தேழாம் ஆண்டு தேர்தல் பிரசாரங்களுக்காக மதுரை நகரச் சுவர்களில் வெள்ளையடித்துக் கருப்பு அல்லது நீல வண்ணங்களில் கேலிச்சித்திரங்கள் வரைந்தார்.

"ஒவ்வொன்றும் இருபதடி உயரத்தில், முன்னூறுக்கு மேற்பட்ட ஓவியங்கள். அது அந்த வயதில் மிகப் பெரிய பணி! அந்த அனுபவத்தில் பெரிய அளவில் வரைகிறோமே என்ற பயம் விலகியதோடு, வரையும் இடத்தை கட்டுக்குள் கொண்டு வரவும் பயிற்சி கிடைத்தது. என் ஓவிய அனுபவத்தில் கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பு அது..." என்கிறார்.

இவருடைய படங்கள் எல்லாவற்றிலும் விரைவான ஓர் இயக்கம் அப்படியே பதிவாகியிருப்பது கவனித்தால் புலனாகும். 'அனிமேஷன்' கலையில் உள்ள ஈடுபாட்டின் வெளிப்பாடு இது. இருபது பகுதிகளில் இவர் தயாரித்த 'மை டியர் ஜீனி' தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிப் பெயர் வாங்கித் தந்தது. கணிசமான விளம்பரப் படங்களையும் 'அனிமேஷன்' முறையில் செய்திருக்கிறார்.

**இந்த வாரம் : ஓவியர் மருது**

அண்மையில் வெளியான 'டாய் ஸ்டோரி' என்கிற அனிமேஷன் படம் மருதுவையும் பிரமிக்க வைத்திருக்கிறது. "ஓவியனின் வேலைச் சுமையைக் குறைத்து அவனுடைய சிந்தனை மேலும் வலுப்படுவதற்கு இன்றைய கம்ப்யூட்டர் தொழில் நுட்பம் வெகுவாக உதவுகிறது. காமிராவால் முடியவே முடியாத இயக்கங்களை கம்ப்யூட்டர் வெகு எளிதாகச் செய்து காட்டிவிடுகிறது" என்கிறார் மருது.

"இந்த அனிமேஷன் கலையின் தந்தை வால்ட் டிஸ்னிதான். ஓவியனின் திறமையும், தொழில் நுட்பத் திறனும் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள 'டாய் ஸ்டோரி' மாதிரியான ஒரு கூட்டு முயற்சியில் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்று எனக்கும் ஆசை இருக்கிறது" என்கிறார் மருது.

— சுப்ரபாலன்
படங்கள் : யோகா

# அன்புள்ள உங்களுக்கு,

கடிதங்கள் அழகானவை; உயிருள்ள காகிதங்கள் அவை; இதயத்தின் பிம்பங்கள்.

ஒரு நல்ல கடிதம் என்பது உற்சாகம்; மனசின் வேரில் பன்னீர்ச்சொட்டு தெறிக்கும் பரவசம்.

அப்படி ஒரு கடிதம் - கனடாவிலிருந்து கவிதைத் தோழி லலிதா எழுதிய கடிதம்.

அமெரிக்காவின் டொலிடோ நகரத்திற்கு தமிழ் நாடு அறக்கட்டளை என்னை அழைத்திருந்தது.

மாநாட்டு இடைவேளையில் உணவுக்கூடத்தில் இரண்டு பெண்கள் அருகில் வந்து 'ஹலோ' சொன்னார்கள்.

ஒருவர் முகத்தில் தமிழ் விலாசம் இருந்தது.

இன்னொருவரை உடை - நிறம் - உருவத்தால் வெள்ளைக்காரப் பெண் என்று நினைத்தேன்.

"உங்களைப் பார்க்கத்தான் நாங்கள் கனடாவிலிருந்து அமெரிக்கா வந்தோம்."

என்ன இது விந்தை?

வெள்ளைக்காரக் குயில் தமிழ் கூவுகிறதே!

"என் பெயர் லலிதா. நான் பிறந்தது கேரளா; படித்தது தமிழ்நாடு; இருப்பது கனடா. உங்கள் எழுத்தும் பாட்டும் எனக்கு உயிர். இவள் நீலா. இவளும் உங்கள் ரசிகைதான். என் அளவுக்கு இல்லை; ஓரளவுக்கு."

- என்று சொல்லி வெள்ளை அல்லியாய் வெடித்துச் சிரித்தார் லலிதா.

அவர்கள் அன்பிலிருந்த உண்மை என்னைக் கவர்ந்தது.

இரண்டே நாட்களில் அவர்கள் இனிய இலக்கியத் தோழிகள் ஆனார்கள்.

நான் இந்தியா வந்த பிறகு லலிதா அங்கிருந்து எழுதிய கடிதம்தான் இது.

எழுதப்படுகிறவர் மீது ஆதிக்கம் செலுத்துவதைவிட, அன்பு செலுத்துவதே ஒரு நல்ல கடிதத்தின் இலட்சணம்.

அது - இது.

- வைரமுத்து

லலிதா எழுதுவது. (TORONTO-வில் இருக்கும் உங்களின் ரசிகை) இங்கு நான் நலம். நீங்கள்? நான் தமிழில் கடிதம் எழுதி வெகு நாட்களாகி விட்டன. இப்போது நீங்கள் வந்து சென்றபின் தமிழில் எழுதுவதும் தமிழில் எண்ணுவதும் (THINKING) சுலபமாக வருகிறது. உங்கள் பாதிப்பில் நான் கவிதை கூட எழுத ஆரம்பித்து விட்டேன் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

கவிதை எழுதுவது மட்டுமல்ல. உங்கள் வரவு என் வாழ்க்கையைச் சற்றே பாதித்து விட்டதென்றே சொல்லலாம். உங்களோடு பழகியதும் பேசியதும் ஏதோ மறந்து போன ஒரு இனிய ராகத்தினைத் திரும்பவும் நினைவுக்குக் கொண்டு வந்தது போல் தோன்றுகிறது.

உங்கள் வரவு ஒரு கசப்பான உண்மையை எனக்கு உணர்த்தியது. அது என்னவென்றால், நாங்கள் இங்கு வாழ்ந்து வரும் வாழ்க்கையில் ஏதோ ஒன்று குறைவதைப் படம்பிடித்துக் காட்டியது. இங்கு பெரும்பான்மையோர் வாழும் வாழ்க்கை, ஒரு மேலோட்டமான SUPERFICIAL EXISTENCE. வேலைக்குப் போவதும் பணம் பண்ணுவதும் மாலை நேரத்தில் பொழுதைப் பலவிதங்களில் போக்குவதும் விடுமுறை நாட்களில் வேறு இடங்களுக்குச் சென்று

## புதிய பகுதி

enjoy பண்ணுவதுமாக மனிதனின் வாழ்க்கை ஓர் ஓட்டப் பந்தயம் போலாக உள்ளது. எதையாவது செய்து கொண்டேயிருக்க வேண்டும்; எங்கேயாவது ஓடிக் கொண்டேயிருக்க வேண்டும், எப்போதும். தன்னிடமிருந்தே தப்பி ஓட விரும்புகிறார்கள். தனிமை, பயங்கரம் இவர்களுக்கு. அகவாழ்வு அறவே இல்லை.

இதை ஏன் கூறுகிறேன் என்றால் உங்கள் வரவினால் பாதிக்கப்பட்ட நான், என்னில் உணர்ச்சிகள் மீண்டும் உயிர்த்தெழுவதையும் அதன் விளைவாக என் இதயம் பல மடங்கு அன்பினால் விரிவடைவதையும் உணர்ந்தேன். நீங்கள் காட்டிய அன்பு, சாதாரணமாக நடந்து கொண்டவிதம் எல்லாம் நீங்கள் தமிழகத்தின் தலைசிறந்த கவியரசு என்பதையே மறக்கச் செய்தது. மேலும், எதையும் ஆழமாகவும் தீவிரமாகவும் உணரும் உங்கள் இதயம், கற்பனை உலகிற்கும் நிஜ உலகிற்குமிடையே வெகு சுலபமாகச் சஞ்சரிக்கும் உங்கள் வாகவம், என்னை மிகவும் கவர்ந்தது. மேடைப் பேச்சிலோ கேட்கவே வேண்டாம். நீங்கள் வெகுதூரம் வந்து விட்டீர்கள். நானோ இதுநாள்வரை என் எண்ணங்கள், ஆசைகள் இவற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளாமலிருந்தேன். I must say I was not in touch with my feelings. பயமும் அறியாமையுமே எனது சொந்த உணர்ச்சிகளை விட மேலோங்கி நின்றன. இவ்விரைவு வாழ்க்கை என்னை freeze செய்து விட்டது!

உங்கள் வருகைக்குப் பிறகு நான் மாறித்தான் போனேன். இயற்கையின் ஒவ்வொரு அசைவிலும் காலத்தின் ஒவ்வொரு கணத்திலும் வாழ்க்கையின் பூரணம் தேங்கியிருக்கிறது என்று நீங்கள் சொன்ன வார்த்தைகள் என் காதுக்குள் இன்னும் echo செய்து கொண்டேயிருக்கின்றன. என் வெறுமையை உங்கள் தமிழால் நிரப்பி விட்டீர்கள்.

நீலா உங்களை மிகவும் கேட்டதாகச் சொன்னாள்.

பதில் எழுதுங்களேன்!


நேரமில்லையா? பேசுங்கள்.

அன்புள்ள,


லலிதா.



வண்ணப்படம் : ஏ. பி. குருஸ்வாமி




# பிரம்மாண்டமான அதிநவீன தங்க நகை



# ஏற்றுமதி உற்பத்தி தொழிற்சாலை

# திட்டத்திற்கான டெபாசிட்டுகள்



# சேகரிப்பு விழா

# 30% + 7% + 2 கிராம்

வட்டி ஊக்கத்தொகை

தங்க நாணயம் இலவசம்

மற்றும் கீழ்கண்ட சிறப்புப் பரிசுகள்

| டெபாசிட் | ரொக்க பரிசுகள் |
|---|---|
| ரூ. 10 ஆயிரம் | ரூ. 150 |
| ரூ. 25 ஆயிரம் | ரூ. 400 |
| ரூ. 50 ஆயிரம் | ரூ. 1000 |
| ரூ. 1 லட்சம் | ரூ. 2250 |
| ரூ. 2 லட்சம் | ரூ. 4800 |
| ரூ. 3 லட்சம் | ரூ. 7500 |
| ரூ. 5 லட்சம் | ரூ. 13000 |

+

ரூ.10,000 முதலீடு செய்யும்
முதல் 1000 நபர்களுக்கு
ஒரு வெள்ளி விளக்கு
இலவசம்.

தொழிற்சாலை

திறப்பு விழா 18.09.96

உற்பத்தி தொழிற்சாலை இடம்
எண் 162, மௌண்ட் பூந்தமல்லி ரோடு,
போரூர், சென்னை-116.

முதல் பரிசு
(ரூ.6 லட்சம் மதிப்புள்ள FLAT)



ஒரு நபருக்கு

இம்பீரியல் குரூப் நிறுவனங்களில்
முதலீடு செய்து போட்டியில் கலந்து கொண்டு

# ரூ. 20 லட்சம் மதிப்புள்ள 1001 பரிசுகளை வெல்வீர்!

இரண்டாம் பரிசு
(மாருதி-800 கார் Non A/c)



இரண்டு நபர்களுக்கு

மற்றும் பல பரிசுகள்

## டெபாசிட் பெறும் இடங்கள்

# இம்பீரியல் கோல்டு ஹவுஸ்

(இம்பீரியல் குரூப்பின் ஓர் அங்கம்)

நெ. 5, திருமலைப் பிள்ளை ரோடு, தி. நகர்.
(வள்ளுவர் கோட்டம் அருகில்), சென்னை - 600 017.
போன்: 823 51 51 / 823 51 61 ஃபேக்ஸ்: 823 51 71

வேலை நேரம் : காலை 10 மணி முதல் 1 மணி வரை. மாலை 2 மணி முதல் 8 மணி வரை. ஞாயிறு விடுமுறை.

இம்பீரியல் கோல்டு ஹவுஸ் : "கட்டாலா டவர்ஸ்", மூன்றாவது தளம்,
எண் 19, அவின்யூ ரோடு, (ஓட்டல் கண்பத் எதிரில்), நுங்கம்பாக்கம்,
சென்னை - 600 034. போன் : 8274159. ஃபேக்ஸ் : 8274814

நகைத் தொழிற்சாலை : இம்பீரியல் கோல்டு ஹவுஸ்,
எண் 162, மௌண்ட் பூந்தமல்லி ரோடு, (ரெயின்போ இங்க் பேக்டரி அருகில்),
போரூர், சென்னை - 600 116. போன் : 4829474

நம்பிக்கையின் சிகரம்



'டச்-அப் தண்டபாணியைக் காணவில்லை. கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசு' என்று பாண்டிய மன்னன் போல் விளம்பரம் கொடுக்கத்தான் நினைத்தேன்... அதற்காகக்கூடிய நேர விரயத்தை மிச்சம் பிடிக்கலாம் என்று தோன்றியதால் தனியே புறப்பட்டேன். ஒவ்வொரு ஸ்டுடியோவாகத் தேடிக் கொண்டே போய் (ஃபோட்டோ ஸ்டுடியோக்களையும் விடவில்லை) ஏவி.எம்மின் ஈசான மூலையிலுள்ள ஃப்ளோர் வாசலில் நின்றேன் -



• பூஜைகள் : அம்மனுக்காகவா? அம்மணிக்காகவா?

அல்ல - நிறுத்தப்பட்டேன்.

"யாருக்கும் உள்ளே போக பர்மிஷன் கிடையாது சார்!" என்று தடுத்தார் காவலர்.

நான் ஃப்ளோர் வாசலைப் பார்த்தேன். குபு குபு என்று புகை வந்து கொண்டிருந்தது. கடவுளே! யாராவது பாம் வைத்து விட்டார்களா? இல்லை. அப்படியொன்றும் விபரீதக் கற்பனைகள் வேண்டாம். உள்ளே மின்சாரக் கனவு ஷூட்டிங் நடக்கிறது என்று சொன்னார் காவலர்.

அட, கனவு சீன்?

"எதுவாயிருந்தாலும் நீ போவ முடியாது



• 'மின்சாரக் கனவு': பிரபுதேவா - காஜோல்

சார்!" என்றார் கறாராக.

தற்செயலாக வெளியே வந்த டைரக்டர் ராஜீவ்மேனனின் கண்ணில் பட்டேனோ, தப்பித்தேனோ.

"அட, வாங்க!" என்றார் புன்னகையுடன். "என்ன இத்தனை கெடுபிடி?"

"பத்திரிகை யாரையும் விடறதில்லைன்னு ஒரு கொள்கை முடிவு. ஆனா நீங்க வரலாம்!" என்று தோளில் கைபோட்டுக் கூட்டிப் போனார். (சே, தண்டபாணி இல்லாம போயிட்டானே!)

மூன்று கேமரா. இரண்டு ராட்சஸ மின்விசிறிகள். ஏராள சாம்பிராணிப் புகை. ஒரு காப்பிக் கடை செட். சுவர்களில் அந்நாளைய கறுப்பு - வெள்ளை ஹாலிவுட் முகங்கள். அங்கே அரவிந்த சாமி. இங்கே பிரபுதேவா. நடுவில் விண்மீனாகக் காஜோல்.

ஸ்ட்ராபெரி கன்னம், ப்ரிட்ஜில் வைத்த ஆப்பிள், நோஸ்தான் பிராப்ளம் இன்னபிற அசகாய சொற்களுடன் தமிழ்க் குடிமகன் விரும்பக்கூடிய (ஒரு வம்புதான்!) தமிழ்ப் பாடல் டேப்பில் ஒலிக்க, சுட்டுத் தள்ளிக் கொண்டிருந்தார்கள்.

"பாட்டுதான் என்றாலும் ஒரு வித்தியாசம் வேணாமா? அதான் பழங்கால ஹாலிவுட் பாணி செட், ம்யூஸிக், காஸ்ட்யூம்..." என்றார் ராஜீவ்மேனன்.

தமிழில் ஒரு வரி எடுத்துவிட்டு, அதே வரியைக் கையோடு இந்தியிலும் எடுத்துக் கொள்கிறார்கள். (தெலுங்கில் 'டப்'பி விடுவார்கள் போலும்.) என்ன ஒரு தொல்லை பிடித்த மும்மொழிக் கொள்கையோ?

காஜோலிடம் பேசலாம் என்று ரொம்ப ஆசைப்பட்டேன். ஷாட் இடைவேளை வரை காத்திருந்தும் பயனின்றி, விதி ஒரு ஹிந்தி புஸ்தக ரூபத்தில் அவர் கையில் வந்து, ரொம்ப சீரியஸாகி விட்டார்.

ஆகவே நடையைக் கட்டினேன் வாஹினிக்கு.

**தூ**ரத்தில் ஆர்.கே. செல்வமணியைப் பார்த்ததும், 'ராஜாளி மாதிரி இன்னொரு கலைப்படம் எப்ப சார் எடுப்பீங்க?' என்று கேட்க நினைத்துக் கொண்டு, வேக நடைபோட்டேன்.

சட்டென்று மரத்தின் பின்புறமிருந்து ஒரு கை என்னைப் பற்றி இழுக்க, அட - தண்டபாணி!

"அட, என்னய்யா, ஒளிஞ்சிட்டிருக்கே? ஊரெல்லாம் தேடினேன். என்னாச்சு? யார் கிட்டே கடன் வாங்கிட்டு இப்படி ராவணனாட்டம் கலங்கறே?"

# நடிக்க வருகிறார் மனநல மருத்துவர்!





• ருத்ரன் : நடிக்கிறார்
(படம் : ஸ்ரீஹரி)

"சும்மா இரு கிஷ்டா. ஏதேதோ வேலை. ரெண்டு மூணு வாரமா ஷேவ் பண்ண நேரமில்லை. சரி, உரமா போடறோம்! இருந்துட்டுப் போகட்டும்னு விட்டுட்டேன். அது பெரிய வினையாயிடுச்சு."

"என்னது?"

"ரட்சகன் படம் எடுக்கறாங்க இல்லை?"

"ஆமாம். குஞ்சுமோன்."

"அவங்க கம்பெனி ஆளுங்கதான். தாடியோட யாரைப் பார்த்தாலும் லபக்குனு புடிச்சி, ஒரு காவி டிரெஸ் குடுத்துடறாங்க."

"ஏதாவது பினாமி பெயரில் ஆசிரமம் ஆரம்பிக்கிற உத்தேசமாமா?"

"அதெல்லாமில்லை. ரட்சகன் படத்துல நிறைய சாமியாருங்களும் ஒரு சீனியர் சாமியாரும் முக்கியமா வராப்பல ஸ்கிரிப்டாம்."

"நீ கவலைப்படாதே. உன்னையெல்லாம் கூப்பிடமாட்டாங்க. அவங்க, ஜூனியர் ஆர்ட்டிஸ்ட் அசோஸியேஷன்லேருந்து ஆள் எடுத்துப்பாங்க."

"டேலண்ட் இருக்கிற வெளி ஆளுங்களை விடறதில்லை பார்த்துக்கோ. டாக்டர் ருத்ரன் நடிக்கறார்."

"யாரு, மனநல மருத்துவரா?"

"அவரே. முதல்ல 'ஒரு டீச்சர் மாதிரியான ரோல்'னுதான் சொன்னாங்களாம். செட்டுக்குப் போனப்புறம்தான் சாமியாருங்களுக்கு டீச் பண்ற சீனியர் சாமியார் ரோல் போல இருக்குன்னு தெரிஞ்சது' அப்படின்னு தாடியைத் தடவிட்டே சிரிக்கறார்."

"எப்படிப் பிடிச்சாங்களாம் இவரை? கஷ்மிதாசென் ரெகமண்டேஷனா?"

"இருக்கலாம். கேட்டுச் சொல்றேன். ஆனா ஏற்கெனவே ஒரு சான்ஸ் வந்து மறுத்திருக்கார் ருத்ரன்!"

"எப்போ?"

"நாசர் அவதாரம் எடுத்தாரில்லை? அதுல தாடிவெச்ச கடவுள் வந்து ஆசீர்வாதம் பண்றாப்பல ஒரு சீன் வருதில்லை? அந்த ரோல்ல இவரை நடிக்கக் கூப்பிட்டாராம்."

"அப்ப மறுத்துட்டு இப்ப நடிக்க என்னவாம் காரணம்?"

"அவரையே போய்க் கேட்டுக்கோ. இதைக் கேள். தமிழன் எக்ஸ்பிரஸ் சுதாங்கன், 'மிஸ்டர் தேவராஜ்' படத்துல கலெக்டராக நடிக்கிறார்."

"நிசமாவா?"

"அந்திமந்தாரையில நடிச்சதுக்கு உங்க ஆர்.பி.ஆர். என்ன விமர்சனம் எழுதினான்? 'நடிப்பெல்லாம் ஏன் சார்...'னுதானே? அந்திமந்தாரையில இவர் நடிப்பைப் பார்த்து இம்ப்ரெஸ் ஆகி, ராசி. அழகப்பன் இதுல கலெக்டர் ரோல் குடுத்திருக்கார். ஒரு டான்ஸ் சீன் கூட உண்டுன்னு பேச்சு."

"அப்படிப் போடு. ராசி. அழகப்பன் கமல் கூட இருந்தவர்தானே?"

"ஆமா. முதல் முதலா டைரக்ட் பண்றார். அது இருக்கட்டும். நீ என்னை மன்னிச்சிடுவியா?"

"என்னடா திடீர்னு?"

"சொல்லு. மன்னிச்சேன்னு சொல்லு."

"ஆவட்டும். விஷயத்துக்கு வா."

போன வாரம் உன்கிட்ட சொன்ன ஒரு நியூஸ், மறுநாளே ஷேர் மார்க்கெட் மாதிரி மாறிடுச்சி. உன் ஆபீஸுக்கு ஃபோன் பண்ணலாம்னா, கையில் சேஞ்சா ஒரு ரூபா இல்லை. எல்லாம் ஃபிஃபிடீஸ்."

"இதானே வேணான்றது. போன வாரம் டீக்கு நான் காசு குடுத்தேன்றது ஞாபகம் இருக்கட்டும். விஷயத்தைச் சொல்லு."

"நேதாஜி படத்துல அந்த்ரா மாலி இல்லை. லிஸா ரே."

"ஐயோ, என்னாச்சு?"

"ஐயோ பாவம்னு இரக்கப்பட்டு சான்ஸ் கொடுத்தார் சரத்குமார். இந்தப் பொண்ணுக்கு அதுக்குள்ள ஒரு ஹிந்திப் படம் புக் ஆயிடுச்சா? சொல்லிக்காம பிளைட் ஏறிடுச்சாம்."

"பாருய்யா!"

"அதான்... பயங்கர அப்ஸெட் ஆகி, ஒரு வழியா உத்வேகம் கொண்டு, எழுந்து அடுத்த பிளைட் புடிச்சி பாம்பே போய் லிஸா ரேயை புக் பண்ணிட்டு வந்துட்டாங்க."

"பாம்பேவா, கல்கத்தாவா?"

"ஏன் கேக்கற?"

"லிஸா ரே, சத்யஜித்ரேவோட பொண்ணு தானே?"

"ஐயோ... நீ உருப்படமாட்டே. இது வேறய்யா. பாம்பே டையிங் விளம்பரத்துல வருமே?"

"அது ஏன்யா எல்லாரும் ஹீரோயின் வேணும்னா உடனே பம்பாய்க்கு ஓடறாங்க?"

"காஸ்ட்யூம் செலவு மிச்சமில்லை? இப்பப் பாரு... கார்த்திக்கோட அடுத்தப் படம் 'பூவரசன்' கடைஞ்செடுத்த கிராமத்துக் கதை. அழகுநாச்சியார், அங்காள நாச்சியார்னு ஜமீந்தார் காலத்துக் கேரக்டருங்களெல்லாம் வராங்க. ஹீரோயின்? ரக்ஷனான்னு மும்பாய் பொண்ணுதான்!"

"படம் முச்சூடும் பாவாடை, சட்டையில வரும் போல!"

"அது எப்படியோ... கதை கேட்டா ஒரு மாதிரி ஆயிடுவே. ஜமீந்தாரிணிக்கு உடம்பு சரியில்லாமப் போயிடுது. வருஷக்கணக்கா பூட்டியிருக்கற கோவில்லேருந்து அம்மன் காலடி மண்ணைக் கொண்டு வந்தா, அதுதான் பெஸ்ட் மெடிஸனாம். அதுக்காக ஹீரோ, கோவிலுக்குள்ள புகுந்து, ரகளை ஆயிடுது..."

"சே, என்ன ஒரு பக்திப்படம்! அவசியம் பார்க்கணும் தண்டபாணி!"

"நீ அம்மனுக்காகப் போறவனா, அம்மணிக்காகப் போறவனான்னு எனக்கா தெரியாது? போடா டேய்!

**- கிச்சா**

# மணக்குது! மணக்குது!!

# சாம்பார், ரசம்

உபயோகியுங்கள் ருசி கூட்டு பெருங்காயம் தூள்




Ruchi RUCHI AGRO PRODUCTS PVT. LTD. 50, Giriappa Road, Madras - 600 017
TEL: 8269290, 8269438, 8275048






Ray-Ban SUNGLASSES



உங்களின் ரசனைக்கு ஏற்ப அனைத்து மாடல்
பிரேம்களும் தரம் வாய்ந்த ஹை இன்டெக்ஸ்
சி.ஆர். 39 மற்றும் டாக்டர் பிரிஸ்கிருப்ஷன்
தேவைகளும் செய்து தரப்படும்.

தேர்ச்சி பெற்றவர்களைக்கொண்டு கம்ப்யூட்டர் மூலம் கண் பார்வை பரிசோதனை செய்யப்படும்.

## விஜயா

VOH

ஆப்டிக்கல் ஹவுஸ் A/c.
131/1, பிராட்வே முதல் கடை,
சென்னை – 108. ✆ 583721.



V. ஜெயராமன்
50 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம்
பெற்றவரால் நடத்தப்படுகிறது.

"போட்டிகளுக்கு இடையே ஓங்கி நிற்கும் ஒரு உன்னத ஸ்தாபனம்"

Top Mod Ads

“மே ஐ கம் இன்?” - வேண்டுமென்றே குரலை மாற்றிக் கேட்டாள் சுகன்யா.

ஸ்ரீராமின் அகன்ற முதுகில் அவள் பார்வை பதிந்தது. கண்ணை உறுத்தாத மிருதுவான நீல நிற ஷர்ட். காலரின் மேல் நுனியை இலேசாகத் தலைமுடி மூடியிருந்தது. சலூனுக்குப் போவது முதலான சராசரி சொந்தக் காரியங்களை கவனித்துக் கொள்ள இந்தக் கம்பெனி வேலை அனுமதிப்பதில்லை. ஞாயிற்றுக்கிழமைகளில்கூட கீ போர்டின் முன் உட்கார்ந்து வானத்தை வில்லாக வளைக்கிற திட்டங்கள் தீட்ட வேண்டும்!

அந்த மாதிரி நேரங்களில் இப்படிக் குரல் மாற்றிப் பேசும் விளையாட்டெல்லாம் எடுபடுவதில்லை.

சுகன்யா மீண்டும் குரல் மாற்றிக் கேட்டாள். “நான் உள்ளே வரலாமா?”

“வா... வா... சுகி...” கம்ப்யூட்டர் திரையிலிருந்து கண்ணை எடுக்காமலே இடது கையை மட்டும் உயர்த்தி அழைத்தான் ஸ்ரீராம்.

‘எனவே எங்கள் திட்டத்தை ஏற்று உலகின் நம்பர் ஒன் நிறுவனமாக உயரும் சிறந்த முடிவினை எடுப்பீர்கள் என நம்புகிறோம்...’

இப்படிக்கு.....

கடைசி வரிகளை முடித்து ‘save’ செய்தான் ஸ்ரீராம். ‘saving file’ செய்தியைத் திரையில் உறுதிப் படுத்திக் கொண்டு சுழல் நாற்காலியைத் திருப்பி, நாற்பத்

# உள்ளே வரலாமா? 1



தைந்து டிகிரி கோணத்தில் சுகன்யாவைப் பார்த்தான்.

''எப்படித் தெரியும் நான்தான்னு....?'' அவள் குழந்தைபோல் கேட்டாள்.

''சுகி! நீ கம்யூனிகேஷன்ஸ் எக்ஸ்பர்ட்டாய் இருக்கலாம். ஆனா சில சுடுகான விஷயங் களில் கோட்டை விட்டுடறே... ஞாயிற்றுக் கிழமைல உன்னையும் என்னையும் தவிர வேற யார் இந்த ஆபீசுக்கு வருவாங்க? மேலும்....''

ஸ்ரீராம் நிறுத்தினான்.

''மேலும்....?''

- கேட்பவளின் குரலில் சின்ன நடுக்கம். அதை ஸ்ரீராம் கவனித்துப் பதிவு செய்து கொண்ட கணத்தில் டெலிபோன் ஒலித்தது.

சுகன்யா மின்னல் வேகத்தில் கார்ட்லெஸ் செட்டின் ரிசீவரை எடுத்து அவனிடம் நீட்டினாள்.



# சுஜாதா ?

''குட் மார்னிங் ஸர்....''

''..............................''

''ரிப்போர்ட்டை முடிச்சுட்டேன். ஆமாம். சுகி வந்திருக்கா ஸர். ஷி வில் டச் இட் அப். அஞ்சு மணிக்குள்ளே உங்க வீட்லே கொண்டு வந்து கொடுத்துடுவோம்!''

''..................................''

''இல்ல ஸர். நான் சுகன்யாவை டிராப் பண்ணிடுவேன். தெரியும். ஹாஸ்டல் ரூல்ஸ் படி அவ ஏழு மணிக்குள்ள திரும்பியாகணும். கவலைப்படாதீங்க. நான் பார்த்துக்கறேன்....''

மறு முனையில் ராஜு பேசுவதைப் புரிந்து கொண்டாள் சுகன்யா. கம்பெனி எம்.டி. சில

**“ 'டேய் ஸ்ரீராமா! உங்கப்பா ரொம்ப ஆர்தடாக்ஸ் ஆசாமியாச்சே. இந்தப் பொண்ணை உங்க குடும்பத்துல எப்பிடி ஏத்துக்குவாங்க? ”**

கணங்கள் மௌனமாக ரிசீவரைக் காதில் வைத்திருந்த ஸ்ரீராம், குப்பென்று முகம் சிவப்பதைப் பார்த்தான். அவன் காது நுனி வரை அந்தச் சிவப்பு படர்ந்து அடங்குவதை ரசித்தான்.

''தேங்க்யூ ஸர்... '' ஸ்ரீராம் போனை ஆஃப் செய்தான்.

''என்ன சொல்றார் எம்.டி? ரிசீவரை வாங்கியபடி கேட்டாள்.

''ஹூம். சொல்றார் சுரைக்காய்க்கு உப்பில் லைன்னு....''

''சுரைக்காய்? அப்பிடின்னா என்ன ஸ்ரீராம்?''

''அப்பிடின்னா

26 வாரங்கள் நீடிக்கவுள்ள இத்தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொருவர் பெயரில் வெளியாகும். உண்மையில் எழுதுபவர் யார்? கண்டுபிடியுங்கள்! தங்க நகைப் பரிசு! மேலும் விவரங்கள் அடுத்த வாரம்.

என்னன்னு எம்.டி. வீட்டுக்கு நீலாங்கரை வரை யாத்திரை போகும்போது சொல்றேன். இப்ப நீ வேலையை ஆரம்பி...." என்று எழுந்தான்.

"யெஸ் பாஸ்!" - அவன் விட்டெழுந்த நாற்காலியில் உட்கார்ந்தாள். அதில் மிச்சமிருந்த அவன் உடல் சூடு இதமாகக் கனிந்தது. சுதாரித்துக்கொண்டு கம்ப்யூட்டரில் அவன் தயாரித்து வைத்திருந்த அறிக்கையை 'அழைத்தாள்.'

திரையில் ஓடிய வார்த்தைகளைக் கண்கள் படித்தன. உறுத்தலான இலக்கணத்தையும் நெருடலான மொழியாட்சியையும் புருவங்கள் நெரித்துக் திருத்திக் கொண்டே வந்தாள்.

ஸ்ரீராம் மரியாதையான தூரத்தில் நின்று கைகட்டிப் பார்த்தான்.

கீ போர்டில் பறந்த சுகியின் விரல்கள், நகப்பூச்சு இன்றியே பளபளத்தன. நீண்டு எழுந்த கரங்கள் தோள்களின் வெள்ளை ஸ்லீவ்லெஸ் ரவிக்கையில் போய் முடிந்தன. விரித்துவிட்ட தலைமுடி முதுகை மூடியிருந்தது. வெள்ளையும் சிவப்பும் இழையோடிய கைத்தறிப்புடைவை. டிரேட் மார்க் போல் சற்று பெரிய சைஸில் நெற்றிப் பொட்டு. நேர்மையான கண்கள், போலியாய்ப் படபடக்காத இமைகள், அழகான மூக்கின் கீழ் அளவான உதடுகள்...

'இது ஆபீஸ்... இது ஆபீஸ்....' என்று எச்சரித்த அவன் அறிவை உணர்வு மிஞ்சிக் கொண்டிருந்தது. ஸ்ரீராம் அகன்று போய்த் தன் மேஜையருகே அமர்ந்தான். சுகி முதன் முதலில் வேலைக்குச் சேர்ந்த நாள் ஞாபகம் வந்தது. ராஜுதான் அறிமுகப்படுத்தினார்.

"ஸ்ரீராம்! மீட் சுகன்யா...."

"ஹாய்! கால் மீ சுகி." என்று கை நீட்டினாள். தன் மிரட்சியை மறைத்துக் கொண்டு முதல் முறையாக ஓர் அன்னியப் பெண்ணிடம் கை குலுக்கினான். சலனமின்றிப் பற்றி, அழுத்திக் குலுக்கினான் அவன்.

"சுகன்யா நம்ம ஆபீசுக்கு இனி கம்யூனிகேஷன்ஸ் மானேஜர். கல்கத்தாவிலே முகர்ஜி சொன்ன பொண்ணு... ரிப்போர்ட் தயாரிக்கிறப்போ நீயும் நானும் சேர்ந்து பண்ற ஸ்பெல்லிங் பாவங்களையும் இலக்கணப் பாதகங்களையும் திருத்தி நல்ல 'பாகேஜிங்' கொடுத்து நம்மளைக் கரையேத்தப் போறவ... குவாலிட்டி நம்ம ஸாஃப்ட்வேரில் மட்டும் இருந்தாப் போறாதே! நம்ம அறிக்கைகள், கடிதங்கள் எல்லாத்துலயும் வேணும். அதுக்காகத்தான் சுகன்யா."

"ரொம்ப மகிழ்ச்சி ஸர்..." ஸ்ரீராம் நிஜமான சந்தோஷத்துடன் சொன்னான். அப்படியொரு ஆள் தேவையாகத்தான் இருந்தது.

## அருள்வாக்கு

**நடைமுறையில் செய்துகாட்டி நல்லதை விளைவிக்கும் ஒழுங்குமுறைதான் தர்மம் என்பது. இந்த நடைமுறைக்கு ஆதார தத்வமாக ஒரு அடிப்படை இருக்க வேண்டும். ஒரு ஒழுங்கு என்றால் அது அப்படிப்பட்ட ஒழுங்கிலே இருக்கிறது என்பதை உணர்த்துவதாக ஒரு அடிப்படை உண்மை இருக்க வேண்டும். தீபாலங்காரம் செய்யும்போது வட்டமாக, சதுரமாக, கோணமாகப் பல வரிசைகளில் தீபங்களை வைத்தால் அந்த ஒழுங்கிலே மனஸுக்கு ஒரு நிறைவு தெரிகிறது. ஏதோ ஒரு ஒழுங்கிலே வளைத்தும் நீட்டியும் கோலம் போட்டிருந்தால் அதைப்**

சுகன்யா வெகு இயல்பாக அலுவலகப் பணிகளில் பொருந்திக் கொண்டாள். ஸ்ரீராம் தவிர மற்ற இரண்டு சீனியர் மானேஜர்களுடனும் அதே போல் கைகுலுக்கி பயமுறுத்தினாள். கமா, ஃபுல்ஸ்டாப் வரை அவர்களது அறிக்கைகளைச் சீர் செய்து பொலிவேற்றி அசத்தினாள். அவை ஏற்கப்பட்டு ஆர்டர்களை வென்று தந்ததும் மீண்டும் கை குலுக்கி ஆரவாரம் பண்ணினாள்.

'தங்கள் இருவருக்குமே சலனம் ஆரம்பித்தது எந்தக் கை குலுக்கலின்போது?' யோசித்துப் பார்த்தான் ஸ்ரீராம். புலப்படவில்லை. சிந்தனைகளைத் துடைத்தெறிந்து விட்டுக் கண் மூடி அமைதியை அனுபவித்தான்.

"ராம்." சுகன்யா அழைத்தபோது அரை மணி நேரம் கடந்துவிட்டிருந்தது.

'ப்ரிண்ட்' கொடுத்துவிட்டதற்கறிகுறியாக லேஸர் ஜெட் விளக்கு கண்சிமிட்டிக் கொண்டிருந்தது.

"முடிச்சுட்டேன்." மென்மையாகச் சிரித்தபடி சொன்னாள்.

அலுவலக வளாகத்தைக் கடப்பதற்காகவே காத்திருந்தவன்போல் அவசரமாக சுகன்யாவின் கையைப் பற்றிக் கொண்டான் ஸ்ரீராம். ஒரு கையால் ஸ்டீயரிங் பிடித்து ஞாயிற்றுக்கிழமை போக்குவரத்தைச் சுலபமாகச் சமாளிக்க முடிந்தது.

"மே ஐ ஹோல்ட் யுவர் ஹாண்ட்...?" சுகன்யா அவனைப்போல் குரல் மாற்றிப் பேசிக் கேலி செய்தாள்.

"கை பிடிக்கவே அனுமதி கேட்ட முதல் ஆள் நீயாகத்தான் இருக்கும் ஸ்ரீராம்!"



பார்க்கிறபோது ஒரு ஸந்தோஷம். எதுவோ ஒன்று ரொம்ப ஸரியாயிருக்கிறது என்ற ரஸிப்பு உண்டாகிறது. வட்டமோ, சதுரமோ வளைவோ, கோணமோ கொஞ்சம் கோணலாக இருந்தால் மனஸுக்கு என்னமோபோல் இருக்கிறது. எதனாலென்றால் இந்த வெளி ஒழுங்குகளுக்கு ஆதாரமாக ஏதோ ஒரு உள்ளத்துக்குள்ளே அந்த தத்வத்தைப் பற்றி நமக்குத் தெரியாமலே ஒரு ஞானம் இருக்கிறது. எனவே அதற்கு இது– வெளியிலே ஒழுங்கு செய்திருப்பது– ஒத்துப் போகிறபோது மனஸில் நிறைவு உண்டாகிறது.

இதே மாதிரி சுத்தமான அந்தகரணமுள்ள ரிஷிகள் முதலான மஹான்களுக்கு உள்ளுக்குள்ளே ஸ்வச்சமாகத் தெரிந்த ஒரு அடிப்படைக்கு ஒத்துப் போவதாக வெளியிலே பின்பற்ற வேண்டிய அநேக ஒழுங்குகளைத் தான் ஒழுக்கம் என்று வைத்து தர்ம வாழ்க்கையை அமைத்திருக்கிறது.

இதற்கு அடிப்படையாய் உள்ளே ஒரு தத்வம் இருக்கிறது என்றேனே, அது என்னவென்றால், அதுதான் 'ஸத்யம்' என்பது. நம்முடைய வெளி அறிவுக்கும் புரிகிறமாதிரி இந்த ஸத்யத்தை எடுத்துச் சொல்பவையே வேத, உபநிஷத, சாஸ்த்ரங்கள்.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.**

"தாங்க்யூ சுகி..."

"எதுக்கு?"

"அன்னிக்கு முதன்முதலா நான் கேட்டப்போ அனுமதி கொடுத்ததுக்கு...."

ஆமாம்! நீ மட்டும் என்ன....? 'மே ஐ கம் இன்? உள்ளே வரலாமா....?' ரொம்ப மரியாதையாய்க் கேட்டியே..."

"ஐயோ அது சும்மா... குரல் மாத்தினா நீ கண்டுபிடிக்கறியான்னு பார்க்க... அது சரி... எப்படிக் கண்டுபிடிச்சே...? நீ ஏதோ சொல்ல ஆரம்பிச்சப்போ எம்.டி. போன் பண்ணிட்டார்."

"அது சுலபம். நீ வரும்போதே காத்துல ஒரு கூடுதல் வாசனை சேர்ந்து வந்து காட்டிக் குடுத்துடும்."

"போருமே?"

ஸ்ரீராமின் கைப்பிடி இறுகியது.

"இப்படி என் கையை நொறுக்கினா நாளைக்கு லீவு போட வேண்டியதுதான்!"

"ஐயோ வேண்டாம்மா! ஏற்கனவே எம்.டி. என்னை 'ஜாக்கிரதை..... ஜாக்கிரதை'ன்னு எச்சரிக்கை பண்ணியிருக்கார். உன்னை நேரத்தோட ஹாஸ்டல்ல கொண்டு விடணும்னு உத்தரவு வேற..."

"அப்புறம் என்ன சொன்னார் போன்ல? ஏன் உன் மூஞ்சி அப்படிக் குங்குமத்தைக் கொட்டினாப்பல ஆச்சு?"

"சொல்லியாகணுமா?"

"ஆமாம்..."

"சொல்லாட்டா?"

"இப்ப என் கையை விட்டுடணும்." கையை விடுவித்துக் கொள்வது போல் இழுத்தாள்.

"இரு இரு. சொல்லிடறேன். சொல்லிடறேன்....'டேய் ஸ்ரீராமா! உங்கப்பா ரொம்ப ஆர்தடாக்ஸ் ஆசாமியாச்சே. இந்தப் பொண்ணை உங்க குடும்பத்துல எப்பிடி ஏத்துக்குவாங்க? உனக்குச் சுலபமா எல்லாம் நடக்க வாழ்த்துக்கள்; என் பிரார்த்தனைகள்'னாரு...."

"என் பெங்காலி அம்மா என்னை மீனூட்டி வளர்த்திருந்தாலும் உங்களுக்காக நான் சைவத்துக்கு மாறிட்டேன்னு சொல்றது தானே அவர்கிட்டே?"

"சுகன்யா, விஷயம் அவ்வளவு எளிமையா முடிஞ்சுடாது. அதனாலதான் அப்பாகிட்டே பேசறதுக்கு முன்னாடி வசந்தி கல்யாணம் ஆகட்டும்னு காத்திருக்கேன்."

"அப்போ வசந்தியோட கல்யாணத்துக்கு நான் வரமுடியாது இல்லை....?"

அவள் குரலில் ஒலித்த மெய்யான ஏமாற்றம் ஸ்ரீராமை நெகிழ்த்தியது.

"வரலாம். விருந்தாளியா...."

"இல்லை... நான் வருங்கால அண்ணியாத் தான் வருவேன். அப்பிடி என்ன பயம், நம்ம விஷயத்தைச் சொல்றதுக்கு?"

"பயமில்லை சுகி. இது வேற... நேரம் கனிஞ்சு வரணும். வசந்தியோட கல்யாணம் முடிஞ்சுட்டா பேசறதும் கன்வின்ஸ் பண்றதும் கொஞ்சம் சுலபமாகும்."

சுகன்யா பெருமூச்சு விட்டாள். "எனக்கு ஹாஸ்டல் வாழ்க்கை அலுத்துப் போச்சு ஸ்ரீராம். பதிமூணு வயசுலேந்து பத்து வருஷ காலம் அப்பா, அம்மா இல்லாம சொந்தக்காரங்க இடம் இடமாய்ப் பந்தாடினாங்க. அதுக்கப்புறமா இப்ப ஹாஸ்டல். அரைமணி நேரம் லேட் ஆனா யார் கூடவோ படுத்துக்கிட்டு வந்தா மாதிரி பார்க்கறாங்க..."


ஸ்ரீராம் தன் இடக்கரத்தை விடுவித்து அவள் வாயைப் பொத்தினான். "இந்த மாதிரி



"ராத்திரி எங்க வீட்டுக்கு வர்றதா திருடன் ஃபோன் பண்ணி சொல்லியிருக்கான்!"

"எங்களுக்குத் தெரியாம எப்படி...? இதில ஏதோ திருட்டுத்தனம் நடக்குதுன்னு நினைக்கிறேன்!"

- தேனி எஸ். மாரியப்பன்



"ஒரு ஜட்ஜைக் காதலிச்சது தப்பாப் போச்சு."

"ஏன்?"

"கல்யாணத் தேதியை இதுவரை ஏழு முறை தள்ளிப் போட்டுட்டார்!"

- வெ. ராஜாராமன்

ஓவர்-ரியாக்ட் பண்ணாதே! ஐ பிராமிஸ்– இன்னும் ஒரு வருஷத்தில் நம்ம கல்யாணம்- வசந்திக்குக் கல்யாணம் ஆனாலும் ஆகாவிட்டாலும்."

நீலாங்கரையில் எம்.டி.வீட்டு கேட்டை எட்டியிருந்தார்கள். ரிப்போர்ட் அடங்கிய பிரவுன் கவரை எடுத்துக் கொண்டு சுகன்யா உள்ளே போனாள். ஸ்ரீராம் காரைத் திருப்பித் தயாராய் நிறுத்திக் கொண்டான்.

ராஜு" வெளியே வந்து "be good" என்று எச்சரித்து வழியனுப்பினார். அவர் வீட்டு கேட்டைக் கடந்ததும் ஸ்ரீராம் எரிச்சலுடன் ஆக்ஸிலேட்டரை மிதித்தான்.

"நம்பிக்கை அடிப்படையில் எந்த உறவும் அமையறதில்லை பார்த்தியா...? உன் ஹாஸ்டல்காரங்க மாதிரி தான் இவரும் பேசறார்..."

"அவர் தமாஷுக்குச் சொன்னதுக்கே உனக்கு இவ்வளவு கோபம் வருதே... எங்க ஹாஸ்டல்லே நிஜமாகவே சந்தேகப்படறாங்க ஸ்ரீராம்..."

"நல்ல காலம் கிகி... நம்ம உறவு நம்பிக்கை அடிப்படையில் ஆரம்பிச்சு அப்படியே தொடர்ந்து கிட்டிருக்கு..." திரும்பவும் அவள் கையைப் பிடித்துக் கொண்டான்.

அவள் மெள்ள அதை விடுவித்துக் கொண்டு ஸ்டீரியோவுக்குள் ஒரு காஸெட்டை நுழைத்தாள். ஆன் செய்தாள்.

"என்னவளே அடி என்னவளே' - உன்னி கிருஷ்ணனின் சர்க்கரைக் கரைசல் குரல் மிதமான வால்யூமில் வெளிப்பட்டது.

"இந்தப் பாட்டுல வார்த்தையைக் கவனிச்சியா? 'கழுத்துவரை காதல் வந்து இரு கண் விழி பிதுங்கி நின்றேன்...' ரொம்ப ரம்யமான ட்யூன்ல இப்படிக் குரூரமான வர்ணனை..."

"விடு! சினிமாப் பாட்டுல கலீல் கிப்ரான் மாதிரி 'Let there be spaces in your togetherness'ன்னு உபதேசமா பண்ணுவாங்க...?"

"அதென்னவோ எனக்குத் தெரியாது. இப்போ நமக்குள்ளே இவ்வளவு இடைவெளி இருக்கணுமா?" சுகன்யாவின் குரலில் அந்தப் பழைய சின்ன நடுக்கம்.

ஸ்ரீராம் ஒரு கணம் அவளைத் திரும்பிப் பார்த்தான். இமைகள் தாழ்த்தியிருந்தாள். இடது கரத்தால் அவள் தோளை வளைத்து இழுத்து நெருக்கமாய் அமர்த்திக் கொண்டான்.

அவன் தோளில் தலை சாய்த்துக் கண்களை இறுக்கி மூடிக்கொண்டாள் சுகன்யா.

"முக்கியமான விஷயத்துக்கு நீ இன்னும் விளக்கம் தரலை ஸ்ரீராம்..." காதுக்கு வெகு அருகே பேசினாள்.

"என்ன?"

"அதான். அந்த உப்பில்லாத காய்... அது என்ன... சுரைக்காயா? கரக்..."

"அதெல்லாம் இப்ப வேண்டாம்."

"பின்ன எது வேணும்?"

ஸ்ரீராம் பதில் சொல்லவில்லை. பின்னால் வழி கேட்டு ஒரு டூரிஸ்ட் பஸ் உயிரெடுத்தது. சாலையின் இடப்புறமாக ஒதுங்கி வேகம் தணித்தான்.

"ஹோ"வென்று அவர்களைக் கேலி செய்தபடி கடந்தனர் கல்லூரி மாணவிகள். அவர்களிடையே அமைதியாய் அமர்ந்து வந்த வசந்தியின் கண்கள் மட்டும் அகலமாய் விரிந்தன. அவளது பலவீனமான நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொண்டது. தொண்டையில் துக்கம் வந்து பந்து பந்தாக அடைத்தது.

(தொடரும்)

# TAMILNAD HOSPITAL LIMITED


Cheran Nagar (Off Velachery - Tambaram Road), Madras 601 302.
Fax : 2375229. Telex : 041-26053 TNH IN.

NRI PROMOTED HOSPITAL

# CANCER SURVIVAL CENTRE

Call 2375221, 2377707

for the following facilities



## • EARLY CANCER DETECTION

1. Complete physical examination
2. Pap smear (for women)
3. Chest X-ray
4. Mammogram (for women)
5. Stool for occult blood
6. Proctosigmoidoscopy
7. Blood tests: CBC, Hepatitis B Antigen, Hepatitis C Antibody
8. Ultrasound examination of abdomen
9. E.N.T. examination
10. Gynecologic examination (for women)
11. Upper Gastro-intestinal Endoscopy

## • CANCER DIAGNOSTIC PROCEDURES

1. Tumour Makers (CEA, beta HCG, CA 19-9, CA-125, CA 72-4, Alpha Feto)
2. Gamma Camera (Bone scan, Liver scan)
3. Estrogen Receptor
4. Rhino Pharyngo Laryngoscopy
5. ERCP
6. C.T. Guided Biopsy-Brain Lesions
7. C.T. Guided Stereotaxic Biopsy
8. Bone Marrow Biospy
9. Prostate Specific Antigen Test
10. Colonoscopy, Colposcopy, Laryngoscopy
11. Sinus Endoscopy

## • TREATMENT FACILITIES

1. Chemotherapy
2. Immunotherapy
3. Linear Accelerator with simulator
4. Cobalt Teletherapy
5. Brachytherapy - HDR
6. Treatment Planning System
7. Electron therapy
8. Styroform Block Cutting
9. Debulking & Radical-surgery
10. Psychology help and counselling
11. Nutritional support and counselling


## • SPECIALITIES AVAILABLE


1. Surgical Oncology
2. Medical Oncology
3. Radiation Oncology
4. Nuclear Oncology

## QUALITY ASSURANCE PROGRAMME

Tumour Board

**Early detection is the only way to fight cancer**


GENTLEMAN
K.T.KUNJUMON
PRESENTS
GENTLEMAN
FILM INTERNATIONAL
உலகமெங்கும்
ஆகஸ்ட் வெளியீடு!
என்னை வாழவைத்துக் கொண்டிருக்கும்
தமிழ் ரசிகப் பெருமக்களுக்கு இதயங்கனிந்த
வணக்கங்கள்.
தரமான வெற்றிப்படங்களை தந்து கொண்டிருக்கும்
எங்கள் நிறுவனத்தின் மற்றுமொரு
பிரம்மாண்டமான தயாரிப்பு,
காதல் தேசம்!
கோடான கோடி ரூபாய் செலவில்,
ஹாலிவுட் பாணியில் செட்டுக்கள் போட்டு,
A.R. ரகுமானின் வண்ண இசையில்,
ஒரு உன்னத லவ் ஸ்டோரியை திரைப்படமாகத்
தயாரித்து தமிழ் ரசிகப் பெருமக்களுக்கு
சமர்ப்பிக்கிறேன்.
- என்றும் நன்றியுடன்
GENTLEMAN
K.T.KUNJUMON
தேவி 70MM A/C DOLBY STEREO
அபிராமி 70MM A/C DOLBY STEREO
உதயம் A/C
அகஸ்தியா 70MM DOLBY STEREO
DON'T WORRY BE HAPPY
காதல் தேசம்
DOLBY STEREO
வாலி / லெனின் V.T. விஜயன் / தோட்டா தரணி / விக்ரம் தர்மா
கதிர்
A.R.ரகுமான்
K.V.ஆனந்த்






1996 ஆகஸ்ட் 4
தாது ஆடி 20
மலர் : 55
இதழ் : 1

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



# பயந்து பயந்து ஒரு பட்ஜெட்!

திருக்குறள் என்ன, உருது கவிதைகள் என்ன... என்று நிதியமைச்சர் ப. சிதம்பரத்தின் பட்ஜெட் அறிக்கை, கவிநயத்துடனும் கம்பீரத்துடனும் வாசிக்கப்பட்டதை ஒருவர் விடாமல் பாராட்டியிருக்கிறார்கள். நாமும் பாராட்டலாம்.

ஆனால், வாசிப்பில் இருந்த கம்பீரம் பட்ஜெட்டில் இருக்கிறதா என்றால், ஸாரி! ரொம்ப ஸாரி!


ஐக்கிய முன்னணி அரசின் பொதுச் செயல் திட்டத்தை (Common Minimum Programme) மிகவும் சிலாகித்து, அதன் அடிப்படையில்த ன் பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லியிருக்கிறார் சிதம்பரம். அந்த செயல் திட்டமே ஒட்டாத கொள்கைகளை ஒட்டவைக்கும் முயற்சிதான் என்னும்போது, அதன் அடிப்படையில் வகுக்கப்பட்ட பட்ஜெட் மட்டும் பிரமாதமாக இருந்துவிட முடியுமா?

*இயற்றலும் ஈட்டலும் காத்தலுங் காத்த*
*வகுத்தலும் வல்லது அரசு*

என்று திருக்குறளை மேற்கோள்காட்டி பட்ஜெட் உரையை முடித்த நிதியமைச்சர், நிதியை 'இயற்றவும் ஈட்டவும்' செய்துள்ள முயற்சிகளோ, புதுத்தியுள்ள மாற்றங்களோ குறிப்பிடும்படி இல்லை.

அவ்வாறு இல்லாத நிலையில், சமுதாய நலத்திட்டங்களுக்கும் மாநிலங்களுக்கும் மட்டும் நிறைய தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் நலன் கருதி, டிராக்டர் மற்றும் உரங்களின் மீதான மானியம் உயர்த்தப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு இன்னும் அதிகமாகவும் சுலபமாகவும் கடன்கள் கிடைக்க வழிசெய்யப்பட்டுள்ளது. உணவு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய இந்த முயற்சிகளை வரவேற்கலாம்.



ஆனால், இதற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் மூலம் முழுப் பலன் பெற வேண்டுமானால், விளைச்சல் சிறப்பாக இருக்க வேண்டும். நம் நாட்டு விவசாயமோ பரம்பரை பரம்பரையாகப் பருவ மழையை நம்பியே நடந்து வருகிறது. உபரி நீர் சேமிப்புக்கும் நீர் வளத்தை முறையாகப் பயன்படுத்துவதற்கும் இதுவரை எவ்வித கவனமும் செலுத்தப்படவில்லை.

இதை உணர்ந்து, பாசன நீர் சேமிப்பு, சாலை அபிவிருத்தி, மின் உற்பத்தி போன்ற வேறு பல அடிப்படை வசதிகளையும் பெருக்குவதற்கென்று, **Infrastructure Development Finance Corporation** (அடிப்படை வசதிகள் அபிவிருத்திக்கான நிதி கார்ப்பரேஷன்) என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட விருப்பதையும் வரவேற்கலாம்.


சமையல் எண்ணெய், டூத் பேஸ்ட், சலவை சோப்பு போன்றவற்றின் மீதான தீர்வையும் டிவி பிக்சர் ட்யூப்களுக்கான சுங்க வரியும் குறைக்கப்பட்டுள்ளன. ஆனால் இதன் பலன் நுகர்வோரைச் சென்றடையுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க முடியும்.

கம்பெனிகளுக்குக் குறைந்தபட்ச அடிப்படை வரி (**MAT** என்னும் **Minimum Alternative tax**) விதிக்கப்பட்டிருப்பதை, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் எதிர்த்தாலும், அந்த வரி விதிப்பில் ஒரு நியாயம் இருப்பதால் வரவேற்கலாம்.

வரவுக்கும் செலவுக்கும் இடையேயான இடைவெளி ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே வருவதை அறிவோம். இவ்வாண்டில் எதிர்பார்க்கப்படும் வரவு 1,30,345 கோடி ரூபாய். திட்டமிடப் பட்டுள்ள செலவோ, 1,61,820 கோடி ரூபாய்! ஆக, பற்றாக்குறை 31,475 கோடி! (இது மொத்த செலவில் இருபது சதவிகிதம்) இந்தப் பற்றாக்குறை தொகை முழுதும் கடன் வாங்கப்பட்டு சராசரி இந்தியனின் தலைச் சுமையாகப் போகிறது!

இந்த நிதிப் பற்றாக்குறையைப் படிப்படியாகக் குறைக்க ஒரே வழி உற்பத்திப் பெருக்கம்தான்.

உற்பத்திப் பெருக்கம் என்பது தொழில் வளத்தினால்தான் சாத்தியமாகும். தொழில்வளம் பெருகவோ, மூலதனம் அதிகரிக்க வேண்டும். மூலதனத்தைப் பொது மக்களிடமிருந்தே பெற முடியும். ஆனால்,




சேமிக்கவும் முதலீடு செய்யவும் நடுத்தர வர்க்கத்தினருக்கு எவ்வித ஊக்கமோ, சலுகையோ இந்த பட்ஜெட்டில் காட்டப்படவில்லை!

மாறாக, பெட்ரோல், டீசல், மற்றும் ரயில் கட்டணங்கள் உயர்த்தப்பட்டதன் மூலம் நடுத்தர வர்க்கத்தினரை ஏற்கெனவே கசக்கிப் பிழிந்து விட்டார் நிதியமைச்சர். இந்த பட்ஜெட்டிலாவது சற்று மூச்சு விடும்படி சலுகைகள் கிடைக்குமென எதிர்பார்த்தவர்களுக்கு மிகச் சொற்பமான வருமானவரிச் சலுகைகள் மட்டும் தந்து ஏமாற்றத்தையே ஏற்படுத்தியிருக்கிறார்.

தொழிற்பெருக்கத்துக்கான மூலதனத்தை அயல்நாட்டு முதலீட்டாளர்கள் மூலமும் பெறலாம். ஆனால் நிதியைப் பெறுவதற்கு முன் அந்த முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெற்றாக வேண்டும். 'பத்து பில்லியன் அமெரிக்க டாலர், (35,000 கோடி ரூபாய்) வெளிநாட்டவரிடமிருந்து முதலீடாகப் பெறுவோம் என்று அறிவித்திருக்கும் சிதம்பரம், அயல்நாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெற்று, அவர்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை!

பற்றாக்குறை நிலையைச் சமாளிக்க, இந்தியாவில் அரசாங்க செலவினங்கள் குறைக்கப்பட்டதாக வரலாறே இல்லை! அதனால், இந்த பட்ஜெட்டிலும் அது குறித்து ஆராய மேலும் ஒரு கமிட்டி போட்டதற்கு அதிகமாக எவ்வித முயற்சியும் எடுக்கப்படாதது குறித்து நாம் வருந்திப் பயனில்லை. ஆனால், எம்.பிக்களின் தொகுதி அபிவிருத்திக்கென அளிக்கப்பட்டு வந்த ஒரு கோடி ரூபாய், மேலும் உயர்த்தப் படும் என்னும் அறிவிப்பு, வருத்தத்துடன் அதிர்ச்சியையும் அளிக்கிறது. இந்த ஒதுக்கீடு எவ்வளவு வியர்த்தமானது என்பது தெரிந்தும் இம்முடிவு எடுக்கப்பட்டிருப்பதானது நிதியமைச்சருக்கு இருக்கின்ற அரசியல் நெருக்கடிகளையே அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இந்த ஒரு விஷயத்தில் மட்டுமின்றி, அன்னிய முதலீட்டாளர்கள், சமுதாய நலத் திட்டங்கள், வருமான வரி மாற்றங்கள் எனப் பல்வேறு விஷயங்களிலும் சிதம்பரம் அரசியல் கட்டாயங்கள் காரணமாக பயந்து, பயந்து செயல்பட்டிருக்கிறார்.

ஆட்சியின் ஸ்திரமின்மை, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எப்படி முட்டுக்கட்டையாகிறது என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் இந்த பட்ஜெட்!

அகில இந்திய ரேடியோ இருக்கும் திக்கு நோக்கி ஒரு கும்பிடு! சுவாரஸ்யமான நிகழ்ச்சிகளைத் தயாரித்து, ஒலிபரப்பி, கர்நாடக சங்கீதத்தைப் பிரபலப்படுத்த அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளுக்கு இணையாக இன்னொன்றைக் கூற முடியாது. சமீபத்தில் இடம்பெற்ற, முத்தையா பாகவதர் பற்றிய சிறப்பு நிகழ்ச்சி அத்தகைய ஒன்று.

இசை ஞானத்துடன் ராக லட்சணங்களை உணர்ந்து, அதற்கேற்ப பாடலும் இயற்றுவோரை 'வாக்கேயக்காரர்கள்' என்கிறோம். இறையுணர்வு இன்றியமையாத விஷயம் - கூறத் தேவையில்லை. அத்தகைய ஒருவரான ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதருடைய பன்மொழிப் புலமை, அபூர்வ ராகங்களாக இருந்த பலவற்றை அவர் பிரபலப்படுத்தியவிதம் முதலியவற்றை இன்றைய முன்னணி இளம் வித்வான்கள் பலரது ஒத்துழைப்புடன் அற்புதமாக வெளிப்படுத்தியது அந்த வானொலி நிகழ்ச்சி.

முத்தையா பாகவதரின் கீர்த்தனைகளை இளைஞர்கள் உற்சாகமாகப் பாடக் கேட்கக் கேட்க, கூடவே மதுரை மணி அய்யரின் நினைவும் வந்து கொண்டே இருந்தது! குறிப்பாக ஜாலந்தர (வலஜி), விஜயாம்பிகே (விஜயநாகரி) ஆகியவற்றைக் கேட்டபோது, 'முத்தையா பாகவதரின் சீடரான மணி அய்யரின் கச்சேரிகளை நேருக்கு நேர் கேட்கக் கொடுத்து வைத்திருந்ததே நமக்கு' என்ற எண்ணம் தோன்றியபடி இருந்தது.

அப்படி நேரடியாகக் கேட்கக்கூடிய வாய்ப்பில்லாத இளம் தலைமுறையினருக்காகவே அ.இ.ரே. இன்னொரு நல்ல காரியத்தையும் செய்கிறது. பழம்பெரும் வித்வான்களின் கச்சேரிகளை அவ்வப்போது ஆவணக் காப்பகத்திலிருந்து கொண்டுவந்து தூசு தட்டி ஒலி பரப்புகிறது. அவ்வாறு சமீபத்தில் ஒலிபரப்பான ஒரு கச்சேரி மதுரை மணி அய்யருடையது. ஒரு மணி நேரத்தில் 20 நிமிஷம் வாசஸ்பதி; 40 நிமிஷம் சாருகேசி! ஆனால் அந்த சாருகேசியை 40 நிமிஷம் என்ன, நானூறு நிமிஷமும் அதற்கு மேலும் கூடக் கேட்டுக் கொண்டே இருக்கலாம் - மணி அய்யர் பாடினால்!

• முத்தையா பாகவதர்



• படம் - நன்றி: சுருதி

'ஆடமோடி கலதே' என்ற அந்த சாருகேசி ராகக் கீர்த்தனையில், 'ஸ்ரீ ராமபிரான் தன்னுடன் பேசாமல் பிகு பண்ணிக் கொள்கிறாரே' என்று தியாகையர் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார். மெலிதான நகைச்சுவை இழையோடும் பாடல் அது. நமக்கோ 'அப்படி ஸ்ரீராமர் பிகு பண்ணிக் கொண்டதே நல்லதாயிற்று; அதனால்தானே இப்படி ஒரு அற்புதமான பாடலை தியாகையர் உருவாக்க, அதை மதுரை மணி அய்யர் சாவகாசமாகப் பாட, மெய்மறந்து கேட்கும் பாக்கியம் நமக்குக் கிட்டியது' என்று தோன்றும்!

மணி அய்யருடைய பாணியை இன்றைக்கும் நமக்கு வழங்கிக் கொண்டு, அதே சமயம் தமது தனித் தன்மைகளையும் புகுத்தி, தமக்கென்று ஒரு நிரந்தர இடத்தை இன்று கர்நாடக இசை உலகிலே பெற்று விட்டிருப்பவர் டி.வி. சங்கரநாராயணன். மணி அய்யருடைய மருமான்; மணி அய்யரின் பிரதம சீடரான வேம்பு அய்யரின் மகன்.

முத்தையா பாகவதரில் ஆரம்பித்து, குரு சிஷ்ய பாரம்பரியம் எப்படி வருகிறது பாருங்கள்! இந்த சங்கதிகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு, "படிக்கிற காலத்துல அந்த அமைச்சர் டி.வி.எஸ்.ஸை அவரது சங்கீதத்துக்காக மட்டுமே எடைபோட்டாலும் துலாபாரக் கதையாகத்தான் முடியும்! அவரு

• சங்கர நாராயணன்
(கார்ட்டூன்-கேஷவ்/நன்றி: ஹிந்து)



**கி. ராஜேந்திரன்**



மணி அய்யர் கச்சேரியில்... உடன் பாடுபவர் வேம்பு அய்யர்; தம்புரா போடுபவர் -டி.வி.எஸ்!

டைய சங்கீதத்துக்கு இணையாக அவருடைய ரசிகர்களின் ஈடுபாட்டை மட்டுமே சொல்ல முடியும். அப்படி ஒரு உச்சத்தில் இருந்து வருகிறார் இன்று.

மணி அய்யரைப் போலவே ஒரு காம்போதி அல்லது ஒரு சங்கராபரணத்தை, கேட்பவர் மெய்சிலிர்க்க டி.வி.எஸ். பாடுவது இருக்கட்டும்; ஒரு பகுதாரி அல்லது ஒரு விஜய நாகரியில் எத்தனை சித்திர வேலைப்பாடுகளைச் செய்கிறார்? எப்படியெல்லாம் அந்த ராகங்களின் அழகுகளைப் படிப்படியாக வெளிக்கொணர்கிறார்! ஒவ்வொரு முறை கேட்கும் போதும் புதிய புதிய எழில்களை பளிச்சிடச் செய்கிறார்! பிரமித்துப் போகிறோம்! மணி அய்யரின் வலஜியைக் கேட்டு உருகிய உள்ளம் இன்று சங்கர நாராயணனின் காபியைக் கேட்டு நெகிழ்கிறது. ஒரே கமகமாதான்!

ஒரு பாடகன், பாட்டு கற்றுக் கொள்ளும்போது மாணவனாக இருக்கிறான். இசையின் இலக்கணங்களை மட்டுமின்றி பாடலின் இலக்கிய அழகுகளையும் ராக பாவங்களையும் உணர்ந்து பாடும் போது வித்வான் ஆகிறான். இதற்கு அடுத்த கட்டத்திலே பாட்டு வேறு, பாடகன் வேறு என்ற நிலையைக் கடந்து பண்ணிலும் பாடலிலும் தன்னை அவன் கரைத்துக் கொண்டு விடும்போது கலைஞனாக மலர்கிறான். இதற்குப் பிறகு சிலர் விஷயத்தில் இன்னொரு அற்புதமும் நிகழ்கிறது. பாட்டு, பாடகன், ரசிகன் என்ற வேற்றுமைகள் எல்லாம் மறைந்து போக, ரசிகனும் சுற்றுச் சூழலெல்லாமும் மறந்து தானும் அந்தப் பாடலாகவே மாறிவிடுகிற ஓர் அபூர்வ உணர்வைப் பெறுகிறான். இது தான் இசையின் உன்னத நிலை.

இத்தகைய சிகரத்தை சங்கர நாராயணன் எட்டிப் பிடித்து ஆண்டுகள் பலவாகி விட்டன. அவரது கச்சேரி முடிந்து வீடு திரும்பிய பிறகு, 'அடடா என்ன கார்வை! என்ன சுருதி சுத்தம்! என்ன சுவரப் பிரஸ்தாரம்! என்ன ராகபாவம்! என்ன சங்கதிகள்! என்ன கற்பனை வளம்! என்ன அநாயாசமாக சஞ்சாரம் பண்ணி மேல் ஷட்ஜமத்தை எப்படி எட்டிப் பிடித்தார்! என்றெல்லாம் தனித்தனியே நினைவுகூர்ந்து ரசித்து மகிழலாம். ஆனால் கச்சேரி கேட்டுக் கொண்டிருக்கும் போது இப்படியெல்லாம் அலசத் தோன்றாது. காரணம், அங்கே நாமும் இல்லை, சங்கர நாராயணனும் இல்லை! அவரது சங்கீதம் மட்டுமே இருக்கிறது!

இசையிலே பக்தி பாவம் தான் முக்கியமானது என்று கருதுகிறவர்கள் சங்கரநாராயணன் பூர்விகல்யாணியில் 'இந்தப் பாரா முகம் ஏது' என்ற பாடலைப் பாடக் கேட்க வேண்டும். 'நீ ஒரு சிலையோ என் முறை கேட்கிலையோ' என்ற அடியில் நிரவல் செய்யும் போது அவர் மனம் உருகிப் பாடுவது நம்மிடம்



# சிகரத்தில் சங்கர நாராயணன்!

கண்ணீர் துளிக்கச் செய்வது மட்டுமல்ல; பாடல் நாயகனும் குன்றுதோறும் இலங்கும் தெய்வமுமான கந்தசாமி மீது நமக்குக் கோபமே வந்து விடும் - 'இதைக் கேட்டுக் கொண்டு இன்னும் சிலையாகவே இருக்க எப்படி உனக்கு மனம் வருகிறது?' என்று சண்டை பிடிக்கக் கூடத் தோன்றும்!

டி.வி. சங்கரநாராயணனின் இசை உருக்க மானது மட்டுமல்ல; ஜாஜ்வல்யமானது, உற்சாகமானது. அந்த உற்சாகம் அவருக்குப் பக்க வாத்தியம் வாசிப்பவர்கள் யாரானாலும் அவர்களையும் தொற்றிக்கொண்டு விடும். வயலினோ, மிருதங்கமோ, கடமோ, கஞ்சிராவோ அந்த வித்வானின் முழுத் திறமையும் வெளிப்படுகிற மாதிரி இவர் அவர்களை ஊக்குவித்து அழைத்துப் போகிற அழகே அலாதி!

டி.வி.எஸ். ரசிகர்களுக்கு ஒரு பெரிய ஆசை. அது பேராசை அல்ல; நியாயமான ஆசை. இசைத் துறையில் வழங்கப்படுகிற முக்கியமான விருதுகள் அனைத்துக்கும் தகுதியானவராக இன்று விளங்கும் அவர், உரிய முறையில் கௌரவிக்கப்பட வேண்டும் என்பது. இவ்விஷயத்தில் வழக்கம் போல் கிருஷ்ணகான சபை முந்திக் கொண்டது.

இவ்வாண்டு 'சங்கீத சூடாமணி' விருதை ஆகஸ்டு 3-ம் தேதி அவருக்கு வழங்கி கோகுலாஷ்டமி இசை விழாவைத் தொடங்கி வைக்கிறது. கர்நாடக இசை உலகில் இன்று ராஜரிஷியாக விளங்கும் செம்மங்குடி சீனிவாச அய்யர் அவர்களுடைய பொற்கரத்தால் விருது வழங்கப்படுகிறது.

சங்கீத வித்வத்துக்காக மட்டுமின்றி, வினயத்துக்காகவும் ஒரு சிறந்த இசை மரபை பாதுகாத்தும் வழங்கியும் வருவதற்காகவும் அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான ரசிக உள்ளங்களை இசைவிப்பதற்காகவும் இந்தச் சூடாமணி விருது வழங்கப்படும்போது, டி.வி. எஸ்.ஸின் இசை போலவே இந்த ஆண்டு இசை விழாவே களைகட்டி விடுகிறது!

எனவே, கட்டுரையின் ஆரம்பத்தில் அ.இ.ரே. திக்குநோக்கி போட்ட கும்பிடை கட்டுரை இறுதியில் கிருஷ்ணகான சபை நோக்கியும் திருப்பி விடலாம்!

---

# நிஜமான கதை...



மேலாண்மை பொன்னுச்சாமி

♦ நடைமுறை வாழ்க்கைக்குச் சம்பந்தமில்லாத சிறுகதைகளையும், தொடர்கதைகளையும் படித்து, அலுத்துப் போன போது, 'ஆகாயச் சிறகுகள்' உண்மையிலேயே கால் கொண்டு பூமியின் மீது நடக்க வைத்ததோடு மட்டுமின்றி, பொய்யான மாயத் தோற்றங்களில் இருந்து விடுபட்டு, நிஜத்தோற்றத்தை, நிஜவாழ்க்கையை நிஜக் கண்களால் காண வைத்தது.

சென்னை - 97, சு. பட்டாபிராமன்.

♦ ஆண்களுக்கு எந்த விதத்திலும் பெண்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிப்பதாய் அமைந்திருந்தது மேலாண்மை பொன்னுச்சாமியின் 'ஆகாயச் சிறகுகள்'. ஆசிரியரின் கைவண்ணமும் மாருதியின் ஓவியமும் மனத்தில் 'பஞ்ச்' ஆகிவிட்டது. பாராட்டுக்கள்.

விசலூர், ஜி.ஜி. கிருஷ்ணன்.

♦ 'ஆகாயச் சிறகுகள்' அற்புதமான படைப்பு. ஒரு பெண்ணின் அறிவு, பூ மலர்வதுபோல் மலர்ந்து மணம் வீசுவதாக சித்திரித்திருப்பது மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது.

சென்னை, சரளா.

♦ மேலாண்மை பொன்னுச்சாமி 'ஆகாயச் சிறகுகள்' தொடரை இவ்வளவு விரைவில் முடித்து விடுவார் என எதிர்பார்க்கவில்லை. பாரதி கண்ட 'நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கு'முடைய புதுமைப் பெண்ணாக பிரேமாவை மாற்ற பால்சாமி வித்திட்ட போதும், அவன் ஊரில் இல்லாதபோது நடந்த சம்பவங்களே நீரூற்றி, அவனது இலட்சியங்களை அவளிடத்தில் வேரூன்ற வைத்தன. கணவன் மேல் அவள் கொண்ட இயற்கையான ஆழ் மனக் காதலும் அதற்கு உரமிட்டன என்பது மறுக்க முடியாதது! மேலாண்மை பொன்னுச்சாமிக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.

மதுரை, ரோகிணி சபாபதி.

♦ 'கம்யூனிஸ்ட் பால்சாமியை' பதினைந்து வாரம் சுதந்தரமாக உலவ விட்டதின் மூலம் தனது நடுநிலைமைப் பதாகையை உயர்த்திப் பிடித்துள்ளது கல்கி. "நாம் தழுவியிருக்கின்ற கொள்கைகளுக்கு முரணான ஒரு கொள்கையை மற்றவர் தழுவியிருக்கலாம்— ஆனால் அதற்காக அவர்களுடைய மனோதர்மத்தையும் அந்தரங்க சுத்தியையும் சந்தேகிப்பது தவறு" என்ற பரந்த மனோபாவம் இல்லாமல் இது சாத்தியமாகாது! மேலாண்மை பொன்னுச்சாமியும் தன் பங்குக்குக் குறை வைக்காமல் கண்ணியமான, அற்புதமான ஒரு கதையைத் தந்திருக்கிறார்! பாராட்டுக்கள்.

சேலம், எஸ். முரளி.

# KALKI SHOPPING PAGE


## மணமக்கள் தேவை இலவச சேவை

அனைத்து சமூகத்திலும், ஆயிரக்கணக்கான வரன்கள் பெற உடன் பதிவுசெய்ய தொடர்பு கொள்ளவும்.

**BEST BRIDE & GROOM BANK™**

H.O.: 3rd Floor, Shanthi Complex,
26, Ranganathan Street,
Madras - 600 017.
Phone : 4348560 4347025

B.O.: 13, College Road,
Nanganallur, Madras - 114.
7, Station Road, Tambaram
Sanatorium,
Madras - 600 047.
5, Second Main Road,
New Colony,
Chromepet,
Madras - 600 044.

Working on Sundays also

## மீராவின் வைப்பு நிதித் திட்டம்

இன்றே ரூ. 1000 Deposit செய்து அதற்கு நிகராக எங்கள் show room-லிருந்து சூரத் சாரிகள், பெங்கால் காட்டன், காஞ்சிபுரம் பட்டு, மைசூர் சில்க், கோரா காட்டன், சுங்குடி சேலைகள் மற்றும் சுடிதார் பிளவுஸ் ஆகிய அனைத்தையும் விற்பனைக்கு எடுத்துச் செல்லலாம். மேலும் நீங்கள் Deposit செய்த தொகையை 46 மாதங்களில் இரண்டு மடங்காக பெறலாம். அதுவரை எங்களிடமிருந்து புடவைகளை விற்பனைக்கு எடுத்துச் செல்லலாம். மேலும் விவரங்களுக்கு,


**மீரா டெக்ஸ்டைல்ஸ்**

26/1, மோதிலால் தெரு, தி.நகர்,
சென்னை - 600 017.
போன் : 4342696

Authorised Dealers :
WIMCO FABRICS - SURAT

## படித்துப் பயன்பெற புதிய புத்தகங்கள்





| | | |
|---|---|---|
| ஐ.ஏ.எஸ். தேர்வும் அணுகுமுறையும் — வெ. இறையன்பு ஐ.ஏ.எஸ். | | 35/- |
| அரிதாரம் (சிறுகதை) | " | 30/- |
| வெளிச்சம் " | ராஜும் கிருஷ்ணன் | 32/- |
| ஒரு மழை நாளில் " | ஈரோடு தமிழன்பன் | 30/- |
| வாய்க்கால் | பூமணி | 20/- |
| தியாகத் தூண் | Dr. குணோரி கிறிஸ்டபர் | 24/- |
| பாரத ஸ்டேட் பாங்க் பரிசு பெற்ற நாடகம் ஆயிரம் கதவுகள் திறக்கட்டும் | ஸ்டெல்லா புரூஸ் | 48/- |

**திருப்பூர் தமிழ்ச் சங்கப் பரிசு பெற்ற**

| | | |
|---|---|---|
| வரப்புகள் | பூமணி | 35/- |
| பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் | Dr. முத்துச்சிதம்பரம் | 48/- |

பதிவஞ்சலில் பெற விலையுடன் ரூ 9/- சேர்த்து M.O. செய்க:

**தமிழ்ப்புத்தகாலயம்**
11, சிவப்பிரகாசம் தெரு
த.பெ. 5193. பாண்டிபஜார் : தி. நகர்
சென்னை - 600 017 ✆ : 43 45 904

## உங்கள் கவனத்திற்கு...

பிரபல காழியூர் பாரம்பர்ய ஜோதிடர் மந்த்ராலய விற்பன்னர் காழியூர் K.G.B. சாரியார், அவர்களால் தயாரிக்கப்படும் "அபூர்வ சக்தி வாய்ந்த எந்ரங்கள்; மூலிகைகளை பெயர், நட்சத்திரம், கோத்திரம் இவைகளுக்கு 1008 ஆவுகர்த்தி செய்து அந்தந்த பக்தர்களுக்கு கொடுக்கப்படும்.

| | |
|---|---|
| தனாகர்ஷண எந்ரம் | ரூ. 375 |
| மஹா சுதர்ஸன எந்ரம் | ரூ. 380 |
| ஹனுமத் ரக்ஷை | ரூ. 25 |
| குபேரதனாகர்ஷண மூலிகை | ரூ. 25 |
| மஹாவசீகரண ஹனுமத் அஞ்சனம் | ரூ. 61 |

மற்றும் பல அபூர்வ தெய்வீக சாதனங்களைப் பற்றி அறிய ரூ. 1 ஸ்டாம்புடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

(பிரதி பௌர்ணமி தோறும் காலை 11 மணிக்கு இலவச அருள்வாக்கு பெற தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 2332881.

முகவரி :

ஹனுமத் தாஸர்,
Prof. K.G.B. Chariar, M.M.H. and SCA,
No. 16, 10th Street, Shanthi Nagar,
Adambakkam, Madras - 600 088.

# KALKI SHOPPING PAGE

## FOR THE LOVERS OF SUNGUDI SAREES

A FINEST SUNGUDI SAREES OFFERED TO CUSTOMERS, PAY A VISIT AND SEE THE COOL AND COMFORT OF

# SAKUNTHALA SAREES

ALSO AVAILABLE

- RANEE SAREES
- BENGAL COTTON SAREES
- BENGAL PRINTED PURE SILKS
- BATIK COTTON SAREES
- CHUDDIDAR MATERIALS (FINE & COLOURFUL BATIK WORKS)

MADURAI TEXTILES

# MADURAI TEXTILES


**SHOW ROOM FOR SUNGUDI SAREES**
**2, SIVAPRAKASAM ROAD,**
**PONDY BAZAAR, MADRAS - 600 017**
**(NEAR AGASTHIYAR TEMPLE)**

## MANUFACTURERS OF OFFICE & HOUSE HOLD WOODEN FURNITURE

*Exclusive collection of*

SSF

- SOFASETS
- DINING SETS
- DRESSING TABLES
- SPACE COVER DINING TABLE
- GLASS TOP CENTRAL TABLES



- SINGLE/DOUBLE COTS
- TV TROLLEYS/ CABINETS
- STEEL CUP BOARDS
- SOFA CUM BED
- WALL UNITS

All Credit Cards Accepted

All kinds of Quality Economical Wooden Furniture available

SSF

# SRI SAI FURNITURE

No. 18, Royapettah High Road, (Opp: Pilot Theatre) Madras - 600 014.

☎ 8262931 / 8261630 / 8279071

# அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி -1996



• புஷ்பா கந்தசாமி



• பாம்பே சாணக்யா



• சுப்ரபாலன்



• அகிலன் கண்ணன்

## முடிவுகள்:

எழுத்தாளர்கள் அகிலன் கண்ணன், சுப்ர. பாலன், புஷ்பா கந்தசாமி, நாடக ஆசிரியர் பாம்பே சாணக்யா இவர்களுடன் கல்கி ஆசிரியரும் பதிப்பாளரும் கூடி, போட்டிக்கு வந்த கதைகளைப் படித்து, விவாதித்து, பின்வரும் கதைகளைப் பரிசுகளுக்குரியனவாகத் தேர்ந்தெடுத்தனர்.

ரூ. 1500 முதல் பரிசு பெறும் சிறுகதை : **மறுபடியும்....**

**கனகராஜன்,**
வி.வி. காலனி,
சமத்தூர்,
பொள்ளாச்சி- 642 123.

ரூ. 1000 இரண்டாம் பரிசு பெறும் சிறுகதை: **உள்காயம்**

**சத்யராஜ்குமார்,**
11/11, ராமசாமி நகர்,
பொள்ளாச்சி - 642 003.

தலா ரூ. 500 பெறும் இரண்டு மூன்றாம் பரிசுக் கதைகள் :

**1. புதிய ஒதுக்கீடுகள்**

**ஜி. நாராயணன்,**
பி-1, ஷியாம் நிவாஸ்,
26, கோபாலகிருஷ்ணன் சாலை,
சென்னை - 17.

**2. எல்லாமாய் நீ இருக்கையில்...**

**சாந்திகுமார்** (அறிமுக எழுத்தாளர்)
6/1155. சிங்கள் கண்டி பரம்பு,
ஆர்.ஸி. ரோடு,
கோழிக்கோடு - 673 001.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள். கலந்து கொண்டு சிறப்பித்த ஆயிரக்கணக்கான எழுத்தாளர்களுக்கு நன்றி.

- முதல் பரிசுக் கதை, இந்த இதழில் 40-ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.
- பரிசுக் கதைகள் தவிர, பிரசுரத்துக்குத் தேர்வான கதைகளின் பட்டியல் அடுத்த வாரம்.

• படங்கள் : யோகா






கட்சி அலுவலகம்
"எனக்கென்ன பயம்! எங்க கட்சித் தலைமைல உடனடியா மாற்றம் வரணும்னு அடிச்சு சொல்லுவேன்... ஆனால் நான் சொன்னேன்னு எழுதிடாதீங்க..."
Naveen
"மன்னிக்கணும், நீங்க அமைச்சரை இப்ப பார்க்க முடியாது. உள்ளே முக்கியமான மீட்டிங் நடந்துகிட்டிருக்கு..."
அமைச்சர்
— இந்தியன் "ஃபீச்சர்ஸ் சிண்டிகேட்"
"நம்ம தலைவர் எப்படியும் வழக்குல ஜெயிச்சு வந்துடுவார். நாமதான் சட்டத்தை உருவாக்கும்போதே கவனமா, போதுமான அளவு ஓட்டைகளை விட்டுவைச்சு உருவாக்கியிருக்கோமே...."
நீதிமன்றம்
Naveen
கட்சி அலுவலகம்
ஊழலை சகித்துக் கொள்ள மாட்டோம்!
Naveen
ஆஹ்..ஹாஹாஹா...
"திரும்பவும் ஊழலைப் பற்றிப் பேசறாங்க பாருங்க... இப்படியெல்லாம் நம்ம உட்கட்சி விவகாரத்துல அவங்க தலையிடலாமா...!"

## உங்களை மட்டுமன்றி உங்கள் "தலைமுறையினர் மீதும் அக்கரை கொண்டுள்ள ஒரே நிறுவனம்.

# சுபிக்ஷா டெபாசிட்டுகள்

# 24% + 5%*

| அட்சய பத்திரம் | தங்கத் தொட்டில் |
|---|---|
| ரூ.10,000/- மூன்று ஆண்டுகளுக்கு முதலீடு செய்து காலாண்டு வட்டியாக ரூ.550/- பெறுவீர் 4 ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் ரூ.700/- கிடைக்கும். | ரூ.300- வீதம் 24 மாதங்கள் செலுத்தி ரூ.2,500/- இருபது ஆண்டுகளுக்கு மற்றும் போனஸ் ரூ.5,00,000/- மதிப்புள்ள தேக்கு மரங்கள். |

Venchura

ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ்

**Orchard and Farm Lands**

63, எல்டாம்ஸ் ரோடு, இரண்டாம் தளம்,
தேனாம்பேட்டை, சென்னை - 18. தொ. பேசி : 453024

*இந்த வட்டி விகிதம் சுபிக்ஷா டெபாசிட்களுக்கு மட்டும் பொருந்தும்

# A-Z சித்த ஆராய்ச்சி நிறுவனம்

**40 வருடகால சேவை**

- சிறுநீரக கோளாறுகளை சீர்படுத்தும் மிகச் சிறந்த சிகிச்சை மையம்
- இரண்டே மாத சிகிச்சையில் பூரண நலம் பெறுவீர்
- டயாலிஸிஸோ மாற்று சிறுநீரகமோ தேவையின்றி சிறுநீரகக் கோளாறுகள் நீக்கப்படும்
- ப்ளட் கேன்சர், எபிலெப்சி, டயாபிடிஸ், ஆஸ்துமா, சைனஸ், தோல் வியாதிகள் போன்றவற்றுக்கும் எந்த பக்க விளைவுமின்றி சிகிச்சை அளிக்கப்படும்
- டியாபிடிஸ் - எந்த விதமாய் சார்ந்து வாழ்பவர் இருந்தாலும் 15 நாட்கள் மருந்து எடுத்ததும் Blood Glucose Level Normal செய்து விடுகிறோம்

அணுகுவீர் :

**டாக்டர் நாஸ்ஸீன் ஜிக்ருல்லா**

U-92, ஸ்கைலார்க் அபார்ட்மென்ட்ஸ், மூன்றாவது மெயின் ரோடு,
அண்ணாநகர், சென்னை - 600 040. ☎ 6263519/6280032



சொந்தக் கட்டிடத்தில் இயங்கும் அமுதா கோல்டு பேலஸ் (தொழிற் சாலை)
(JEWELLERY FASHION MAKERS AND DESIGNERS )
வழங்கும்

# அமுதா கோல்டு பேலஸ்

43, டாணாத் தெரு, புரசைவாக்கம், சென்னை - 600 007.
போன் : 6423471, 6426385

உங்கள் முதலீட்டிற்கு

**30% வட்டி + 6% சேதாரம் + 2 தங்கக் காசுகள்**

இரண்டாம் ஆண்டு கோலாகலத் திருவிழாவை முன்னிட்டு ரூ. 10,000/- டெபாசிட் செய்பவர்களுக்கும், ரூ. 10,000/-க்கு நகை/பொருள்கள் வாங்குவோருக்கும் ஒரு வெள்ளிடம்ளர் அல்லது ரூ. 200/- பரிசு உடனடியாக வழங்கப்படும்.

| சிறப்புச் சலுகை | ஒவ்வொரு நாளும் முதல் 5 டெபாசிட்டர்களுக்கு ஒரு சிறப்புப் பரிசு உண்டு. |
| --- | --- |

35, முருகப்ப முதலித் தெரு, புரசைவாக்கம், சென்னை - 600 007. போன் : 641935, 6425073, 5322026.

ஞாயிறு விடுமுறை * இச்சலுகை 30 நாட்களுக்கு மட்டுமே. *Raj Adds*








• நியாயமாய்ச் செயல்பட்டால் போதும்!

● ஸ்ரீவித்யா காளிதாஸ்,
சிதம்பரம்.

? பிரேமானந்தாவின் வக்கீல் ராம்ஜெத்மலானிக்கு எதிராகப் பெண்கள் ஆர்ப்பாட்டம் செய்தது பற்றி...?

! எப்பேற்பட்ட குற்றவாளிக்கும் யாரேனும் ஒருவர் ஆஜராகத் தான் வேண்டும். இருந்தாலும் பிரேமானந்தா – ஜெத்மலானி விஷயத்தில் பெண்களின் விழிப்புணர்வைப் பாராட்டலாம். இந்த விழிப்புணர்வு எல்லா தரப்பிலும் இருந்தால் பிரேமானந்தாக்களிடம் பெண்கள் ஏமாற மாட்டார்களே...!



• எதிராக ஆர்ப்பாட்டம்

● எஸ். ஏ. கோவிந்தகுமார், தஞ்சாவூர்.

? இத்தனை தமிழ்நாடு எம்.பிக்கள் மத்திய அமைச்சர்களாக இருப்பதால், நாம் அதிக பலன்களை எதிர்பார்க்கலாமா...?

! மத்திய அமைச்சர்கள் நாடு தழுவிய அளவில் சிந்திப்பதுதான் முறை. எனவே தனிச் சலுகைகளை எதிர்பார்க்காமல் நியாயமாக நடக்க வேண்டியவற்றை மட்டும் எதிர்பார்ப்பது நல்லது.



• பெயர் சூட்டல்...



• ...விவகாரம்!

● க. கந்தையா, நாகர்கோவில்.

? ஜெயலலிதாவுக்கு உடன்பிறவா சகோதரியாக சசிகலா இருப்பது போல், கருணாநிதிக்கு உடன்பிறவாத சகோதரராக மூப்பனார் உள்ளார் என்று குமரி அனந்தன் கூறியுள்ளாரே...?

! மோசமான ஒப்பீடு என்று தெரிந்துதான் கூறியிருக்கிறார். குமரியாரிடம் நேர்மையும் கண்ணியமும் பறந்து போய் ரொம்ப நாட்கள் ஆகிவிட்டன.




• தெரிந்தே பேசி...

● கே. அனிதா, கோவை.

? ஹிந்துவுக்குப் பதிலாக 'கல்கி' முன்னாள் முதல்வரைப் பேட்டி கண்டிருந்தால் என்ன மாதிரி கேள்விகள் கேட்கப்பட்டிருக்கும்...?

! நாம் இசகுபிசகாகக் கேட்போம் என்பதால்தான் பேட்டிக்கான நேரம் கேட்டதற்கு பதிலே இல்லை, போயஸ் தோட்டத்திலிருந்து...

● ஈ.டி. விஜயகுமார், ஈரோடு.

? வளர்ப்பு மகனைக் காப்பாற்ற 'ஜெ'வால் முடியுமா...?

! சத்தியம் ஒன்றால்தான்

# 'புஞ்ஜியா' என்றால் என்ன?

**நீங்கள் கேட்டவை**
**– தராசு**

யாரையும் நிரந்தரமாகக் காப்பாற்ற முடியும்.

● ஜி.ஏ. வேனா, சென்னை – 15.

? 'சென்னை' பெயர் மாற்றம் சரியா?

! ஜென்னை என்றால்தான் தப்பு; சென்னை சரிதான்!

● ஆர். ராஜதுரை, சீர்காழி. ❒

? ராஜீவ் காந்தி உயிருடன் இருந்தவரை போஃபர்ஸ் பீரங்கி பேர ஊழலில் ஈடுபட்டார் என்று தூற்றி விட்டு, எம்.ஜி.ஆர். இருந்தவரை, அவரது ஆட்சியில் மிக அதிக ஊழல் என்று விமர்சித்து விட்டு, இப்போது மட்டும் கருணாநிதி, ராஜீவ் பேரையும் எம்.ஜி.ஆர். பேரையும் போக்குவரத்துக் கழகத்துக்கும் சினிமா நகரத்துக்கும் வைத்திருக்கிறாரே...?

! சுதந்தரம் பெற்று, முதல் தலைமுறை தலைவர்களுக்குப் பிறகு நம் நாட்டில் அனேகமாக எந்தத் தலைவரும் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகாமலில்லை. அதே தலைவர்கள் பல நல்ல காரியங்களும் புரிந்திருக்கிறார்கள். அவற்றுக்காக அவர்களை நன்றியுடன் நினைவு கூர்ந்து பொது இடங்களுக்குப் பெயரிடுவது என்பது மரபாகி விட்டது.

● ஆர்.வி.வி. மூர்த்தி, ராதாபுரம்.

? முதுமை என்ற பேனாவில் இளமை என்ற மையை நிரப்பி எழுத முடியுமா...?

! அற்புதமாக எழுதலாம். எழுதியவர்கள் நிறைய உண்டு. சொல்லப் போனால் முதுமையை நெருங்கும்போதுதான் விலகி நின்று இளமையைப் புரிந்து கொண்டு ரசனையுடன் வெளிப்படுத்தும் ஆற்றல் பலருக்குக் கைவந்திருக்கிறது.

● என். ராஜி, மேலப்பாதி.

? தமிழக மேல் சபையில் எழுத்தாளர்களுக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்று தஞ்சை – நாகை எழுத்தாளர்கள் கூட்டமைப்பு கேட்டுள்ளதே...?

! 'அடியே' என்கிறதுக்கு அகத்துக்காரியைக் காணோம்... அதற்குள் குடித்தனம் நடத்துவதற்கு என்ன அவசரமாம்?

● ஜி. கதிரேசன், சிறுமுகை.

? புஜ்ஜியா என்றால் என்னங்க?

! நம்ம ஊர் ஓமப்பொடியை ஒத்த வடக்கத்தி சமாசாரம். பாராளுமன்றத்துல அடிபட்டு இப்படி ஒரு கேள்வியை வரவழைச்சுடுச்சு...! 'புஜ்ஜியா தயாரிப்புக்கு பெப்ஸி ஃபுட்ஸ் நிறுவனத்துக்கு உரிமை தரணுமா? அதை உள்ளூர்க்காரங்களே செய்யலாமே...!' என்று பி.ஜே.பி. உறுப்பினர் கேட்க, தொழிலமைச்சர் மாறன், 'புஜ்ஜியாவா? இட்லி, தோசைதான் எனக்குப் புரியும்' என்று முதலில் 'ஜோக்' அடித்து விட்டு, விற்பனை உரிமை மட்டுமே பெப்ஸிக்கு அளிக்கப்பட்டுள்ளது; தயாரிப்பு உரிமை அல்ல என்று விளக்கினார்.

● சா. நாகராஜன், விராலிமலை.

? எஸ்.டி.எஸ்ஸின் கடிதமும் ராஜிநாமாவும் அ.தி.மு.க.வில் திருப்புமுனையை உருவாக்குமா?

! தலைமை திருந்தும் என்கிற திருப்புமுனை அடைபட்டுப் போன நிலையில், கட்சிப் பிளவு என்கிற திருப்புமுனையைப் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள்.

● கே.எஸ். ராம அய்யர்,
தேவாஸ் (மத்திய பிரதேசம்)

? அட்லான்டா ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளச் செல்லும் இந்திய வீரர்கள் பற்றி உங்களது எதிர்பார்ப்பு என்ன...?

! எப்படியோ, மெடல் பட்டியலில் இந்தியாவின் பெயரும் இடம்பெற்றால் சரி.

● எஸ். மகேஷ், கர்னால்.

? அமெரிக்க விமான விபத்து பற்றி...?

! முதலில் விபத்து என்றார்கள்; வருந்தினோம். பின்னர் குண்டு வெடிப்பு என்றார்கள் – அதிர்ந்தோம். அப்புறம், 'அமெரிக்கா ஒலிம்பிக்ஸ் நடத்தி நற்பெயர் சம்பாதித்துக் கொண்டு விடுமே என்ற பொறாமையில், அதற்குக் களங்கம் விளைவிக்க சதி..' என்ற செய்தி வர, வேதனையில் வாடினோம். நட்புறவை வளர்க்க வேண்டிய ஒலிம்பிக்ஸ் விளையாட்டே வன்மம் உண்டாகக் காரணமாகச் சொல்லப்படுவது எவ்வளவு கொடுமை!

---

**❒ ரூ. 25 பரிசு பெறுபவர் :**
**ஆர். ராஜதுரை,**
**97, பிடாரி வடக்கு வீதி,**
**சீர்காழி – 609 110.**

---

● இர. ரூபன், கோபாலசமுத்திரம்.

? விடுதலைப் புலிகள் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி எப்போது...?

! கொரில்லா போர் முறையை எதிர்த்து ராணுவம் வெற்றி பெற்றது என்ற சரித்திரமே கிடையாது. 'யாழ்ப்பாண விடுதலை' என்று மார் தட்டிய ராணுவம், இன்று முல்லைத் தீவில் செமர்த்தியாக வாங்கிக் கட்டிக் கொள்கிறது! தமிழீழம் அமைந்தாலும் அது இடுகாட்டில்தான் இருக்கும் என்ற நிலை பரிதாபத்துக்குரியது. ஸ்ரீலங்கா ராணுவத்தில் சேரவே இளைஞர்கள் முன்வர மறுக்கிறார்கள் என்பது லேட்டஸ்ட் செய்தி. கட்டாய ராணுவ சேவைக்குச் சட்டம் இயற்றி, புலிகளுடன் போராட அனுப்பும் போது, முன்பு வியட்நாம் போரையொட்டி அமெரிக்காவில் ஏற்பட்டது போல், ஸ்ரீலங்கா அரசுக்கும் மக்களிடையே எதிர்ப்பு உருவாகும் வாய்ப்பு இருக்கிறது. போர் நீடிப்பதன் அபத்தத்தை, ஆபத்தை உணர்ந்து, இருதரப்பும் இறங்கி வந்து கைகுலுக்கும் போதுதான் முற்றுப்புள்ளி விழும். அதற்கு உதவ இந்தியாவிடம் மார்க்கம் உண்டு; மனமில்லை!



# சம்மதம்... சம்மதம்...

கரையேற
விருப்பமில்லை
எனக்குக்
கரையேற
விருப்பமில்லை – உன்
கன்னக் குழியிலேயே
கிடக்கிறேன்
விட்டுவிடு!

விரல் தொடும்முன்
வீணையின் இசை
எங்கே
இருந்தது?
அது
எங்கிருந்ததோ
அங்கிருந்தது
உன்னைக் கண்டபின்
ஊற்றெடுத்த காதல்
உன்னைக் காணாமுன்?

'ஒருகிளையில்
இருபுறாக்களென'
பாடுவோமே
இப்பாடல்
மறந்தாவிட்டாய்!
இரத்த
நாளங்களில்
ஓடும்பாடல் – இதை
மறந்தாவிட்டாய்!

வசந்த வாசல் திறந்த
இந்தப் பாடலைப்
புனைந்தது
எப்போது – அது
என்ன கிழமை?
ஞாபகத்தின்
கன்னத்தை
கிள்ளிக் கேள்!

கிழமைப் பெயர்
எதையும்
குறிக்க முடியாத
அந்த நாளுக்கு எந்தப்
பெயர்?
ஏழு கிழமைகளும்
பொறாமையில்
வேர்க்கப்
பெயரொன்று
தேடவேண்டும்!

எங்கேனும்
போய்விட எண்ணி
விளக்கு
அணைக்கப்படுவதை
ஒளி
எதிர்பார்க்குமா?
உன் உள்ளத்தை
ஒருமுறை
கலந்தாலோசித்துப்
பதில்சொல்!

எங்கேனும்
பறந்துவிட எண்ணி
இங்குப் பூவின்
மொட்டு
உடைபடுவதை
வாசம்
எதிர்பார்க்குமா?
உன் நெஞ்சைத்
தொட்டுச் சொல்!
நீ
என்னை ஏன்
அணைக்கத்
துடிக்கிறாய்?
என்னை ஏன்
உடைக்கத்
துடிக்கிறாய்?

என்னைநீ
தள்ளினாலும் நான்
ஒரு
புல்லாங்குழலுக்குள்
போய்விழுந்து
உன்னைப்
பாடிக் கொண்டுதான்
இருப்பேன்!
என்
கண்ணீரில் உனக்கு
முத்தாரம்
தொடுப்பேன்!
என்
காயங்களை வைத்து
உனக்கு ஒரு
பதக்கம் செய்வேன்!
ஏனெனில்
எனக்கு வாழ்க்கை
தேவை
உன்னோடு – அது
சுகங்களின் அல்லது
சோகங்களின்
முகவாயில்
எதில் இருந்தாலும்
சம்மதமே!

– **தமிழன்பன்**

# நரையும்

தி.சிவசுப்பிரமணியன்

தலையைச் சற்று அழுத்தமாய் வாருகையில் சீப்போடு சில முடிக்கற்றைகளும் சேர்ந்து வர லாயிற்று. 'முடி நிறையக் கழிய ஆரம்பித்து விட்டதோ? குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு 'முடி உதிர்தல்' ஆரம்பித்து விடுமாமே. எனக்கு அவ்விதம் 'முடி உதிர்தல்' தொடங்கிவிட்டதா? இன்னும் கொஞ்ச நாளில் நெற்றி மேட்டின் இருபுறமும் வழுக்கை விழுந்து விட நேரிடுமோ? யோசனை வந்தது. கூடவே கவலையும்.

கண்ணாடி பார்த்துக் கவலைப்படுகையில் ஏதோ உறுத்தல் தோன்றிற்று. திரும்பிப் பார்த்த போது நிலைப்படி அருகில் நின்று சிவகாமி வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

சிவகாமி எப்போதும் இவ்விதம்தான். அதிகம் அதிர்வுகளின்றிதான் இருக்கும். அவளது பேச்சும் செயலும். எதிலும் ஒரு மென்மை பரவி இருக்கும். கல்யாணமான இந்தப் பதினேழு வருடங்களில் அதிர்ந்து அவள் பேசி நான் கேட்டதில்லை. "வீடு என்பது இதமான விஷயம்" என்கிற சூழலை உருவாக்க அதுவே காரணமாயிற்று.

"என்ன, அலங்காரம் ரொம்ப அமர்க்களப் படறது? 'மார்க்கண்டேயனாவே இருந்துடலாம்னு உத்தேசமா?"

சிவகாமியின் கேள்விக்குப் பதில் பேசாது லாகவமாய் நரைமுடி ஒன்றைக் கத்தரிக்கோலால் வெட்டி எறிந்து விட்டு, வேறெங்கேனும் நரை தெரிகிறதா என்று ஆராய ஆரம்பித்தேன்.

"அப்போ 'மார்க்கண்டேயன்' இல்லை"

"என்னது?"

"வயசாயிடுச்சின்னு அர்த்தம். இனிமேயாச்சும் அதிக ஆர்ப்பாட்டம் பண்ணாத இருக்கணும்னு அர்த்தம்"

"நீ வேற. இது பித்த நரையாக்கும்"

"ஆமா. முப்பத்தி ஒம்போது வயசில வர்றதுக்குப் பேரு பித்த நரையாக்கும்"

சின்னதாய்ச் சிரித்தாள். தண்ணீரில் வெடித்து வருகிற நீர்க்குமிழிகள் மாதிரி அந்தப் புன்னகை எனக்குத் தோன்றிற்று. குழந்தைகள் எழுந்து வந்து விடவே, அந்தப் பேச்சைப் பாதியில் நிறுத்த வேண்டியதாயிற்று.

அன்றைக்கு மதியம் சாப்பிட வீட்டுக்கு வந்தபோது, வாசற்படியில் கிடந்த செருப்பு பார்த்ததுமே புரிந்து போயிற்று. யார் வந்திருப்பது என்று. நர்மதாதான் வந்திருக்கிறாள். என் தங்கை நர்மதா 'சாதாரணமாய் வந்திருக்கிறாளா அல்லது வழக்கம் போல் ஏதும் பிரச்னைகளுடனா?' மனதில் கேள்வி வந்தது. 'இந் நேரத்துக்கு, சாதாரணமாய் வர வாய்ப்பில்லையே' - யோசனை அதிகக் கவலையும், அயர்ச்சியும் தரலாயிற்று. மெல்ல எழுந்த பெருமூச்சை அடக்கியபடி உள் நுழைந்து, 'வா, நர்மதா' என்றேன்.

அவள் முகம் பார்த்தவுடனேயே புரிந்து போயிற்று. உணர்ச்சி வசப்பட்ட முகமும், சிவந்து, கண்ணீர் மழை கொட்டத் தயார் என்கிற ரீதியிலான விழிகளும் அதைக் காட்டிக் கொடுத்தன.

இப்போது எதுவும் சொல்வதற்கு இல்லை. சொல்லவும் கூடாது. அது தவறாய் முடியும். மனதுக்குள் எழுந்த தீர்மானத்துடன், "ஆபீசுக்கு நேரமாச்சு சிவகாமி. சாப்பிட்டுட்டு சீக்கிரம் போக வேண்டி இருக்கு இன்னிக்கு!"

சின்னப் பொய்யைச் சொல்லி விட்டு, அவசரமாகச் சாப்பிடலானேன். செல்வி சமையற்கட்டின் உட்புறம் ஒதுங்கிக் கொண்டாள் பதில் பேசாது.

மனசு கஷ்டமாகத்தான் இருந்தது. ஸொஸைட்டிக்கே போக மாட்டாரு." ஆனாலும் வேறு வழியில்லை.

கிளம்புகையில் சிவகாமி வாசல் வரை வந்து, மெதுவாகச் சொன்னாள். "பாவங்க அது. இப்ப தான் வந்துச்சி. என்ன, ஏதுன்னு ஒரு வார்த்தை கேக்கலாமில்லை? அதும் முகத்தைப் பார்த்தவுடனேயே ஏதோ பிரச்னைன்னு தெரிஞ்சுப் போச்சு. விசாரிச்சாத்தானே சொல்லும். நீங்க பாட்டுக்குப் போனா, அதும் மனசு கஷ்டப் படாதா?"

"வேண்டாம் சிவகாமி. நான் ஒன்னும் கேக்கப் போறதில்லை. நீயும் கேக்க வேணாம். அவளா ஏதுவாச்சும் சொன்னா, அப்படியான்னு சாதாரணமாகக் கேட்டுக்க. சாயங்காலம் 'விவரமா' பேசிக்கலாம்"

அவசரமாய் ஸ்கூட்டரைக் கிளப்பினேன். காற்று மெல்ல வீசி தலைமுடியைப் பின்னே தள்ள. மனசும் பின்னோக்கிப் போயிற்று.


நர்மதா எங்கள் வீட்டின் கடைக்குட்டி. இயல்பாகவே, எந்த வீட்டிலும் கடைசிக் குழந்தைக்கு 'செல்லம்' ஜாஸ்திதான். அதிலும், நான்கு ஆண் பிள்ளைகள் பிறந்து அதற்கு அப்புறம் அம்மாவும், அப்பாவும் கோவில், குளம், சாமி என்று வேண்டிப் பிறந்த வீட்டில் அவள் வைத்தது தான் சட்டமாயிற்று. வேண்டியது வாங்கிக் கொடுக்கப்பட்டது. ஆனால், அதுதான் தவறாய்ப் போயிற்று.

நர்மதாவுக்கு குழந்தை சுபாவம். எந்த விஷயத்திலும் அவள் நினைத்ததுதான் நடக்க வேண்டும். அவ்விதம் நடக்காவிடில், கோபம் பன்மடங்காகி விடும். இதெல்லாம் சின்னச் சின்னக் குறைகள். பெரியவளானதும் சரியாகி விடும்' என்று நினைத்தது நடக்காது போயிற்று.

கல்யாணமான பிறகுகூட அவள் சுபாவம் மாறாது போயிற்று. உள்ளூரிலேயே 'அண்ணன்' வீடு இருப்பது வசதியாயிற்று. கோபப்பட்டு புருசன் வீட்டில் தகராறு செய்து அவள் என் வீடு வருவதும், நான் இரண்டு நாள் பொறுத்து அவளைச் சமாதானப் செய்து, நல்ல புத்தி சொல்லி, அவள் புருஷனிடம், தங்கைக்காய் மன்னிப்பு கேட்டுக் கொண்டு போய் விடுவது வாடிக்கையாயிற்று.

இது மாதிரி நாலைந்து மு... நேர்ந்து விட்டது. சென்ற முறையே இ... எனக்கு அதிகம் கவலை கொடுத்தது. இந்த முறை அது மேலும் அதிகமாயிற்று. இதை இவ்விதமே விட்டு விடக் கூடா... என்ற எண்ணத்தின் விளைவு தா... நான் நர்மதாவிடம் இன்று காட்டி... பாராமுகம்.

இரவு நான் வீடு திரும்ப... கொஞ்சம் லேட்டாயிற்று. அலுவ...கத்தில் அக்கவுண்டன்ட் ஒருவர் ஓய்... பெறுகிறார். அவருக்கு 'பிரிவு உபசா... விழா' நடத்தி அவரைப் புகழ்ந்து நினைவுப் பரிசு கொடுத்து ஒவ்வொ...வரிடமாய் அவர் விடைபெற்று... நே...மாகி விட்டது. அதில் வீட்டுக்கு வ... லேட்டாகி விட, நர்மதா இல்லை...



# நர்மதாவும்

இதையெல்லாம் சிவகாமியிடம் விலாவாரியாய் எடுத்துச் சொல்லவில்லை. களைப்பும், அயர்ச்சியும் சேர்ந்திருந்ததால் பதில் பேசாது படுத்து விட்டேன்.

"அவன் கிளம்பிச் சென்று விட்டான்" என்று சிவகாமி சேதி சொன்னாள். 'என்னைக் குற்றம் சாட்டுகிற தொனி' அவள் பேச்சில் இருந்ததை உணர முடிந்தது.

உண்மைதான். நான்கூட அவளிடம் ஏதேனும் கேட்டிருக்கலாம். கேட்டால் அவள் உடைந்து, சுய இரக்கம் அவளைப் பற்றிக் கொண்டு பிரச்னையின் தன்மையிலிருந்து அவளை விலகச் செய்து விடும். தன்னை அவள் உணர இயலாது போகும். 'அன்பு' என்பது சில சமயம் இவ்விதம் தான் பலவீனமாக்குகிற விஷயந்தான். நர்மதா பலவீனப்படுவதை நான் விரும்பவில்லை. அவள் உரமாய் நிற்பதைத்தான் நான் விரும்பினேன். அதனால்தான் அவள் பிரச்னையைக் கிளறாது போய் விட்டேன். அதனால் தான், "அடுத்து என்ன செய்வது?" என்று அவளே முடிவெடுத்துக் கிளம்ப வேண்டியதாயிற்று.

மறுநாள் கண்ணாடி பார்த்தபோது, மேலும் ஐந்தாறு நரை முடிகள் தலையில் தெரியலாயிற்று. கத்தரிக்கோலைக் கையில் எடுத்த போது, மனைவி சொன்னது ஞாபகம் வந்தது.

யோசித்தபோது ஒரு விஷயம் தெளிவாய்ப் புரிந்து போயிற்று. நர்மதாவின் பிரச்னையோ எனது நரை முடியோ இரண்டும் ஒன்றுதான். இதை இவ்விதம் சும்மா விட்டு விடுதலே உத்தமம். இரண்டுமே வெட்ட வெட்ட மறுபடி முளைக்கும். 'வயதானால் நரை' என்பது மாதிரி, குடும்பம் என்றால் பிரச்னை என்பதும் இயல்பான விஷயங்கள். 'இயல்பைத் தவிர்த்தல் இயலாத காரியம்.

தெளிந்த சிந்தனையோடு மறுபடி கண்ணாடி பார்த்தபோது, 'நரை' கம்பீரமாகத் தோன்றிற்று.

# சின்முத்ரா சிட்ஸ் (பி) லிட்.

சீட்டு நிதி வணிகத்தில்
புதிய குரூப்புகள் துவக்கம்!

குடும்பத்தோடு வாருங்கள்!
சின்முத்ரா வழங்கும் விழாக்கால
பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!

சின்முத்ரா
சின்முத்ரா
சின்முத்ரா
சின்முத்ரா
சின்முத்ரா
சின்முத்ரா

# சின்முத்ரா
## சிட்ஸ் (பி) லிட்

112, முதல் மாடி, இராமகிருஷ்ணா மடம் சாலை,
(இராணி மெய்யம்மை உயர்நிலைப்பள்ளி எதிரில்)
மந்தைவெளி, சென்னை-28. ☎ 4953192, 4953692

**B.O.: No.3, Arcot Road (Near Collector's Office)**
**Sathuvachari, Vellore - 632 009.**
**North Arcot, Ambedkar Dist.**

# மனசில இருந்தது கொட்டிட்டேன்!

**மனசில் ஆயிரம் விஷயங்கள் இருக்கும். சிலவற்றை வாய்விட்டுப் பேசிவிடுகிறோம். சிலவற்றை மெல்லவும் விழுங்கவும் முடியாமல் வைத்துக் கொண்டு தவிக்கிறோம். அப்படி மனசில் நெடு நாட்களாக வைத்துக் கொண்டிருக்கிற விஷயம் ஏதாவது இருக்கிறதா என்று மீனாவிடம் கேட்கப் போனோம்.**



புதிய பகுதி

ரொம்பவும் கேஷுவலாகத் தலையை ரப்பர் பேண்ட் போட்டு அடக்கி வைத்திருந்தார் மீனா. டைட்டான கறுப்பு கலர் பேண்ட். நீலத்தில் வெள்ளை, சிவப்புக் கட்டங்களுடன் ஷர்ட். கழுத்தில் தெரிந்தும் தெரியாமல் மெல்லிய செயின். நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார் போலிருக்கிறது. கண்களில் தூக்கம் பாக்கியிருந்தது.

" 'அவ்வை சண்முகி' படப்பிடிப்பு, கமல் ஸாருக்கு அடிபட்டதால் கேன்சல் ஆகிவிட்டது. அதுதான் நல்ல ரெஸ்ட்!"

நாம் விஷயத்தைச் சொன்னதும் அதுவரை ஜாலியாக இருந்தவர்

சீரியஸானார்.
"மனசுல எவ்வளவோ இருக்கு. ஆனால் சில விஷயங்களைச் சொல்லும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது அல்லவா? ஏனென்றால், சம்பந்தப்பட்ட நபர்களை நான் தினமும் பார்க்க வேண்டியிருக்குமே? மேலும், ராதிகா, லட்சுமி போன்ற ஸீனியர்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் தைரியமாகப் பேசுவார்கள். நான் அந்த லெவலுக்கு இன்னும் போகலியே!" என்றபடி கண்ணை மூடிக்கொண்டு யோசிக்க ஆரம்பித்தார்.

"சின்ன வயசிலிருந்தே எங்கே போனாலும் எனக்குப் பாதுகாப்பு அதிகம். பள்ளியில் படிக்கும்போது கொண்டு விடுவதற்கும், கூட்டி வருவதற்கும் காருடன் அம்மா வந்து விடுவார். என் தோழிகள் பஸ்ஸில் வருவதைப் பற்றியும், அதைப் பிடிப்பதில் உள்ள த்ரில்லைப் பற்றியும் சொல்லுவார்கள். நாமும் ஒருநாள் பஸ்ஸில் போனால் என்னவென்று ட்ரை பண்ணிப் பார்த்தேன். வடபழனிக்குப் போவதற்குப் பதிலாக, கே.கே. நகருக்குப் போய் விட்டேன்! வீட்டுக்கு வருவதற்கு அன்று லேட்டாகி, எல்லோரும் 'திக்திக்'குடன் காத்திருந்தனர்!

எதற்குச் சொல்கிறேன் என்றால், சின்ன சந்தோஷங்களைக் கூட என்னால் அடைய முடியவில்லை!

"படிப்பைப் பாதியில் முடித்துக் கொண்டு நடிகையாக மாறியவுடன் நிலைமை இன்னமும் மோசமாகப் போனது! தியேட்டரில் போய் ஒரு படம் பார்க்கலாம் என்றால் அதுக்குப் பல ஏற்பாடெல்லாம் செய்துவிட்டு, படம் துவங்கியவுடன் போய், ''இப்ப என்ன அதுக்கு?'' முடியும் சில நிமிஷத்திற்கு முன்னர் திரும்பி விட வேண்டும். படத்தின் தலையும், வாலும் புரியாது! துணிக் கடைக்குப் போய் ஆசைப்பட்ட துணியைத் தேர்ந்தெடுக்கலாம் என்றால், அது நடக்காது. கடைக்காரர், "நானே எல்லாவற்றையும் உங்க வீட்டுக்கு வந்து காட்டி விடுகிறேன்" என்பார். பிரபல ஹோட்டல்களில் நடக்கும் டிஸ்கோத்தே நடனத்தைப் பார்க்க வேண்டும் என்று ரொம்ப நாள் ஆசை. சென்னையில் முடியுமா? முழும் போட்டு கிசுகிசுத்துவிடுவார்களே! பம்பாயில் அம்மா அப்பாவுடன் ஒரு ஹோட்டலுக்குச் சென்றேன். ஆனாலும் கொடுத்து வைக்கவில்லை! ஏனென்றால் ஷூ போட்டிருந்தால்தான் டிஸ்கோத்தே ஹாலுக்குள் அனுமதி! நான் ஷூ போட்டுக் கொண்டிருந்தாலும் என் அம்மாவும் அப்பாவும் செருப்புப் போட்டுக் கொண்டிருந்தார்கள்!

''கல்லூரியில் படிக்க முடியவில்லையே என்ற ஆதங்கம் எனக்கு நிறையவே உண்டு. கட் அடிப்பது, சினிமாவுக்குப் போவது, புது லெக்சரர் வந்தால் நாற்காலிக்கு அடியில் பட்டாசு வைப்பது போன்ற சம்பவங்கள் நான் நடிக்கும் சினிமாக்களில் வந்தாலும் நிஜ வாழ்வில் அனுபவிக்க முடியலியே ஸார்! ஒரு பக்கம் பணம், புகழ் என்று இருந்தாலும் மற்றொரு பக்கம் சின்னச் சின்ன ஆசைக்கெல்லாம் 144.

"இதெல்லாம் தனிப்பட்ட வாழ்க்கை விவகாரங்கள் என்றால், தொழில்முறைப் பிரச்னைகள் பற்றி நீண்ட பட்டியலே உண்டு. ஷூட்டிங் ஒன்பது மணிக்கு என்றால் டாணென்று போக விரும்புவேன். ஆனால் இந்த டிராபிக் ஜாமில் மாட்டிக் கொண்டு படும் அவஸ்தை! லேட்டாகப் போய் அசடு வழிவது.. I simply hate it!

"மீனா... நீங்கதான் மெயின் கேரக்டர். தூள் பண்ணிடுங்க. என்றெல்லாம் சொல்லிவிட்டு, எனக்குச் சமமான இன்னொரு நடிகையைப் போட்டு என் காரெக்டரை துவம்சம் பண்ணும் நபர்களை நினைத்தால் பற்றிக் கொண்டு வருகிறது. இந்த double game ஆடுவது எனக்குப் பிடிக்காது. நானே நேரடியாகப் பேச வேண்டும் என்பதற்காக பி.ஏ. கூட வைத்துக் கொள்ளாமல் இருக்கிறேன்.


"எல்லோரிடமும் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டுமென்ற நினைப்பில் நாம் செயல்படும்போது, நம்மை அலட்சியப்படுத்தும் நோக்கத்துடன் நடந்து கொள்ளும் சிலர்...

என் வயதையொத்த சராசரிப் பெண்களின் நடை உடைகளைப் பற்றி விமர்சிக்கத் தயங்கி, அதே சமயத்தில் எங்களை மட்டும் வம்புக்கிழுக்கும் சிலர்... இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்..."

**- ப்ரியன்**

அட்டை வண்ணப்படம், படங்கள் : **யோகா**

---



''தரகரே! நேத்தி வில்லிவாக்கத்துல பார்த்த பெண்ணையே இன்று சைதாப்பேட்டைல காட்டறீங்களே?''

''நீங்கதானே நேத்து 'இந்த இடம் பிடிக்கலை. வேற இடத்துல பார்ப்போம்'னீங்க... அதான் இடத்தை மாத்திக்கிட்டேன்.''

– ஜூனியர் தேஜ்

# ஸகல காரிய ஸித்தி பெற

## உங்கள் பட்ஜெட்டில்
## 'லிப்கோ' விற்கும் இடம் உண்டு!

"சுக துக்கங்களையும், லாப நஷ்டங்களையும், வெற்றித் தோல்விகளையும் சமமாகப் பாவிப்பாய்"

- ஸ்ரீமத் பகவத் கீதை, 2-38



லிப்கோவின் வெளியீடுகளில் சில:

**ஸ்ரீமத் பகவத் கீதை**

தமிழில் மூலமும் உரையும் ரூ. 30

| | |
|---|---|
| கந்த புராணம் | ரூ. 42 |
| விநாயக விஜயம் (விநாயக புராணம்) - 320 பக்கங்கள் | ரூ. 25 |
| ஸ்ரீ லக்ஷ்மீ குபேர பூஜாக்ரமம் | ரூ. 2.50 |
| ஸுந்தர காண்டம் நவரத்ந மந்த்ர மாலா- | |
| " ஸம்ஸ்க்ருதம், தமிழ் | ரூ. 5 |
| " ஸம்ஸ்க்ருதம், ஆங்கிலம் | ரூ. 6 |
| ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் | ரூ. 35 |
| ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - 2 பாகங்களில் | |
| 1800 பக்கங்கள்-ஸ்ரீ C.R.S. தமிழ் வசனம் | ரூ. 250 |
| " ஆங்கில வசனம் | ரூ. 250 |
| நாலாயிர திவ்வியப் பிரபந்தம்- | |
| 2 பாகங்களில் 1670 பக்கங்கள் | ரூ. 100 |
| விரத பூஜா விதானம் | ரூ. 22 |
| குடும்ப ஜோதிடம் | ரூ. 22 |
| ஸ்ரீ தயாசதகம் - ஸம்ஸ்க்ருத, தமிழ் மூலம், உரையுடன் | ரூ. 20 |
| லக்ஷ்மீஸஹஸ்ரம் - ஸம்ஸ்க்ருதம், | |
| தமிழில் 1018 செய்யுட்கள் | ரூ. 60 |
| ஸ்ரீமத் பாகவத ரஸாம்ருதம் | ரூ. 30 |
| கீத கோவிந்தம் (அஷ்டபதி) | ரூ. 20 |
| ஸ்ரீ ஸுதர்சந ப்ரபாவம் | ரூ. 25 |
| நவக்ரஹ க்ஷேத்ர புராணம் | ரூ. 10 |
| விஷ்ணு புராணம் | ரூ. 42 |
| சமைப்பது எப்படி? | ரூ. 16 |
| உங்கள் இல்லம் (வீட்டுக் குறிப்புகள்) | ரூ. 30 |
| Household Hints | ரூ. 25 |
| Your Life & Fortune | ரூ. 20 |

தபால் செலவைத் தவிர்க்க உங்களூர் புத்தகக் கடையில் கேளுங்கள்.
லிப்கோவின் இலவச முழு விலைப் பட்டியலுக்கு எழுதுக.

**தி லிட்டில் ஃப்ளவர் கம்பெனி**
தி. நகர், சென்னை - 600 017
போன் : 4341538

RAE - 2931

**லிப்கோ- 68 ஆண்டுகளாக ஆன்மீக உலகில் பெரும்புகழ்!**

# அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில்

## ரூ.1500 முதல் பரிசு பெறும் கதை.



# கனகராஜன்

பேக்கரியில் கூட்டம்.

"மூணுல ஒண்ணு லைட் டீ."

பிறகு-

"உங்களுக்கு...?"

"சாப்பிடறதுக்கு என்ன இருக்குது?"

"வடை, போண்டா, பஜ்ஜி, பப்ஸ், முறுக்கு, மிக்சர், கேக், பிஸ்கெட்..."

"தேங்காய் பன்னு இருக்குதா?"

"இருக்குதுங்க..."

"ஒண்ணு கொண்டா..."

"உங்களுக்கு?"

"பால்டீ..."

"ஒரு பால் டீ.." டீ மாஸ்டரை நோக்கிக் கத்தினான் அப்பாண்டு.

"டேய்... குடிக்கறதுக்கு சுடு தண்ணி கேட்டனில்ல..."

"இதோ... கொண்டு வர்றனுங்க..."

"தம்பி... தீப்பெட்டி குடுப்பா..."

"இந்தாங்க..."

"தம்பி... டீ சொல்லி எவ்வளவு நேரமாச்சு?"

"உங்களுக்குத்தான் சார் டீ போடுது..."

அப்பாண்டு விரைவில் களைத்துப் போனான். மூன்று மணி என்கிற போதுதான் கூட்டம் கொஞ்சம் ஓயும். அப்போதுதான் மத்தியானச் சாப்பாடே சாப்பிட முடியும். மிஷின் மாதிரி இயங்கிக் கொண்டிருப்பான்.

"லுங்கி வேட்டிக்காரர்கிட்டே பத்து ரூபா வாங்கிக்குங்க... சார்கிட்டே மூன்று ரூபாய்..." ஓனரிடம் கணக்குச் சொல்ல வேண்டும்.

"அப்பாண்டு... உனக்கு எத்தனை வயசாச்சு?"

"பத்துங்க..."

"பள்ளிக் கூடம் போகலையா?"

"ரெண்டாம் வகுப்பு வரை படிச்சனுங்க..."





"அப்புறம்?"

"மேல படிக்கலீங்க..."

"ஏன்?"

"வூட்ல வேண்டாம்னுட்டாங்க."

"ஏன்?"

"கலெக்டர் வேலைக்கா போகப் போறேன்னு கேட்கறாங்க..."

"யாரு?"

"அம்மாவும் அப்பாவும்."

"உனக்குப் படிக்கணும்னு ஆசை இல்லியா?"

"இருக்குதுங்க... என்ன செய்யிறதுங்க? படிச்சிருந்தா அஞ்சாம் வகுப்பு வந்திருப் பனுங்க... இங்க பாருங்க தழும்பை."

இடது கையைக் காட்டினான்.

"ஷ்... என்னது?"

"சூடுங்க... அப்பா பீடியில வெச்சு விட்ட துங்க... நான் பள்ளிக்கூடம் போவேன்னு

# மறுபடியும்...

ரகளை செஞ்சேன்... அதனால சூடு வெச்சிருச்சிங்க... லாட்டரிச் சீட்டுக் கடையில வேலைக்குச் சேர்த்துவிட்டாங்க.."

"நீ ஒரே பையன் தானா?"

"எனக்கு ஒரு தம்பி இருக்கறானுங்க..."

"அவன் என்ன செய்யிறான்?"

"ரெண்டாம் வகுப்பு படிக்கறானுங்க... நல்லாப் படிப்பு வருதுங்க... அவனாவது நல்லாப் படிச்சு பெரிய ஆளா வரணும்னு காசு சேர்த்திட்டு வர்றனுங்க."

"பரவாயில்லையே..."

அப்பாண்டுவின் நிஜப்பெயர் அப்புசாமி. அது எப்படியோ அப்பாண்டு என்றாகி விட்டது. இந்த பேக்கரியில் இரண்டு வருடங்களாக வேலை பார்க்கிறான்.

கடை ஓனரிடம் தினமும் திட்டு வாங்குகிறான். அவனுடைய அப்பா குடிக்கக் காசு கேட்கிறார். அம்மா அடிக்கடி சினிமா பார்க்கக் காசு கேட்பாள். கருப்பராயன் நோம்பி அன்று வாங்கின உண்டியலில் கொஞ்சம் காசு சேர்த்து வருகிறான். தம்பியின் படிப்புச் செலவிற்கு.

புத்தகக் கடைக்கு டீ கொண்டு போய்த் தரும் போது காகித வாசனையை ரசிப்பான். கடை ஓனரின் மகனுக்கு இங்கேதான் புத்தகம் வாங்கினார்கள். புத்தகக் கட்டை வீட்டில் கொண்டு போய் வைத்து விட்டு வந்தான் அப்பாண்டு. தம்பியிடம் கிழிந்த புத்தகங்கள்தான் இருக்கின்றன. உடைந்த சிலேட்டு. காதறுந்த புத்தகப் பை. கிழிந்த சட்டை. இப்படித்தான் தினமும் பள்ளிக்கூடம் போய் வருகிறான்.


திருவள்ளுவர் திடலுக்கு மந்திரி வருகிறார். இதனால் கடைக்குள் கட்சி வேட்டிகளும் கட்சித் துண்டுகளும் காட்சி

**"ஏழு தலைமுறைக்கு உட்கார்ந்து சாப்பிடற மாதிரி அந்த ஆள் ஒரு வேலை செஞ்சுட்டார்."**

**"என்ன?"**

**"நல்ல டைனிங் டேபிள், சேர் செட் ஒன்னு வாங்கிட்டார்."**

**— வெ.ராஜாராமன்**





அளித்தன. வெளியேயும் ஆட்கள் டீயிற்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

"டேய் அப்பாண்டு... பார்த்துக் கவனி... கணக்கை கரெக்டா சொல்லணும்... காசு குடுக்காம நழுவிக்கிட்டுப் போயிடுவாங்க..." என்றார் ஓனர் காதோடு.

"தம்பி... இங்க வாப்பா. எவ்வளவு நேரம் வெளியில வெயில்ல நிக்கறது? பால் டீ சொல்லி அரைமணி நேரமாச்சே..."

"அண்ணா... டீ போட்டாச்சுங்க..."

உள்ளே டீ சாப்பிட்டு முடித்தவர்கள் சாவகாசமாக சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு கதை பேசினார்கள்.

"அண்ணா... வெளியில நெறையப் பேர் நின்னுகிட்டு இருக்கறாங்க. டீ சாப்பிட்டு முடிச்சா கொஞ்சம் எந்திரிச்சு இடம் கொடுங்க..."

முறைத்தார்கள்.

"டேய்... நேத்தத்த பன்னு மாதிரி இருக்குது... கல்லு மாதிரி... இதை எடு முதல்ல... மனுசன் சாப்பிடுவானா?"

"ஏம்ப்பா இங்க வா..." ஒரு மீசைக்காரர் கூப்பிட்டார்.

"நான் என்ன டீ கேட்டேன்?"

"ஸ்ட்ராங் டீ..."

"நீ பாட்டுக்கு லைட் டீ தந்திட்டுப் போறே?"

"அண்ணா.. ஸ்ட்ராங் டீ தாண்ணா...."

"எனக்குத் தெரியாதா? டிகாஷன் விட்டுக் கொண்டு வா... போ..."

"டேய் அப்பாண்டு... இவரு கணக்கு எவ்வளவு?"

மனத்திற்குள் கூட்டினான்.

"எட்டு ரூபாய்... அம்பது காசு..."

"பப்ஸ் கொண்டு வாப்பா..."

"ரெண்டு பால் டீ, ஒரு காபி..."

"இங்க ஒரு டீ..."

"தம்பி நாலு டீ சொல்லு..."

டீ மாஸ்டரைப் பார்த்துக் கத்தினான், அப்பாண்டு.

"எட்டுல ரெண்டு பால் டீ, ஒரு காபி..."

ஐந்து டீ தம்ளர்களை ஒரு கையால் கொண்டு வர முயன்றான். யாருடைய கையோ தட்டி விட்டது.

"டமார்!"

கண்ணாடி தம்ளர்கள் உடைந்தன. ஆட்கள் மேல் டீயெல்லாம் சிதறியது.

"என்னடா ஆச்சு...?" ஓனர் ஓடி வந்தார்.

"உடைச்சிட்டியா? முண்டம்.. அறிவு கெட்ட முண்டம்... உருப்படியா ஒரு வேலை செய்யத் தெரியுதா?"

கன்னத்தில் இரண்டு அறை விட்டார். கண்கள் கலங்கின.

"ச்சே... வேட்டி, சட்டையெல்லாம்

நாறடிச்சுட்டான். தலைவருக்கு இந்த அலங் கோலத்தோட போய் எப்படி மாலை போடறது? இங்க பாருடா என் வேட்டி, சட்டையெல்லாம்..." ஒரு ஆள் கத்தினான்.

"அண்ணா தெரியாம..."

"பேசாதடா... மூஞ்சி மேல ஒண்ணு விட்டன்னா தெரியும்..."

"ச்சே...வேற கடைக்குப் போயிருக்கலாம்..."

"பொறுக்குடா கண்ணாடிச் சில்லெல் லாம்... எடத்தை சுத்தம் பண்ணு... மூதேவி... முழியப் பாரு..."

ஆள் ஆளுக்குத் திட்டினார்கள்.

"மளமளன்னு சுத்தம் பண்ணுடா... ஒரு வாரத்துக்கு உனக்கு பேட்டா காசு கெடை யாது. தம்ளர் செலவையும் டீச் செலவையும் உன் சம்பளத்தில் புடிக்கறேன்... என்னடா அழுகாச்சி வேண்டிக் கெடக்குது..."

'நங்'கென்று ஒரு குட்டு விழுந்தது.

"என்னங்க கடையில பையனைக் காணோம்?"

"அப்பாண்டுங்களா? அவன் எங்கியோ ஓடிப் போயிட்டானுங்க..."

"ஓடிப் போயிட்டானா? எங்கே போனான்..?"

"தெரியலீங்க... அவங்க வூட்டிலேயும் ஒரு வாரமாத் தேடறாங்க... தம்ளர்களை உடைச்ச அன்னிக்குப் போனவன்தான். அன்னிக்கு அவன் அப்பன்கிட்டேயும் ஒதை விழுந் திருக்கு..."

"அடி தாங்காம ஓடியிருப்பான் போலி ருக்குது..."

"திமிருங்க..."

"சார்... என்ன வேணுங்க...?"

"என்ன இருக்குது?"

"வடை, போண்டா, முறுக்கு, மிக்சர்..."

"வடை ரெண்டு குடு..."

"வேற...?"

"ஒரு டீ...."

"டீ ஒண்ணு...." சுப்புணி டீ மாஸ்டரைப் பார்த்துக் குரல் கொடுத்தான்.

"பையன் யாரு...?"

"இவனுங்களா? அப்பாண்டோட தம்பி..."

"அப்படியா?"

"போன வாரம்தான் வேலைக்குச் சேர்ந் தான்... அப்பாண்டை விட நல்ல சுறுசுறுப்பு..."

சுப்புணியின் நிஜப் பெயர் சுப்பிரமணி. எப்படியோ சுப்புணி ஆகி விட்டான். அவன் வலது தொடையில் ஒரு காயம் இருக்கிறது. 'படிக்கறேன்' என்று ரகளை செய்தவனுக்கு அவன் அப்பா போட்ட சூடு.

"அண்ணன் கிட்ட மூன்று ரூபாய் வாங்கிக்குங்க..."

அப்பாண்டு மாதிரியே இருந்தான்.

**புதிய பகுதி:**

# வாரம் ஒரு போட்டி!

## பரிசு ரூ. 5000!

ஜாலியா போட்டிகள் வெச்சி கொஞ்ச நாளாச்சு இல்லை? இதோ, ஆரம்பிச்சுட்டோம்!

### போட்டி - 1

ஒரு ஜோக்கை அஞ்சு துண்டா வெட்டி, அங்கங்க ஒளிச்சி வெச்சிருக்கோம்.

நீங்க செய்ய வேண்டியது என்ன? ரொம்ப ஈஸி! இஷ்யூ முழுக்க, வரிவிடாம படிச்சீங்கன்னா மேட்டருக்கு நடுவுல, சம் பந்தமில்லாம அந்த அஞ்சு பகுதிகள் எங்கெங்கேயாவது தட்டுப்படும். சேர்த்து, தொகுத்து, முழு ஜோக்கா கூப்பன்ல எழுதி அனுப்புங்க.

சரியா எழுதறவங்களுக்குப் பரிசு ரூ.5000/- நிறையப்பேர் சரியா எழுதிட்டா?

வேற வழி? குலுக்கல்தான். கூப்பன் வந்து சேரக் கடைசி நாள் 12.8.96.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

**ஜாலி போட்டி - 1**

தேடி எடுத்த ஜோக்:

என் பெயர் :.................................................

முகவரி:.......................................................

.....................................................................

.....................................................................

.....................................................................

.....................................................................

# திக்குவாய் வியாதிலிருந்து நான் மீண்டது எப்படி?

நலமடைந்தவரின் கடிதம் : A.ஜான் கென்னடி,
No.7. புலியூர் வன்னியர் தெரு, கோடம்பாக்கம், சென்னை -24

அன்புள்ள டாக்டர் ரியாத் அவர்களுக்கு, என் மனமார்ந்த நன்றி!

நான் கடந்த ஐந்து வருடமாக திக்கு வாயால் மிகவும் பேச முடியாமல் இருந்தேன். டாக்டர் ரியாத் அவர்களிடம் அக்குபஞ்சர் என்ற சிகிச்சை மூலமாக 3 மாதம் எடுத்துக் கொண்டேன். 3 மாதம் மருந்தும் சாப்பிட்டேன். இப்போது எனக்கு மிகவும் நல்ல பேசும் வாய்ப்பு கிடைத்து விட்டது. இந்த சிகிச்சை எனக்கு மிகவும் பயனுள்ளதாய் இருந்தது. நன்றி திரு. டாக்டர் ரியாத் அவர்களுக்கு.



ஜான் கென்னடி

தங்கள் அன்புள்ள
**A.ஜான் கென்னடி**



Dr Riyaz MHDC
D.Ac., C.Ac. (Sri Lanka)

**தலைவலி, மூளைக் கோளாறு, தூக்கமின்மை, காது மந்தநிலை, குடல்புண், இளம்பிள்ளை வாதம், சிறுநீரக கோளாறு, ஞாபக மறதி போன்ற வியாதிகளுக்கு குணமாக அணுகவும்.**

## Dr. RIYAZ (M.D) D.A.C.,

Regd No. 3795

**INDIAN HERBAL MEDICAL FITNESS CENTRE**


**Lucky Plaza,**

RANGANATHAN STREET, T.NAGAR, MADRAS - 17.

# தனாகர்ஷண எந்திரங்கள்/சக்கரங்கள்

சர்வசக்தி வாய்ந்த முறைபடி தயாரிக்கப்பட்ட இந்த எந்திரங்கள் தங்கள் இஷ்ட சித்தியை உடன் பூர்த்தி செய்கின்றன. செல்வ சூழலை ஏற் படுத்துகின்றன. ஜோதிட ஆகம சாஸ்திர முறையில் தயாரிக்கப்படும் இந்த எந்திரங்கள்/சக்கரங்களுக்கு உலகளவில் பெரும் ஆதரவு ஏற் பட்டுள்ளது.

உங்கள் தேவைக்கு உடன் எழுதி பயன் பெறுங்கள்.



| | | ரக்ஷை ரூ. | எந்திரம் ரூ. |
|---|---|---|---|
| 1 | திடீர் லாபம் குபேர தனாகர்ஷணம் | 1000/- | 1500/- |
| 2. | வியாபாரம் ஜனாகர்ஷணம் | 1000/- | 1500/- |
| 3 | திருமணம் ஸ்வயம்வரா | 750/- | 1250/- |
| 4 | புத்ரபாக்யம் சந்தான கோபாலம் | 750/- | 1250/- |
| 5 | கலவி அபிவிருத்தி வாகீஸ்வரி | 750/- | 1500/- |
| 6 | சத்ரு உபாதை நிவர்த்தி மகாசூலினி | 750/- | 1500/- |
| 7. | நோய.திருஷ்டி தோஷ நிவர்த்தி தன்வந்திரி | ·750/- | 1500/- |
| 8. | அதிகாரி வச்யம் ப்ரத்யங்கிரா | 1000/- | 1500/- |
| 9. | ஸகல க்ஷேம அபிவிருத்தி மகா சுதர்சனம் | 750/- | 1500/- |
| 10. | மஹாலக்ஷ்மி ஸ்ரீ சக்ரா டாலர் | 200/- | 1500/- |

தங்கள் பெயர், நக்ஷத்திரம் தெளிவான விலாசத்துடன் MO/DD SWAYAMVARALAYA (ஸ்வயம்வராலயா) பெயரில் சென்னையில் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். வெளிநாட்டு அன்பர்கள் 100% கூடுதல் தொகை அனுப்பி பெற்றுக் கொள்ளவும். அதிகச் சக்தி வாய்ந்த (SUPER POTENCY) ரூ.க்கு எந்திரங்கள் விலை விபரம் தனியாகத் தெரிந்து கொள்ளவும்.

**ஸ்வயம்வராலயா** (GOVT.REGD)

18, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை – 33. போன் : 425822,4846427

**CONSULT DIVINE ASTROLOGER THETIYUR V MAHADEVAN WITH PRIOR APPOINTMENT**

ஹாய், நான்தான் சுமி! மெட்ராஸ் மெடிக்கல் காலேஜுல மூணாவது வருஷம் படிச்சிட்டிருக்கேன். தற்செயலா ஒருநாள் உங்க கல்கி எடிட்டர், மியூசிக் அகடமியில எனக்கு அறிமுகமானாங்க. சட்டுனு, "நீ படிக்கறியா? இல்ல, நடிக்கறியா?"ன்னாங்க. (அவ்ளோ அழகா இருந்தேனாம்.)

அழகா இருக்கறது (காட்டிக்கறது) பெரிய கஷ்டம் ஒண்ணுமில்லை. உடல் ஆரோக்கியமா இருந்தா, பொலிவு முகத்துல தெரியும் அப்படீன்னேன்.

"டாக்டர் புத்தியைக் காட்டறே பாத்தியா?" அப்படீன்னாங்க.

'நிறையப் பேர் இப்படித்தான். ஆரோக்கியம் அப்படீன்றதை மருத்துவத்தோடு இணைச்சே பார்க்கறாங்க. ஒண்ணுக்கு ஒண்ணு சம்பந்தமில்லை' அப்படீன்னேன்.

'அட, இந்த தியரி நல்லா இருக்கே? இதை பேஸ் பண்ணி வாரம் ஒரு பக்கம் ஆரோக்கியம் பத்தி எழுது'ன்னாங்க. நமக்கு இலக்கண சுத்தமா எல்லாம் வராது. இப்பவே சொல்லிட்டேன்.

தலைலேருந்து ஆரம்பிக்கவா? வேணாம், லைமுடி? ஓகே.

எந்த டீ.வி. சேனலை வேணா ஓப்பன் பண்ணிப்பாருங்க. பட்டுப் போன்ற கூந்தல், பஞ்சு போன்ற கூந்தல் அப்படி இப்படின்னு நொடிக்கு நூறு ஷாம்பூ அட்வர்டைஸ்




# ஹலோ, சுகமா?

# எறும்பார் கடிக்கிறார்!

''பத்திரிகையாளர் மீது படும் ஒவ்வொரு அடியும் என்மீது படுவது போல் ஆகும்...''
—தமிழக முதல்வர்




புதிய பகுதி:

மெண்ட்ஸ் வருது. இன்னொரு பக்கம் ஹேர்-டை விளம்பரங்கள். 'மஞ்சு ஆன்ட்டி' எப்படி 'மஞ்சு அக்கா' ஆகறான்னு ஒரு ஷார்ட் ஸ்டோரியாவே காட்டறாங்க. தவிர, பொடு கைப் போக்க மூலிகைப் பொடி விளம்பரங்கள்.

தலையைப் பிச்சிக்கலாம் போல இருக்கும் இல்லை?

ஆனா அதுக்கு அவசியமே இல்லை. அத்தனையையும் வாங்கி ஒரு ஆறுமாசம் விடாம யூஸ் பண்ணுங்க... தானா உதிர்ந்துடும்!

பிளீஸ்... நான் பயமுறுத்தறதா நினைச்சுக் காதீங்க. நம்ம கூந்தல் இருக்கே... அது மனசை விட ரொம்ப ஸாஃப்டான விஷயம். நூத்துக் கணக்குல கெமிக்கல்ஸ் கலக்கற ஷாம்பூ, ஹேர்-டை இதெல்லாம் தலைமுடிக்குப் பிடிக்காத விஷயம்.

கூடியமட்டும் கெமிக்கல்லை அவாய்ட் பண்ணணும். 'என்னடா, இவ எம்பிபிஎஸ் ஸ்டூடன்டா, பாட்டி வைத்திய பி.ஆர்.ஓ வான்னு சந்தேகம் வருதா?

வெல், சில டிப்ஸ் தரேன். கன்டின்யூவஸா ஆறு மாசம் செஞ்சுப் பாருங்க. (ஹலோ, லேடீஸ்-ஜென்ஸ் ரெண்டு பேருக்கும்தாங்க!) இந்த... மேகக்கூந்தல், நாகக் கூந்தல் அப்படி இப்படின்னு சொல்வாங்களே... அது உங்களுக்கு சாத்தியமாயிடும்!

1. தலைக்கு சோப்பு - ஷாம்பு போடவே போடாதீங்க. பதிலா என்ன பண்ணலாம்? சிம்பிள்! சீக்கா! அதுவும் வீட்டுல காய்வாங்கி, மிஷின்ல அரைச்சுக்க முடியும்னா பெட்டர்.

2. இந்த தேங்கா எண்ணெய் இருக்கு பாருங்க... அதை வெறுமனே தலையில தடவறதுக்குப் பதிலா சில சாமக்கிரியைகள் சேர்த்துப் பண்ணிப் பாருங்க. கீழாநெல்லி இலை, மருதாணி இலை, முளைகட்டிய வெந்தயம் மூணையும் சேர்த்து அரைத்துப் போட்டு, எண்ணெயைக் காய்ச்சி, ஆற வெச்சி, உச்சந் தலையில பரபரன்னு தேய்ச்சி ஒரு பத்து நிமிஷம் ஊறினப்புறம் குளிங்க. பகல் பத்து, பதினோரு மணிவாக்குல, கண்ணை மட்டும் ஃப்ரீட்ஜுல வெச்சாப்பல ஜில்லுனு இருக்கும். (தலை முடிக்கு நல்ல உரம்ங்க இது!)

3. இந்த கால்ஷியம், அயர்ன் சத்தெல்லாம் உடம்புல குறைஞ்சா முடி உதிரும்னு சொல்வாங்க. என்னைக் கேட்டா, முடி உதிர் வதற்கு முக்கியமான காரணம் பொடுகு. இந்தத் தொல்லைக்கு ஆயிரம் வழி- நிறைய புக்ஸ்ல படிச்சிருப்பீங்க. எனக்குத் தெரிஞ்ச சிம்பிள் வழி - ஹோமியோபதில இருக்கு. நல்ல ஹோமியோபதி டாக்டரைப் பார்த்து, பத்து ரூபா தட்சணை வெச்சு, விவரம் சொல்லுங்க. பச்சை கலர்ல ஒரு ஆயில் குடுப்பாங்க. தினசரி தேங் காய் எண்ணெய்க்குப் பதில் அதைத் தடவிட்டு வந்தா, பொடுகு ஒரு வாரத்துல போயிடும். தவிர, வீரிய உரம் போட்டாப்பல முடி வளரவும் ஆரம்பிச்சுடும்.


என் பாய்ஃப்பிரெண்ட் கிருஷ்ணன்னு ஒருத்தன். இப்படித்தான்... பொடுகுத் தொல் லையால எப்பப்பாரு பாலுமகேந்திரா மாதிரி குல்லா போட்டுட்டே இருப்பான். அப்புறம் நான்தான் விஷயம் தெரிஞ்சுக்கிட்டு ஒரு ஹோமியோபதி டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போனேன். நான் சொல்லலை? அந்தப் பச்சை ஆயில்? அதான் குடுத்தார். இப்ப பொடுகு போன நிம்மதியோட உல்லாசமா எஸ்.ஐ.ஈ.டி. காலேஜ் பக்கமா சாயங்கால நேரத்துல உலா போயிட்டிருக்கான்.

அதிகம் வெயில்ல சுத்தறது, அதிகம் தண்ணியில நனையறது, மாசக்கணக்குல தலைக்குத் தண்ணியே காட்டாம இருக்கறது, மாடர்ன் ஆர்ட் மாதிரி கச்சாமுச்சான்னு பல்லு வெச்ச சீப்பால வார்றது (ஸ்பெல்லிங் கரெக்டா?) இதெல்லாம் முடிவிரோத நடவடிக்கைகள். தபலா வித்வான் ஜாகிர் உசேன், நடிகர்கள் அக்ஷய் குமார், ராம்கி, மாதுரி இவங்களுக்கெல்லாம், இவங்க தலைமுடிக்கே நிறைய ஃபேன்ஸ் உண்டாம்!

நான், டி.என். சேஷன், சோ இவங்களோட ஃபேன்.

(மீண்டும் நெக்ஸ்ட் வீக்)

# வாழ்வில் முடிவெடுத்த அந்தத் தருணம் என்றும் பசுமையானது...



## அதற்கு ஈடான மற்றொரு தருணம் நீங்கள் யெஸ்டி அஸோஸியேடட் பில்டர்ஸிடம் இல்லம் வாங்கும் இனிய தருணம்தான்!

அண்ணா நகர், தி. நகர், நங்கநல்லூர், வேளச்சேரி
மற்றும் பிற இடங்களில் அழகிய தரமான
டீலக்ஸ் ஃபிளாட்டுகள் மற்றும்
தனி வீடுகள் வாங்க

அணுகுங்கள்

CREATORS NOT JUST BUILDERS

**YESDE ASSOCIATED BUILDERS LTD.**

FLAT PROMOTERS & PROPERTY DEVELOPERS

26, Ranganathan Street, IInd Floor, T. Nagar, Madras - 600 017.

Phone : 4340224/4340210/4342667. Fax : 044-2344333


HITECH 9604

12

**ச**ர்க்கரைப் பொங்கல் பாடம் உணர்த்தியது எப்படி?

விதண்டாவாதம் பண்ணிய சிஷ்யன் அதைச் சாப்பிட்டு முடித்தான். குரு இன்னொரு சிஷ்யனை அழைத்தார். துளி சீயக்காய்ப் பொடி கொண்டு வரச் சொன்னார். முதலாமவனிடம் அதைத் தரச் சொன்னார். தானும் கொஞ்சம் வாங்கி வைத்துக் கொண்டார். "சீயக்காய்ப் பொடி போட்டு அவன் கையை நன்னா அலம்பிண்டு வரட்டும்... மற்றவர்களுக்கு அவன் சர்க்கரைப் பொங்கல் பரிமாறணும்..." என்றார்.

அவனும் சீயக்காயைப் போட்டு கையை நன்றாக அலம்பிக் கொண்டு வந்தான்.



# யொன்றுமில்லை

## முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

ஆசார்யார் அவனை அழைத்து, தன் கையிலே இருந்த சீயக்காய்ப் பொடியைக் காண்பித்து, "கையை நீட்டு... சீயக்காய்ப் பொடி போடறேன்" என்றார். அதற்கு அவன் சொன்னான்: "சுவாமி கையிலே பிசுக்கில்லை. சுத்தமாகிவிட்டது. போதும். சீயக்காய் இனி வேண்டாம்."

அப்போது குருநாதர் சொன்னார் : இது உன கை பிசுக்குக்காக இல்லை; உன வாயிலே, நாக்கிலே இருக்கிற பிசுக்கு போகறதுக்காகப் போடறேன்" என்றார். "கொஞ்சம் நாக்கிலே போட்டுத் தேயேன்..."

"நாக்கிலே ஒட்டிக்கலையே சுவாமி..."

"இப்ப அந்த வேத வாக்யம் உனக்குப் புரிகிறதா?" என்றார் குரு.


"புரிஞ்சுடுத்தே! புரிஞ்சுடுத்தே" என்று மாணவன் கீழே விழுந்து விழுந்து சேவித்தானாம்!

ஒரு சின்ன, எளிய பதார்த்தமநெய். நம் கையிலே ஒட்டிக் கொள்வது போல் நாக்கிலே ஒட்டிக் கொள்வதில்லை... அப்படி ஒட்டிக் கொண்டால் சீயக்காய்ப் பொடியைப் போட்டல்லவா தேய்க்க வேணும்...!

"ஒரு சாதாரண பதார்த்தமே இப்படி என்னும்போது, எல்லாவற்றையும் காத்து ரக்ஷிக்கிற அந்த சர்வேசுவரனுக்கு இந்த சக்தி இராதா? அவனை நாம் சாமான்யமாக எடை போடலாமா? 'வேதம் இப்படிச் சொல்கிறது' என்று சொன்னால், நான் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று நீ சொல்வது பாவ்யமா?" என்று ஆசார்யா சிஷ்யனைப் பார்த்துக் கேட்டார்.

"நான் ஒப்புக் கொண்





டேன் சுவாமி!" என்றான் அவன்.

"இவ்வளவு தூரம் இதை வெளிப்படையாகக் காண்பித்துச் சொல்ல அவசியமில்லை. வேதம் சொல்கிறது என்றால் நாம் அதை அப்படியே நம்பலாம். ஏனென்றால் அதில் பொய்யான வார்த்தை எதுவும் இல்லை. பரமாத்மா எதிலும் ஒட்டிக் கொள்ளாமல், குண - தோஷங்கள் அற்றவனாக இருக்கிறான் என்பது வேத வாக்கு..." என்று விளக்கினார் ஆசார்யர்.

சூர்ய ரச்மி ஒரு நதியிலே விழுகிறது. அதே சூர்ய ரச்மி கோபுரத்திலே விழுகிறது; சாக்கடையிலும் விழுகிறது. அந்த இடங்களுடைய குண தோஷங்கள் சூர்ய ரச்மியில் ஒட்டிக் கொள்கிறதா என்ன...!

அதைப் போல்தான், எம்பெருமான் எங்கேயிருந்தாலும் அவன் இருப்பிடத்தின் குண தோஷங்கள் அவனிடத்தில் சேர்வதில்லை. அதனால்தான் அவன் பூதாத்மா ஆகிறான். நமக்குள்ளே இருந்தாலும் நம்முடன் ஒட்டிக் கொள்ளாமல் இருக்கிறான்.

சஹஸ்ரநாம பாஷ்யத்திலே பராசர பட்டர் ரொம்ப அழகாக எழுதுகிறார். அதை இன்னொரு உபமானமாகச் சொல்லலாம்.

ஒரு பள்ளியிலே உபாத்யாயர் மாணவனிடம் 'வீட்டுப் பாடம் எழுதிண்டு வந்தாயா?' என்று கேட்கிறார். எல்லோரும் எழுதி வந்திருக்க, அவன் மட்டும் எழுதவில்லை. அவருக்குக் கோபம் வந்தது. நீளமான பிரம்பை எடுத்தார். இரண்டு கையையும் நீட்டச் சொன்னார். இந்தக் கையிலே ஆறடி; இன்னொரு கையிலே ஆறடி ஓங்கி அடித்தார். வலியிலே துடிக்கிறான் அவன். அடுத்த அடிக்குக் கையை நீட்ட அவனால் முடியவில்லை!

அடித்த அந்த பிரம்பு இருக்கிறதே... அதனுடைய சம்பந்தம் பள்ளி ஆசிரியருக்கும் உண்டு; பையனுக்கும் உண்டு. பிரம்பின் இந்த நுனியை அவர் பிடித்துக் கொண்டிருக்கிறார்; அந்த நுனி அவன் கையில் விழுகிறது. ஆனால் அடிக்கின்ற ஆசிரியருக்கு ஏதாவது நோவு, கிலேசம், கஷ்டம் என்பது உண்டோ...? இல்லவே இல்லை.. ஆனால் அடிபடும்படியான மாணவன் துடிக்கிறான்!

அந்த மாதிரி, பரமாத்மா பிரம்பைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறான்! பரமாத்மா இருக்கிற இந்த சரீரம் என்பது பரமாத்மா இருக்கிற இடமாகவும் உள்ளது; ஆனால் கிலேசங்கள் எதுவும் அவனுக்கு இல்லை. இதைத்தான் புருஷ சூக்தம் தெரிவிக்கிறது. அப்படிப்பட்ட புருஷன்தான் விச்வ சப்தத்தினாலே சொல்லப்படுகிறான்.

சர்வ பதார்த்தங்களுக்குள்ளே அவன் இருந்தாலும் அவற்றுடைய குண தோஷங்கள் எல்லாம் ஒட்டிக் கொள்ளாதவனாக அவன் இருக்கிறான். உத்தமோத்தமனான எம்பெருமானுடைய அந்தப் பெருமையைத்தான் 'புரிசயனாது' என்றது.

அடுத்து பகு தானது. கேட்கும் வரமெல்லாம் கொடுப்பான். வாரி வழங்குவான். மோட்சத்தையே கொடுப்பான். மோட்சத்தையே கொடுக்கும்படியான எம்பெருமான் இந்த லோகத்து சந்தோஷங்களையெல்லாம் கொடுத்து மோட்சத்தையும் கொடுப்பான்!

அதனால்தான் சாஸ்திரங்கள், 'அவனிடத்திலே போய் எதையும் கேட்காதே..' என்று நம்மை சிக்ஷிக்கின்றன. நாம் கேட்டால் ஏதாவது அல்பமான பொருளைக் கேட்போம். அவனோ வாரி வாரி வழங்கக் கூடியவன். அதனால், அவனிடத்திலே யாசிக்காதே; கட்டாயம் அவன் கொடுப்பான். பரிபூரணமாக விச்வாசிக்க (நம்ப) வேண்டும் அவ்வளவுதான்.

ஒரு சரித்திரத்திலே இந்த உண்மை தெரிகிறது.

குசேலர் பகவானைப் பார்க்க வருகிறார். பகவான் கிருஷ்ணன் பண்ணுகிற உபசாரத்திலே கூசிப் போய் உட்கார்ந்திருக்கிறார். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு சிசுருஷை பண்ண,




— எஸ். முகம்மது யூசுப்

சாக்ஷாத் மகாலக்ஷ்மியே விசிறுகிறாள்.

சுற்றியிருப்பவர்கள், 'இந்த பிராமணன் ஜன் மாந்திரத்திலே என்ன புண்ணியம் பண்ணி னாரோ! இப்படி ஒரு போகம் அனுபவிக் கிறாரே.. மகா லக்ஷ்மியே விசிறுகிறாளே...' என்று ஆராய்ச்சியில் இறங்கி விட்டார்கள்!

குசேலரோ பிரமித்துப்போய் பிம்பம் மாதிரி சிலை மாதிரி உட்கார்ந்திருக்கிறார்!

மஹாலக்ஷ்மி பகவானிடம் கேட்கிறார் : "இந்த பிராமணர் எந்தத் திக்கிலிருந்து வந் தார்...?"

யாராவது நம் வீட்டுக்கு வந்தால் 'இவர் எந்த ஊரிலிருந்து வந்தார்' என்று கேட்போம். 'கிழக்கா? மேற்கா?' என்று திக்கை யாராவது கேட்பாரோ...? மஹாலக்ஷ்மி கேட்கிறாள்!

கபட நாடக சூத்ரதாரியான பகவான் அவள் குறிப்பை நன்றாக உணர்ந்தான். உடனே இரண்டு கைகளையும் விரித்து, "இந்தப் பக்கம்.." என்று அழுத்தி ஜாடை காட்ட, அந்த திக்கை மஹாலக்ஷ்மி நோக்க, அஷ்ட ஐஸ்வர் யங்களும் போட்டி போட்டுக் கொண்டு அந்த திக்கை நோக்கிப் போயினவாம்.

இரவெல்லாம் நண்பர்கள் கிருஷ்ணனும் குசேலனும் பழைய கதைகள் பேசி மகிழ்ந்தார் களாம். விடிந்து எழுந்ததும் குசேலருக்குப் போகவும் மனமில்லை. கிருஷ்ணனுக்கு அனுப் பவும் மனமில்லை. ஆனால் புறப்பட்டாயிற்று.

ஒரு ரூபாயாவது தட்சணை கொடுக்க வேண்டாமோ..? ஒன்றும் கொடுக்கவில்லை பக வான்.

குசேலர் தம் வீட்டை நோக்கி வருகிறார். 'சின்ன வயதிலே நடந்ததையெல்லாம் கண்ணன் ஞாபகத்துக்குக் கொண்டு வந்தானே' என்று நினைத்த வண்ணம் வரும்போது, நூறு வேத வித்துக்கள் எதிரே பூரண கும்பத்தோடு நின்றார்கள்.

குசேலர் பின்னால் திரும்பிப் பார்க்கிறார். - 'பூரண கும்ப மரியாதைக்குரிய பெரியவர் யாரேனும் வருகிறார்களா?' என்று.

"சுவாமிக்குத்தான்" என்கிறார்கள் வேத வித்துக்கள். பூரண கும்பத்தைத் தொட்டுவிட்டு ஊருக்கு உள்ளே போகிறார். 'இந்த ஊரா...!' என்று சந்தேகம் வந்து விடுகிறது அவருக்கு... குடிசையைத் தேடுகிறார். தேவேந்திர பவனம் போல், ஒரு பவனத்திலிருந்து ராணி வந்து அவரை சேவிக்கிறாள். அட்சதை தட்டு நீட்டப் படுகிறது.

தர்மபத்னியின் பெயர் சுட்சாமா - பசியி னால் ஒடுங்கியவள் என்று அர்த்தம்!

அட்சதையை எடுத்து சுட்சாமாவுக்குத் தூவி "தீர்க சுமங்கலி பவ!" என்று ஆசிர்வதிக் கிறார் குசேலர்.

பத்தினி பதறுகிறாள். "சுவாமி! இப்படிச் சொல்லலாமா...?" என்கிறாள்.

'தீர்க்கசுமங்கலி' என்று சொன்னால் அது என்ன தப்பான ஆசியா...? கிடையாது! ஆனால் கணவன் தன் பத்னியை அப்படி ஆசி பண்ணக் கூடாது. அது தன் தலையிலேயே அட்சதையைப் போட்டுக்கற மாதிரி! - இந்த சின்ன சாஸ்திரம் குசேலருக்குத் தெரியாதா? 64 நாளில் 64 சாஸ்திரத்தை கிருஷ்ணனுடன் சேர்ந்து பயின்றவராயிற்றே.. அவருக்குத் தெரி யாமல் இருக்குமா... தெரியும்! ஆனால் வந்து நமஸ்கரித்தவள் யாரோ ராணி என்று நினைத் துக் கொண்டு விட்டார்!

மஹாலக்ஷ்மி கடாக்ஷம் வேண்டும் என்று குசேலர் கேட்டாரா...? இல்லை! ஆனால் எப் படிப்பட்ட ஐஸ்வர்யம் கிடைத்தது!

அப்படிக் கொடுப்பதுதான் அவன் குணம். **பஹுதானாது புருஷ:** அவன் கொடுக்க ஆரம் பித்துவிட்டால் நம்மாலே தாங்கவே முடியாது!

**புராணத்துவாது புருஷ:** புராணம் என் றால் ரொம்பப் பழமையானவன். பழமையி லேயே புதுமையானவன்! அவனுடைய ஆதி எது என்று நமக்குத் தெரியுமா?

**பூர்ணத்துவாது புருஷ:** 'எல்லாம் நிறை வானவன். குறைவே இல்லாது சர்வமும் நிறைந்து விளங்கக் கூடியவன்' என்று அழகான இந்த புருஷ சப்தத்துக்கு நான்கு பொருள் சொன்னார்கள்.

விச்வ சப்தத்தினாலே சொல்லப்படக்கூடிய புருஷனாகிற அந்த எம்பெருமானை ஆச்ர யித்து (வணங்கி) எல்லோருமே ஜீவிக்கிறோம்.

(தொடரும்)



"போன தேர்தல்ல, ஓட்டுப் போட்டவங் களுக்கு சில்வர் குடம் கொடுத்துட்டு, இந்தத் தடவை வெறும் தம்ளர் கொடுத்தா ஒத்துக்கு வாங்களா, தலைவா?"

"பின்னே பார்லிமெண்டுக்கும் பஞ்சா யத்து போர்டுக்கும் உள்ள வித்தியாசத்தை எப்படிய்யா ஜனங்களுக்குப் புரிய வைக் கிறது?"

— லைஃபான்

களத்தில் கல்கி : புதிய பகுதி

• சரஸ்வதி நகர் :



# உள்ளாட்சித் துறை அமைச்சருடன் ஓர் அதிரடி விசிட்!



• ஔவையார் தெரு : சாக்கடையை அடைத்துக் கொண்டு போடப்பட்ட நடைபாதைக் கல்லை எடுக்கச் சொல்கிறார் அமைச்சர்.



• ஜான் தேசிகர் தெரு : "இத்தனை குப்பையா?"

''உள்ளாட்சி நிர்வாகங்கள் எப்படி நடக்கின்றன என்பதையறிய நீங்கள் வெளியூர்களுக்குச் சென்று திடீர் விசிட் செய்வது போலவே, சென்னை நகரை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதிகளுக்கும் திடீர் விசிட் செய்யலாமே!'' என்றோம் ஊரக

வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கோ.சி. மணியிடம்.

"தாராளமாகச் செய்யலாமே! வார நாட்களில் சட்ட மன்றக் கூட்டத் தொடர் நடப்பதால், இந்த ஞாயிற்றுக்கிழமை (21.7.96) காலையில் செல்லலாம். சரியாக ஏழு மணிக்கு வந்து விடுங்கள். இடத்தை யும் நீங்களே தீர் மானித்துக் கொள்ளுங் கள்!" என்றார்....



• இளங்கோவடிகள் தெரு : இசகுபிசகான இடத்தில் குடிநீர்க் குழாய்

சரியாகக் காலை ஏழு மணி. அமைச்சரின் இல்லத் திற்குச் சென்றோம். வாசலி லேயே காத்திருந்த அமைச்சர், "நான் காலை ஆறு மணியி லிருந்தே புறப்படுவதற்குத் தயா ராய் இருக்கிறேன்!" என்றார்.

"ஆலந்தூர் மற்றும் தாம் பரம் தொகுதிகளில் உள்ள இடங்களுக்குச் செல்லலாம்!" என்று முதல் நாளே நாம் அமைச்சரிடம் சொல்லியிருந்த தால், அந்தத் தொகுதிகளின் எம்.எல்.ஏக்களான சண்முகம், வைத்தியலிங்கம் ஆகியோருக் கும் தகவல் கொடுத்து, வரச் சொல்லியிருந்தார் அமைச்சர். அவர்களும் தயாராய் வந்திருந் தனர்.

"உங்கள் காரில் நீங்கள் முன்னால் செல்லுங்கள். நான் பின்னால் வருகிறேன். எந்த இடத்தில் நீங்கள் காரை நிறுத்து கிறீர்களோ, அந்த இடத்தில் நானும் இறங்கிக் கொள்கிறேன். விசாரிப்போம்!" என்றார் அமைச்சர். புறப்பட்டோம்.

கிண்டிக்கும் பரங்கிமலைக் கும் இடைப்பட்ட இடமான பச்சையம்மன் கோயில் கேட் என்னுமிடத்தில் சாலையிலேயே கழிவுநீர் வழிந்தோடிக் கொண் டிருந்தது. அந்த இடத்தில் நமது காரை நிறுத்தினோம். அமைச்சரும் காரை நிறுத்திக் கீழே இறங்கினார்.



"என்ன இது... இப்போதே இப்படிக் கழிவு நீர் வழிந்தோடு கிறது என்றால், மழைக்காலத் தில் இன்னும் மோசமாக இருக்குமே...!" என்ற அமைச்ச ரிடம், பக்கத்திலிருந்த பொது மக்களும் மழைக்காலத்தில் தாங்கள்படும் அவதி களை எடுத்துச் சொன்னார்கள்.

"இது எங்கிருந்து வருகிற சாக் கடை?" என்றார் அமைச்சர்.

"எல்லாம் ஆலந்தூர் நகராட்சிப் பகுதியிலுள்ள வீடுகளிலிருந்து வரு கிற கழிவு நீர்தான். இந்த இடம், ஆலந்தூர் நகராட்சியும் சென்னை மாநகராட்சியும் சந்திக்கிற இட மாதலால், யார் நடவடிக்கை எடுப் பது என்பதிலேயே பிரச்னை!" என்றார் அந்தப் பகுதி வாசியான செல்லப்பன் என்பவர்.



• ஔவையார் தெரு : "மின் அழுத்தம் குறைந்து விடுவதால் குழந்தைகளால் படிக்க முடிவதில்லை!"

எல்லாவற்றையும் தமது உதவியாளரைக் குறித்துக் கொள்ளச் சொன்ன அமைச்சர், "விரைவில் நடவடிக்கை எடுக்கிறேன். கவலைப் ட்படாதீர்கள்!" என்று அங்கிருந்த பொதுமக்களிடம் உறுதியளித்தார்.

அடுத்து நங்கநல்லூரின் இதயப் பகுதியான மார்க்கெட். அங்குள்ள அர்த்தநாரீஸ்வரர் கோயிலை ஒட்டியுள்ள பெரிய குளத்தைப் பார்த்தார் அமைச்சர். சாக்கடைத் தண்ணீரால் நிரம்பியிருந்த குளம் ஆகாயத்தாமரைச் செடிகளால் மூடி யும் கிடந்தது. குளத்தின் மற்றொருபுறம் ஆலந்தூர் நகராட்சியினர் குப்பைகளைக் கொட்டி வைத்திருந்தனர். சிறிது நேரம் குளத்தைச் சுற்றிப் பார்த்தார் அமைச்சர்.

"இந்தக் காலத்தில் இவ்வளவு பெரிய குளத்தைப் பார்ப்பதே அரிதான விஷயம். இதை நாம் சுத்தமாகப் பராமரித்தால் எத்தனை அழகாக இருக்கும்! இப்படிக் கிடப்பதால் இந்தப் பகுதி மக்களுக்கே சுகாதாரக் கேடாயிற்றே...!" என்றார்.





• வீராகவன் தெரு : "பெண்களைத் தண்ணீர் பிடிக்க விடுங்கள்!"

"இது தனியார் ஒருவருக்குச் சொந்தமான குளம் என்று..." கூட வந்த எம்.எல்.ஏக்கள் சொன்னபோது, "அட, யாருடையது என்பது ஒரு பக்கமிருக்கட்டும். முதலில் இதைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டாமா? காலி இடத்தைக் கண்டால் குப்பை கூளங்களைக் கொட்டியா நிரப்புவது? நிச்சயம் இதைச் சுத்தப்படுத்த வேண்டும்!" என்ற அமைச்சர், பக்கத்துத் தெருக்களில் பெண்கள் குடிநீர்க் குடங்களுடன் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த இடங்களுக்குச் சென்றார்.

வீராகவன் தெரு. பாலாற்று நீர் வந்து கொண்டிருந்த தெருக்குழாயில் மூன்று நான்கு பேர், மூன்று சக்கர வண்டிகளில் பத்துப் பதினைந்து குடங்களை வைத்துக் கொண்டு குடிநீர் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அதனால் பெண்கள் பிடிக்க வழியின்றிக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

"நீங்கள் எல்லாம் யாரப்பா? எதற்காக இத்தனை குடங்களில் தண்ணீர் பிடிக்கிறீர்கள்?" - விசாரித்தார் அமைச்சர்.

"பக்கத்திலிருக்கும் மக்கடைக்காகத் தண்ணீர் பிடிக்கிறோம்!"

"இனிமேல் இந்த மாதிரியெல்லாம் செய்யக் கூடாது. பெண்களெல்லாம் பிடித்து முடித்த பிறகுதான் உங்களைப் போன்றவர்கள் வந்து தண்ணீர் பிடிக்க வேண்டும்! உடனே இடத்தைக் காலி செய்து பெண்களுக்கு வழி விடுங்கள்!" என்று எச்சரித்த அமைச்சர், "ஏம்மா, குடிநீர் எல்லாம் சரியாகக் கிடைக்கிறதா?" என்று விசாரித்தார் அங்கிருந்த ஜெகதாம்பாள் என்ற பெண்மணியிடம்.

"எங்க ஔவையார் தெருவுல தண்ணீர் வரலீங்க. அதனால தான் இங்க வந்து பிடிக்கிறேன்!" என்றார் அந்தப் பெண்மணி.

"சரி, ஔவையார் தெருவுக்குப் போவோம்!" என்று சொல்லி நடந்தார் அமைச்சர்.

அப்போது நங்கநல்லூர் கூட்டுறவு சங்கக் கட்டடக் காலனியின் 34-வது தெரு மக்கள் ஓடி வந்து, சாக்கடைப் பிரச்னையையும் தங்கள் தெருவில் சிலர் கால்நடைகளைக் கட்டிப் பாழ்படுத்துவதையும் எடுத்துச் சொன்னார்கள்.

"தெருவாசிகளான நீங்களெல்லாம் ஒன்று சேர்ந்து இங்கே கால்நடைகளைக் கட்டக்கூடாது என்று சொல்லக் கூடாதா? இது மாதிரியான சின்ன விஷயங்களுக்குக் கூடவா நீங்கள் என்னிடம் வந்து புகார் சொல்ல வேண்டும்?" என்று இலேசாகக் கடிந்து கொண்ட அமைச்சரிடம், "நாங்கள் அப்படிக் கேட்டால், 'நீ யார் அதைக் கேட்க?' என்று சம்பந்தப்பட்டவர்கள் சண்டைக்கு வருகிறார்களே!" என்றனர் பொது மக்கள்.

"நான், 'குறை கேட்கும் நாள்' என்று ஆலந்தூர் நகராட்சியில் வைத்திருக்கிறேனே! ஒவ்வொரு மாதமும் நடைபெறும் அந்த நாளில் வந்து உங்கள் குறை



• அர்த்தநாரீஸ்வரர் கோவிலை ஒட்டியுள்ள குளம் : "உடனடியாகச் சுத்தம் செய்ய வேண்டும்."



• பச்சையம்மன் கோவில் கேட் : சாலையில் வழிந்தோடும் சாக்கடை.

களைச் சொல்லலாமே!" என்றார் எம்.எல்.ஏ. சண்முகம்.

"அப்படியொரு நாள் இருப்பதே எங்களுக்குத் தெரியாது!" என்றனர் பொதுமக்கள்.

இதற்குள் ஔவையார் தெருவுக்குப் போகிற வழியான ஞானதேசிகர் தெரு வந்துவிட்டது. அங்கிருந்த அடிகுழாயினருகே ஒரே குப்பையும் கூளமுமாகக் கிடந்ததைப் பார்த்தார் அமைச்சர்.

"அடி குழாய்க்கருகில் இப்படிக் கிடந்தால் ஜனங்கள் வந்து எப்படித் தண்ணீர் பிடிக்க முடியும்?" என்றவாறே ஔவையார் தெருவுக்குள் நுழைந்தார்.

தெருவோரச் சாக்கடை நீர் அப்படியே தேங்கிக் கிடந்தது. காரணம், ஒரு வீட்டுக்காரர், தெருவிலிருந்து தமது வீட்டுக்குள் போக வர வசதியாக ஒரு பலகைக் கல்லைச் சாக்கடை மீது போட்டிருந்ததுதான்!

அந்த வீட்டுக்காரரை அழைத்தார் அமைச்சர். "இது நியாயமா? உடனடியாக இந்தக் கல்லை எடுங்கள்!" என்று எடுக்கச் செய்த அமைச்சர், "இதுபோல் சாக்கடையைத் தாண்டிப் போக வசதியாகப் பலகைக் கல்லை வைக்க வேண்டுமானால் சாக்கடைக் கால்வாயின் இரண்டு பக்கமும் உயரப்படுத்தி, அதன் மேல்தான் வைக்க வேண்டும். இது கூடவா தெரியாது? உங்களால் அத்தனை பேருக்குமல்லவா இடைஞ்சலாக இருக்கிறது!" என்றபோது, அசடு வழிந்தார் அந்த வீட்டுக்காரர்.

இதற்குள் ஔவையார் தெருவிலிருக்கும் பலரும் அமைச்சரைச் சூழ்ந்து கொண்டு, "எங்கள் தெருவில் பெரும்பாலான நேரங்களில் மின் அழுத்தம் குறைவாகவே இருப்பதால் இரவில் குழந்தைகளால் படிக்கவே முடிவதில்லை!" என்று புகார் சொன்னார்கள்.


அந்தத் தெருவிலுள்ள பாலாற்றுக் குடிநீர்க் குழாய் பூமிக்கடியில் நான்கடி ஆழத்திலிருந்தாலும் தண்ணீர் வராததைப் பார்த்த அமைச்சர், "இது போன்ற இடங்களில் தெரு முனையில் 'வால்வ்' ஒன்றை அமைக்கலாம். இப்படிச் செய்து பல இடங்களில் குடிநீர் சப்ளையைச் சரி செய்திருக்கிறோம்!" என்றார்.

அப்படியே இளங்கோவடிகள் தெருவுக்குள் நுழைந்தார் அமைச்சர். அங்குள்ள குடிநீர்க் குழாய், கழிவுநீர்க் குழாய் அருகிலேயே இருந்தது. பூமிக்குச் சிறிது ஆழத்திலிருந்த குடிநீர்க்குழாயில் குடம் வைத்துத் தண்ணீர் பிடிப்பதே பெரும்பாடு. அப்படியொரு இடக்குமுடக்கான இடம் அது!

"எதற்காக இந்த இடத்தில் குடிநீர்க் குழாயை அமைத்தார்கள்? தண்ணீர் பிடிக்க வசதியாகப் பக்கத்திலுள்ள இடங்களில் அமைத்திருக்கலாமே!" என்ற அமைச்சர், தமது சீனியர் உதவியாளரான க. இளங்கோவிடம், "இதையும் குறித்துக் கொள்ளுங்கள்!" என்றார்.

அடுத்து, உள்ளகரம் - புழுதிவாக்கம் பேரூராட்சியைச் சேர்ந்த சரஸ்வதி நகருக்குப் புறப்பட்டோம். நேராகப் போகாமல், வழியில் முனுசாமி தெரு, நேரு காலனி என்று சுற்றிக் கொண்டு போனோம்.

பழவந்தாங்கல் முனுசாமி தெருவில் காரை நிறுத்தியபோது, "இது தெருதான் என்றாலும் நேரு காலனி பகுதியிலிருக்கும் ஆயிரக்கணக்கான மக்கள், பழவந்தாங்கல் ரயில் நிலையத்துக்குச்



• சாக்கடை நீருக்குள்
மூழ்கி இருக்கும் சரஸ்வதி நகர்

செல்லப் பயன்படுத்தும் தெருவாக இருக்கிறது. ஆயினும் இந்தத் தெருவுக்குத் தாரே போடப்படவில்லை. அதோடு, தெருவிலிருக்கும் குப்பைத் தொட்டியிலிருந்து சரிவரக் குப்பைகளை அள்ளிச் செல்லாததால் அத்தனை மக்களும் மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் ரயில் நிலையத்துக்குப் போகவும் வரவும் வேண்டியிருக்கிறது!" என்று அங்குள்ள பொது மக்களால் புகார் சொல்லப்பட்டபோது, "நிச்சயம் தார் போடப்பட வேண்டும்!" என்றார் அமைச்சர்.

அருகிலிருந்த நேரு காலனியின் மெயின் சாலையைப் பார்த்த அமைச்சர், ஓரிடத்தில் கட்டடங்களில் இடிக்கப்பட்ட செங்கற்கள் கிடப்பதைப் பார்த்தார். "இது மாதிரி போடுபவர்களுக்கு அபராதம் போட வேண்டும்!" என்றார்.

உள்ளகரம் - புழுதிவாக்கம் பேரூராட்சியைச் சேர்ந்த சரஸ்வதி நகர். நகரே வெள்ளக் காடாகக் காட்சியளித்ததால் அமைச்சர் வேஷ்டியை மடித்துக் கட்டிக் கொண்டுதான் நடக்க வேண்டியதாயிற்று. அத்தனையும் பக்கத்து நகர்ப் பகுதிகளிலிருந்து வரும் சாக்கடை நீர்!

"இப்படிக் கூட ஓர் இடமா? இந்த இடத்திலும் மக்கள் எப்படித்தான் வசிக்கிறார்களோ?" என்று அமைச்சரே நொந்து போய்விட்டார்!

"உடனடியாக இதற்குத் தீர்வு கண்டாக வேண்டும். இப்போதே இப்படியென்றால் மழைக்காலத்தில் இந்த மக்கள் என்னதான் செய்வார்களோ, பாவம்!" என்ற அமைச்சரிடம், "இங்கே கிணறு தோண்டினாலும் அதிலுள்ள தண்ணீர், சாக்கடை நீர் போல்தான் வருகிறது!" என்று புகார் கூறினார்கள் பெண்கள்.

"அந்தத் தண்ணீரையெல்லாம் உபயோகப் படுத்தாதீர்கள். உடனடியாக ஏற்பாடுகள் செய்கிறேன்!" என்று புறப்பட்ட அமைச்சர், "அடுத்து எங்கே போகிறோம்?" என்றார்.

"குரோம்பேட்டை நியூ காலனி!" என்று புறப்பட்டோம்.

போகும் வழியில், மீனம்பாக்கம் விமான நிலையத்தின் எதிரிலுள்ள மயானத்தில் ஒருவர் கடைபோட்டு ஆக்கிரமித்திருந்ததையும் அமைச்சரிடம் சுட்டிக்காட்ட, அவரது உதவியாளர் குறித்துக் கொண்டார்.

பல்லாவரம் நகராட்சிக்கு உட்பட்ட குரோம்பேட்டை நியூ காலனிவாசிகள், "மழைக்காலம் வந்து விட்டால் எங்கள் வீடுகளே வெள்ளக்காடுதான். அத்தனையும் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து வரும் மழைத் தண்ணீர்தான்!" என்றனர்.

"தேசிய நெடுஞ்சாலைப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் வடிகால் பணி முடிவடைந்துவிட்டால் நிலைமை சரியாகிவிடும்!" என்று தாம்பரம் எம்.எல்.ஏ வைத்தியலிங்கம் சொன்ன போது, "அது மாத்திரம் எங்கள் பிரச்னையைத் தீர்த்து விடாது. இதற்கு பொதுப் பணித்துறை, சுகாதாரத் துறை, நகராட்சி ஆகிய மூன்று பேரும் இணைந்து காரியம் செய்தால் தான் எங்கள் வீடுகளுக்குள் மழைத் தண்ணீர் வந்து தேங்குவது நிற்கும்!" என்று பிரச்னைகளை விளக்கினார்கள் அக்காலனிவாசிகள்.

நேரம் பத்து மணியாகிவிட்டது.

"மதியம் இரண்டு மணிக்கு என் வீட்டிற்கு வந்து விடுங்கள். நான், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் வரச் சொல்லி விடுகிறேன். இதுவரை நாம் பார்த்த பிரச்னைகளுக்கான தீர்வுகள் பற்றிப் பேசலாம். இப்போது நான் அறிவாலயத்தில் நடக்கும் கட்சியின் பேச்சாளர்கள் கூட்டத்திற்குச் செல்ல வேண்டும். மதியம் சந்திப்போம்!" என்று நம்மிடம் விடை பெற்றுச் சென்றார் அமைச்சர்.

மதியம் ஒன்றேமுக்கால் மணிக்கே நாம் சென்று விட்டோம். "அமைச்சர் சாப்பிடாமல் கூட உங்களுக்காகத்தான் காத்திருக்கிறார். ரூமில் அவர் மட்டும்தான் இருக்கிறார். நீங்கள் உள்ளே செல்லுங்கள்!" என்றார் உதவியாளர் இளங்கோ.

நாம் அமைச்சரின் அறைக்குள் சென்ற போது, அமைச்சருக்கான ரிவால்விங் சேர் காலியாக இருந்தது. விசிட்டர்கள் உட்காருவதற்காகப் போடப்பட்டிருந்த நாற்காலிகள் ஒன்றில் அமர்ந்திருந்த அமைச்சர் எதையோ சீரியஸாகப் படித்துக் கொண்டிருந்தார்.

ஏன் அப்படி?

அமைச்சர் சொன்ன பதிலை நம்பமுடியாமல் அவரைப் பார்த்தோம்!

(மீதி அடுத்த வாரம்)

— இளங்கோவன், ஸ்ரீநிவாசன்

வண்ணப்படங்கள், படங்கள் :
பேஜர் கே. மூர்த்தி

# KALKI SHOPPING PAGE


## மணமக்கள் தேவை
## கம்ப்யூட்டர் ஜாதகம்

அனைத்து சமூகத்திலும், ஆயிரக் கணக்கான வரன்கள் பெற உடன் பதிவு செய்ய தொடர்பு கொள்ளவும்.

கம்ப்யூட்டர் ஜாதகங்கள் நொடிப் பொழுதில்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம், தமிழ் : | ரூ. | 50/- |
| எதிர்கால கணிப்புடன் | ரூ. | 150/ |
| ஆண்டு பலன் : | ரூ. | 50/- |
| கல்யாண பொருத்தம் : | ரூ. | 50/- |
| Numerology prediction : | Rs. | 50/- |

**CONSULT DIVINE ASTROLOGER THETIYUR V. MAHADEVAN WITH PRIOR APPOINTMENT.**

**ASTROLOGY SOFTWARE FOR SALE.**

## ஸ்வயம்வராலயா

18, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை - 33. போன் : 425822,
மைலாப்பூர் போன் : 8546278,
பெங்களூர் போன் : 3340146

**Learn Astrology through Correspondence**


ALL POOJA ENTHRA/RAKSHA AVAILABLE
RATES ON REQUEST

## RAMACHANDRA SAREES

Quality & Quality

உயர்ரக Madurai Sungudi புடவைகள் வழங்குபவர்கள்

## ராமசந்திரா சாரீஸ்



(மதுரை சுங்குடி புடவைகளின் உலகம்)

H.O. 37-B, Arya Gowder Road, Postal Colony Bus Stop 3rd Street, West Mambalam, Madras - 33.
Ph : 4896532

B.O.No. 2 R.K.Mutt Road, Picnic plaza (Basement Shop) Luz Corner, Mylapore, Madras - 4

BENGAL, COIMBATORE KORA, DEVENDRA, VENKATAKIRI & COTTON SAREES

வழங்குபவர்கள் : Ramachandra Sarees 20 B. Old Kuyavar palayam road, Madurai - 625 009.

இந்தியாவின் தலை சிறந்த குழந்தை எழுத்தாளர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு விருது பெற்ற

## டாக்டர் பூவண்ணனின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம்

ஒவ்வொரு தொகுதியும் 320 பக்கம் டெம்மி 1/8 அளவு அழகிய ஆப்செட் அச்சு உறுதியான அரை காலிக்கோ பைண்டிங். பாடல், சிறுகதை, சித்திரக்கதை, பொது அறிவு, நாடகம், நாவல், படங்கள் அனைத்தும் அடங்கிய நூல்

| | | |
|---|---|---|
| ஒரு தொகுதி விலை | : ரூ | 150 |
| மூன்று தொகுதி விலை | : ரூ | 450 |
| சலுகை விலை | : ரூ | 350 |
| உங்கள் லாபம் | : ரூ | 100 |

ரூ.350 ஐ M.O/டிராப்டுமூலம் இன்றே அனுப்புங்கள். பதிவு அஞ்சலில் நூல் உங்கள் வீட்டைத் தேடி வரும்.
தபால் செலவு இலவசம்

உங்கள் குழந்தையின் அறிவு வளர்க்கும், ஆனந்தம் பெருக்கும் அற்புதத்தொகுதிகள்.

## பூவண்ணன் பதிப்பகம்

1, பாரதி பூங்கா நான்காம் குறுக்குச் சாலை
சாயிபாபா காலனி, கோவை - 6441 011

வியாபாரிகளும் தொடர்பு கொள்ளலாம்.

ஹோமியோபதி டாக்டரால் உருவாக்கப்பட்டது

## மாருதி

ஹோமியோபதி பற்பசை

உங்களின் எல்லாவித பல்தொல்லைகளும் இன்றோடு தீர்ந்தன.

## S.K.N. HOMOEO LAB

15, I Main Road, R.A. Puram
Madras - 600 028 Ph :4936233

**Propaganda cum Distributors wanted**

# KALKI SHOPPING PAGE


## அம்மன் தரிசனம்

**ஆகஸ்ட் 1996 இதழ்**

- அட்டையில் ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ கள்ளர் பிரான்
- ஸ்ரீஸ்ரீ பாரதி தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரை
- திருவிளையாடற்புராணம் - தொடர்கதை
- விவாஹமந்த்ர விளக்கம் - கட்டுரை
- பஞ்சதசீ - ஸ்ரீ வித்யாரண்யரின் தத்துவ நூல் கட்டுரைத் தொடர்
- சுவாதித் திருநாள் - கட்டுரை

தனிப்பிரதி விலை : ரூ. 5.00
ஆண்டுச் சந்தா : ரூ. 55.00

**அம்மன் தரிசனம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்**

11, வெங்கட்நாராயணா சாலை,
தி. நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 4348964

ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

## 10% AADI SALE OFF

SUITINGS, SHIRTINGS, SAREES, MATCHING BLOUSE, READYMADES, FOR LADIES, GENTS, CHILDREN.

**Sree Krishna**

CUT PIECE COLLECTION PVT. LTD.,
(OPP. FLOWER BAZAR CAR PARK), 39, GODOWN ST.,
MADRAS - 600 001.
Tel : 589596

ॐ

## WEAR THE CORRECT BIRTHSTONE

**And bring out the Hidden Strength in your Horoscope**

Come to PADMASHRIS to get the correct Birthstone (&) Correct prediction. According to your horoscope and be benefitted like our many satisfied clients.

Solve your problems - Beit - Financial, Health, Marital, Job, Education Etc. By Consulting our Scientific Astrologers fix your appointment to avoid inconvenience.

By Phone : 823-4060 Leave Message on Pager 9632 - 756314

Computerised Horoscope (Basic) English only - Rs. 50/- only
Birth Stone Consultation - Rs. 151/- only.
General Consultation (Any problem 3 questions only) Rs. 116 only

**PADMASHRI PEARLS**

53, North Usman Road,
(Opp. to A.R.R. Complex/Near Panagal Park)
T. Nagar, Madras - 600 017.
Phone : 8234060 Pager - 9632 -756314

*We serve*
1917 75 Years 1992

# "அவர் கூப்பிட்டார்... வந்துவிட்டேன்!"

அவரது சொந்த ஊர், மதுரை. பிறந்து, வளர்ந்து, படித்ததெல்லாம் அங்கேதான். பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி முடித்துவிட்டு, ஆசிரியர் பணிக்கான (பி.எட்) தேர்வும் எழுதி, வெற்றி பெற்றார்.

நியாயமாக அடுத்தக்கட்டம் - ஏதாவது ஒரு பள்ளியில் ஆசிரியர் உத்தியோகம் தேடிக் கொள்வது தானே?

குடும்பத்தைத் துறந்து, காவி ஏற்று, குன்றக் குடி வந்துவிட்டார்.

"அடிகளார் கூப்பிட்டார். அதனால் வந்து விட்டேன்!'' என்கிறார் பொன்னம்பல அடிகள்.

மறைந்த குன்றக்குடி அடிகளாரின் சீடர். அவருக்குப்பின் குன்றக்குடியில் இயங்கும் திருவண்ணாமலை ஆதீனத்தின் பீடாதிபதியாகி இருப்பவர்.

வயது முப்பத்திரண்டு. கறுத்த மேனி. சிரித்த முகம். விரித்த சடை வெளியே தெரியாமல் இறுக்கிக் கட்டிய முண்டாக.

எப்படி வந்தார் ஆதீனத்துக்கு? அடிகளாருடன் எப்படிப் பழக்கம்?

"மதுரையில் என் முன்னோர்கள் யாவரும் திருவண்ணாமலை ஆதீனத்துடன் நீண்ட காலத் தொடர்புடையவர்கள். என் பூர்வாசிரமப் பாட்டனார், ஆதீனத்தின் மதுரை அலுவலகத்தின் பொறுப்பாளராக இருந்தவர். ஆகவே சன்னிதானம் (அடிகளார்) மதுரை வரும்போதெல்லாம் அவரைச் சந்தித்துப் பேச வாய்ப்பு. சிறு வயதிலிருந்தே என்னிடம் ஒரு பிரத்தியேகமான கவனிப்பு உண்டு அவருக்கு. நிறையப் பேசுவார். சமய இலக்கியங்களில் ஈடுபாடு கொள்ளச் செய்தார். சமயப் பணிகளிலும் மக்கள் பணிகளிலும் அவர் காட்டிய வேகம் - தீவிரம் எனக்கும் பற்றிக் கொள்ளத் தொடங்கியது அப்போதுதான். ஆனால் அப்போதுகூட அவர் என்னைத் தம் வாரிசாக நியமிப்பார் என்றெல்லாம் நான் யோசித்துப் பார்த்தது கூட இல்லை.

"1993-ம் வருடம், ஜூன் 23-ம் தேதி. அடிகளார் பட்டத்துக்கு வந்து நாற்பதாவது ஆண்டு நிறைகிற தினம்... அப்போதுதான் அவர் தம் எண்ணத்தை வெளியிட்டார். "வந்து விடு" என்றார். நானும் உடனே ஒப்புக் கொண்டு விட்டேன்."

திருமண வயதில் இருக்கிறபோது வீட்டில் எப்படிச் சம்மதித்தார்கள்?



• பொன்னம்பல அடிகளார்

"எந்த வீட்டில்தான் தம் மகனைத் துறவு பூண உடனே சம்மதிப்பார்கள்?" என்று கேட்டுச் சிரிக்கிறார் பொன்னம்பல அடிகள்.

''ஆனால் சன்னிதானத்தின் சொல்லுக்குக் கட்டுப்பட்டே பழகிய குடும்பம். தவிர எனக்கும் அவரோடு - அவர் பணிகளில் உடன் இறங்க இருந்த ஆர்வம் - இதெல்லாம் தான் இறுதியில் வென்றது."

ஆதிசங்கரர், அவரது வழித்தோன்றல்கள் போல இளம் வயதிலேயே துறவு பூணுவது சரி; ஆனால் இருபத்தேழு வயது வரை குடும்பத்தோடு இருந்து விட்டு, பின் துறவரம் மேற்கொள்வதென்பது சுலப சாத்தியம் இல்லையே?

பதில் உடனே வருகிறது. அவரிடமிருந்து: 'இருபத்தேழு வயது வரை வீட்டில் இருந்தேன் என்பது உண்மைதான். ஆனால், மிகச் சிறிய வயதிலிருந்தே சன்னிதானத்துடன் ஏற்பட்ட பழக்கம் காரணமாக, உலக வாழ்க்கை இன்பங்களின் மீது ஒட்டாமல் தான் வளர்ந்து வந்தேன். பூஜைகள், சமய இலக்கியப் பாராயணம் இவற்றோடே தினங்கள் கழிந்து வந்தன. அப்போது மனத்தளவில் துறவியாக இருந்தேன். இங்கு வந்தபின் காவி ஆடை ஏற்று, தோற்றத்திலும் அவ்வாறே ஆகிப் போனேன்'' என்கிறார்.

அடிகளாரின் நிழலாக, எப்போதும் அவருடனேயே இருந்து விடலாம் என்பதில் ஏராள சந்தோஷம் இருந்ததாம் இவருக்கு.



"ஆனால், நான் வந்த இரண்டு ஆண்டுகளிலேயே அவர் இறந்துவிட்டது எனக்கு மிகப் பெரிய அதிர்ச்சிதான். தவிர, தனி மனிதராக அவர் ஏற்றுச் செயல்படுத்தி வந்த ஏராள சமூக நலப் பணிகள், இலக்கிய சேவை... இத்தனைப் பொறுப்புகளும் என் தலையில் விழுந்து விட்டன. சன்னிதானத்தின் வாரிசு என்பதாலேயே நம் மீது மக்களுக்கு இருந்த எதிர்பார்ப்பு, இன்னும் பல மடங்காகி விட்டது! இவர் என்ன செய்யப் போகிறார்? இத்தனை வருடங்களாகச் சன்னிதானம் சேர்த்து வைத்த இந்த ஆதீனத்தின் சிறப்பையும் பெருமையையும் எப்படி மேலும் உயர்த்தப் போகிறார்? என்பதில் மிகக் கூர்மையான கவனம் செலுத்தி, நோக்க ஆரம்பித்தனர். அவர் பெயருக்கு ஒரு களங்கமும் வராத வண்ணம் நடந்து கொள்வதே என் ஒரே சிந்தனையும் செயலும் ஆயின." என்கிறார்.

ஆகவே, அவர் தொடங்கி வைத்து, நடத்தி வந்த நலப் பணிகளை அவர் பாதையிலேயே மேலும் நடத்திச் செல்வதில் முழுமூச்சுடன் இருப்பதாகக் குறிப்பிட்டார் பொன்னம்பல அடிகள்.

நலப்பணிகள் சரி; குன்றக்குடி அடிகளாரின் சிறப்பே அவரது சிந்தனைகள் தானே? 'எல்லாருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும்?' என்பதுதானே அவரது இலக்கு? ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரைக் காட்டிலும் கம்யூனிஸ சித்தாந்தத்தில் ஆழ ஊறியவர் அல்லவா அவர்? மக்கள் பணியே இறை பணி என்பதை செயலால் காட்டியவரல்லவா?

மார்க்ஸின் தாஸ் காபிடலை முன் வைத்துப் பட்டிமன்றங்கள் நடத்தியவரல்லவா?

பொன்னம்பல அடிகள் சொன்னார்: "வாஸ்தவம் தான். எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்கிற அவரது கொள்கைதான் நமக்கும். ஆனால், அவரளவுக்கு நான் கம்யூனிஸமோ வேறு எந்த இஸமோ அறிந்தவனல்ல. அவரோடு இன்னும் சில ஆண்டுகள் இருந்திருக்க முடியுமானால் எனக்கும் மார்க்ஸை அறிமுகப்படுத்தி, பயிற்றுவித்திருப்பார். இனி அவர் நூல்களே (சுமார் பத்தாயிரம் நூல்கள்!) என் ஆசான். கம்யூனிஸத்தின் இலக்கணம், அதன் வேர், கிளைகள் பற்றிய முழு ஞானம் எனக்கு இல்லைதான். ஆனால் அடிமட்ட மக்களை - அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்; அதற்காக உழைக்க வேண்டும் என்கிற ஒரு வரி சித்தாந்தத்தை அடிகளார் எனக்கு ஆழமாகப் பயிற்றுவித்திருக்கிறார். நமது இலக்கும் அதுதான்."

பணியைத் தொடங்கிவிட்டீர்களா "இப்ப ஜெயில்ல ஸ்பெஷல்கிளாஸ்" என்று கேட்டபோது, வியக்கும்படியான ஒரு செய்தியைச் சொன்னார்.

"நாட்டில் அனைவருக்கும் வேலை வாய்ப்பு வசதிகள் கிடைக்க வேண்டுமானால், அதற்குத் தொழில் நுட்பக் கல்வி தான் ஒரே வழி. ஆனால் இன்றைய நிலை என்ன? பள்ளிக் கல்வியில் அதிக மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி அடைபவர்களுக்கு மட்டும்தான் தொழில்நுட்பக் கல்வி சாத்தியமாகிறது. அதிலும் சாதிப் பிரிவுகள் அடிப்படையில் இடஒதுக்கீடு செய்யப்படுவதால் பலருக்கு இயல்பாக வாய்ப்பு மறுக்கப்படுகிறது. அதையும் தவிர, அதிக மதிப்பெண் பெறுவது என்பது எல்லோருக்கும் சாத்தியமானதல்ல. கல்வியில் சற்றுப் பின்தங்கியவர்களும் முன்னணிக்கு வர வேண்டும் அல்லவா?

# ஒருமுறை சந்தியுங்களேன்...

"தினமணி"யில் தொடர்ந்து மூலிகை வளம் பற்றி இணையற்ற கட்டுரைகளை எழுதிய கண்ணப்பரின் மூத்த மகன் 'சித்த மருத்துவக் களஞ்சியம்' டாக்டர் க. வேங்கடேசன் அவர்களை ஒருமுறை சந்தியுங்களேன். உங்கள் ஆரோக்கியம் நிச்சயமாக ஒருபடி உயரும். ஆஸ்துமா, அல்சர், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, இரத்த அழுத்தம், நீரிழிவு, பால்வினை நோய்கள், மகப்பேறு இன்மை, இரத்த மூலம், சரும நோய்கள், வெண்புள்ளி ஆகிய சிக்கலான நோய்களுக்கெல்லாம் இயற்கை மூலிகைகளின் துணைகொண்டு உணவுச் சீர்திருத்தம் மூலம் எல்லோரும் பின்பற்றத்தக்க வித்தியாசமான ஒரு சிகிச்சை முறையை டாக்டர் க.வேங்கடேசன் அவர்களிடம் பெறலாம். மேற்கண்ட நோய்களால் அவதிப்படுபவர்கள் ஒருமுறை கட்டாயம் டாக்டர் க.வேங்கடேசன் அவர்களைச் சந்திக்கலாமே.

நோயிலிருந்து நிச்சயம் விடுபட்டு நிலையான ஆரோக்கியத்திற்குத் திரும்பலாம்.

## ஒவ்வொரு மாதமும்

**2,3,–தேதிகளில் கோவையில்:** ஓட்டல் ஸ்ரீ சக்தி, சென்ட்ரல் பஸ்நிலையம் எதிரில் (கீதாலயா தியேட்டர் பக்கத்தில்) தொலைபேசி எண்: 234225.

**7–ஆம் தேதி சேலத்தில்:** ஓட்டல் ஹேமா இண்டர்நேஷனல், சிட்டு கோவில் வீதி; சேலம், தொலைபேசி எண்: 418303.

**8–ஆம் தேதி ஈரோட்டில்:** ஓட்டல் ஆக்ஸ்போர்டு (பஸ் ஸ்டாண்ட் எதிரில்) தொலைபேசி: 70761.

**15–ஆம் தேதி திருச்சியில்:** ஓட்டல் கல்பனா TTC பக்கத்தில், திருச்சி. தொலைபேசி எண்: 460011, 460412.

**16–ஆம் தேதி மதுரையில்:** ஓட்டல் ஆரத்தி, கூடலழகர் கோவில் சந்து, மதுரை. தொலைபேசி: 31571.

**சென்னையில் ஒவ்வொரு மாதமும் 1,4,5,6,9,11,12,13,14 மற்றும் 17 முதல் 30 வரை.**

**புரசைவாக்கத்தில்:** காலை 10 முதல் மதியம் 2 மணி வரை

**"மூலிகைமணி பார்மசி"**
B 7, ராம்ஸ் பில்டிங்,
21, இராஜா அண்ணாமலை ரோடு,
தாசப்பிரகாஷ் ஓட்டல் எதிரில்,
பஞ்சாப் நேஷனல் பாங்க் உட்புறம்,
புரசைவாக்கம், சென்னை – 600 084
தொலைபேசி எண்: 6412025

**தி. நகரில் :** மாலை 5 முதல் இரவு 9 மணி வரை.

"BBC MANOR"
10, துரைசாமி ரோடு,
(துரைசாமி சப்வே நுழைவாயில் இடதுபுறம்)
தியாகராய நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி எண்: 4331494.


**AVAIL THE FOLLOWING SAREES AT LOOM PRICES!**

* Kancheepuram Silk Sarees
* Kancheepuram Fancy Sarees
* Printed & Creape Silks,
* Cotton Sarees,
* Madurai Sungudi Sarees,
* Poonam & Garden Sarees,


**B.M. சில்க் சாரீஸ்**

Mfs. of : Kancheepuram Silk Sarees.

BMSS

5. வடக்கு மாட வீதி
மைலாப்பூர்
சென்னை–4
(கபாலீஸ்வரர் கோவில் அருகில்)
போன்: 4940291

ALL CREDIT CARDS ACCEPTED



அருளாலயம் : பணிகள் ஆரம்பித்துவிட்டன.

அவர்களும் தொழிற்கல்வி - வேலை வாய்ப்பு பெற வேண்டுமல்லவா? அதனால்தான், சன்னிதானத்தின் நினைவாக, குன்றக்குடியில் ஒரு பல்தொழில்நுட்பப் பயிலகம் விரைவில் தொடங்கவிருக்கிறோம். இக் கல்விக்கூடத்தின் நோக்கமே, இதர கல்வி நிலையங்களில் இடம் கிடைக்காமல் வருந்துபவர்களை ஆதரித்து, முன்னுரிமை தருவது தான்! 'அடிகளார் தொழிற்பயிற்சி நிலையம்' என்றே பெயர் சூட்டப் போகிறோம்!" என்கிறார்.

பொதுவாக அரசியல் - சமூக ரீதியில் மக்களுக்கு சமீபகாலமாக ஏற்பட்டிருக்கிற விழிப்புணர்ச்சி பற்றிப் பேச்சு வந்தபோது, "இது ஒரு நல்ல மாற்றம்தான்!" என்றார் பொன்னம்பல அடிகள்.

"நமது ஜனநாயகத்துக்கே ஒரு புது உருவம் கிடைத்தாற்போல இருக்கிறது. தீமைகளை - தீமை செய்வோரை மக்கள் தட்டிக் கேட்பதும், எதிர்த்து செயல்படத் தொடங்கி இருப்பதும் மிக ஆரோக்கியமான மாறுதல். இப்போது- முன்னெப்போதைக் காட்டிலும்- நீதி மன்றங்கள் சுதந்தரமாகச் செயல்படத் தொடங்கி இருக்கின்றன. இனி யாராக இருந்தாலும், தவறு செய்ய யோசிப்பார்கள். இந்த மாநிலம் சுபிட்சம் காணப்போவதற்கு இது ஓர் ஆரம்ப அறிகுறி" என்கிறார்.

குன்றக்குடி இராமத்தில் தற்போது ஒரு மிகப் பெரிய பணி நடந்து வருகிறது. அங்கிருக்கும் பெரியகுளம் ஒன்றிற்கான தூறு எடுக்கும் பணி. பல ஆண்டுகளாகச் சீரழிந்து கிடந்த இக்குளத்தை சீராக்க சமீபத்தில் முதல்வர்கூட ரூ. ஒரு லட்சம் அளித்தது ஞாபகமிருக்கும்.

"பொழுது விடிந்தால் போதும். சாமி குளத்தங்கரைக்குப் போயிடறாங்க. உச்சி வெயில் ஏறுகிற வரைக்கும் அங்கே நடக்கிற வேலையை மேற்பார்வை பார்த்துட்டுத்தான் வந்து, குளிச்சி, பூஜை முடிச்சி, சாப்பிடவே செய்யறாங்க" என்கிறார்கள் கிராமத்து மக்கள்.

"இது என்ன? இதெல்லாவற்றையும் விட மிகப் பெரிய பணி ஒன்றைத் தொடங்கியிருக்கிறோம். அது நல்லபடியாக நிறைவேற வேண்டும்!" என்றார் பொன்னம்பல அடிகள்.

என்ன அது?

"சன்னிதானம் மறைந்த - அவர் சமாதி எழுப்பப்பட்டிருக்கிற - இடத்தில் ஒரு அருளாலயம் அமைத்து மணி மண்டபம் கட்டத் திட்டமிட்டிருக்கிறோம். ரூபாய் முப்பது லட்சம் செலவு பிடிக்கிற திட்டம் இது. அதற்கென ஒரு தனி அறக்கட்டளை தொடங்கி, அதன் மூலம் சமய, மொழி வளர்ச்சிப் பணிகள் நடத்தவிருக்கிறோம். அவர் தம் சொந்த ஆர்வத்தில் சேகரித்த பல ஆயிரம் நூல்களை, பொது மக்கள் உபயோகத்துக்காக நூலகத்தில் வைக்கவிருக்கிறோம். இந்த அருளாலயம் உருவாவது மக்கள் கையில்தான் இருக்கிறது. முழுக்க முழுக்க அவரது அன்பர்களின் நன்கொடையாலேயே எழவிருக்கிறது!" என்றார்.

எல்லாம் சரி. சில வருடங்கள் முன்பு - குன்றக்குடி அடிகளார் உயிரோடு இருந்த போது - அவரைக் கல்கி சார்பில் பேட்டி கண்டபோது, 'இங்கே வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கிடைத்துவிட்டது. அடுத்தக்கட்டமாக வீட்டுக்கு இரண்டு பேருக்கு வேலை என்ற இலக்கு நோக்கிச் செல்கிறோம்" என்றார். இலக்கை அடைந்து விட்டார்களா?

"இன்னும் அந்த இலக்கை முழுமையாக எட்டிவிடவில்லை. ஆனால் கூடிய விரைவில் எட்டிப்பிடித்து விடுவோம்!" என்று உறுதியோடு சொல்கிறார்.

குன்றக்குடி கிராமத்தில் இளைஞர்கள் நூறு சதம் கல்வி அறிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதில் அடிகளுக்கு மிகுந்த சந்தோஷம்.

"ஆனால் முதியவர்களில் சிலர் இன்னும் கல்வி பெறாதவர்களாகவே இருக்கிறார்கள். அதுதான் வருத்தம்."

"ஏன், நீங்களே பி.எட். படித்து முடித்து, ஆசிரியர் பணிக்குப் போக இருந்தவர்தானே? நீங்களே அவர்களைக் கூப்பிட்டு வைத்துக் கல்வி தரலாமே?" என்றதும் முகத்தில் ஒரு பிரகாசம்.

"நல்ல யோசனை. ஆரம்பித்துவிட வேண்டியதுதான்!"

சந்திப்பு : **ஔரங்கசீப்**

படங்கள் : **யோகா**

"நடராஜ் எஸ்டேட்டில் மெம்பர் ஆன பிறகு காய்கறி வாங்க வேண்டுமே என்கிற கவலை இன்றி நிம்மதியாக ஆபீஸ் சென்று வருகிறேன்."



# நடராஜ் எஸ்டேட்ஸ்

வழங்கும்

ஈடு இணையற்ற லாபகர திட்டம்

## வாரம் தோறும் காய்கறிகள்

உங்கள் இல்லம் தேடி வருகிறது

(சென்னை நகருக்கு மட்டும்)

## காய்கறி விபரம்

வாழைக்காய், வெண்டைக்காய், கத்திரிக்காய், புடலங்காய், பாகற்காய், வெள்ளரிக்காய், கொத்தவரங்காய், பூசனிக்காய், பரங்கிக்காய், முருங்கைக்காய், தக்காளி, முள்ளங்கி, பீன்ஸ், இஞ்சி, கொத்துமல்லி, பச்சை மிளகாய் கறிவேப்பிலை, கீரை வகைகள் மற்றும் கேரட், பீட்ருட், கோஸ், உருளைக்கிழங்கு, சேனைக் கிழங்கு, வெங்காயம் - போன்றவை வாரந்தோறும் மாற்றி மாற்றி சப்ளை செய்யப்படும்.



- வாரந்தோறும் சப்ளை வேண்டுவோர் ரூ.5000/- செலுத்தி 3 வருடங்களுக்கு மெம்பர் ஆக வேண்டும்."
- 3 வருடங்களுக்கு பிறகு மீண்டும் ரினிவல் செய்து கொள்ளலாம். அல்லது திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.
- சப்ளை செய்யப்படும் காய்கறிகளுக்காக நீங்கள் தனியே பணம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லை.
- வாரம் தோறும் சப்ளை செய்யப்படும் காய்கறிகளின் மதிப்பு சராசரி ரூ.50/-.
- இலவசம் - காய்கறி நறுக்கும் கட்டர் மற்றும் நடராஜ் பதிப்பகத்தின் வெளியீடு ஒன்று.
- உங்கள் "மெம்பர்ஷிப்" கட்டணத்திற்கு 12% வட்டியும் உண்டு.

Ariya Perumpakkam Village,
(Survey No : 444/1 to 461/3D)




# NATARAJ ESTATES

"Shanthi Complex", 3rd Floor, 26, Ranganathan Street, T. Nagar, Madras - 600 017.

**Phone : 4342098, 4840150**

NATARAJ GROUP OF COMAPANIES :
Nataraj Finance & Investments
Nataraj Chits (Tamilnadu) Pvt. Ltd.,
Nataraj Exports overseas, Nataraj Publications

**24% P.A.**

# சில்க் ஸ்மிதாவை கவர்ச்சிக்

# கன்னியாக மட்டுமே காண

# விரும்புகிறவர்கள் தயவுசெய்து

# இந்தப் பேட்டியைப் படிக்க வேண்டாம்!

"நீங்கள் சினிமா உலகத்துக்கு வந்து பதினாறு ஆண்டுகள் முடிந்து விட்டன. இந்த அனுபவத்தில், நீங்கள் வந்த புதிதில் இருந்த சினிமா உலகத்துக்கும் இப்போதைக்கும் ஏதாவது வித்தியாசத்தை உணர்கிறீர்களா?"

"இன்றைய சினிமா உலகம் என்பது தொழில்நுட்ப அடிப்படையில் பார்த்தால் பிரமிக்கத்தக்க அளவில் முன்னேறியிருக்கிறது. நான் வந்த புதிதில் இப்படியில்லை. தொழில்நுட்பம் முன்னேறியதாலோ என்னவோ, இப்போதெல்லாம் பெரும்பாலானவர்கள்



குறித்த நேரத்துக்கு வருவதேயில்லை. ஒன்பது மணிக்கு ஷூட்டிங் என்றால் பத்து மணிக்குத்தான் வரவே ஆரம்பிக்கிறார்கள். அப்புறம் படங்களில் கதையம்சம் என்பது அபூர்வமான விஷயமாகத்தான் இருக்கிறது. 'இந்தியன்' படத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். அதில் கமல் மிக அற்புதமாக நடித்திருக்கிறார் என்பதைத் தவிர, கதை என்று ஒன்றுமே இல்லை. 'லஞ்சம் வாங்கக் கூடாது; லஞ்சம் கொடுக்கக் கூடாது' என்பதுதான் கதை! இதுதான் வித்தியாசம்."

"இன்னொரு முக்கியமான வித்தியாசமும் இருக்கிறது..."

"என்ன?"

"முன்பெல்லாம் கவர்ச்சியாக நடிப்பதற்கு ஒரு 'சில்க்' தேவைப்பட்டார். இப்போது தேவையில்லை என்கிற நிலை! கதாநாயகிகளே கவர்ச்சியாகவும் நடிக்க ஆரம்பித்து விட்டார்களே?"

"இன்றும் 'சில்க்' தேவையில்லை என்பதில்லை. இன்றைக்கு எல்லாருமே 'சில்க்' ஆகிவிட்டார்கள் என்பதுதான் உண்மை!"

"இதனால் உங்களுடைய வாய்ப்புகள் குறையும் என்கிற நிலையில் உங்களுக்கு வருத்தம் ஏதும் இல்லையா?"

"முன்பெல்லாம் கவர்ச்சியாக நடிப்பதற்கு என்னைப் போல் இரண்டு மூன்று பேர்தான் இருந்தோம் என்கிற நிலையில், எங்களுக்கு ஏகப்பட்ட கால்ஷீட் பிரச்னைகள் இருந்தன. இப்போது கதாநாயகிகளே



கவர்ச்சியாகவும் நடிக்க ஆரம்பித்து விட்டதால் எங்களுக்கு இப்போது சாவகாசமாக மூச்சு வாங்கிக் கொள்ள நேரம் கிடைத்திருக்கிறதே! அந்த வகையில் சந்தோஷம்தானே தவிர, வருத்தம் ஏதும் இல்லை.''

**"நிஜமாகச் சொல்லுங்கள்... நீங்கள் நடிக்க வருகிறபோது, இப்படியொரு கவர்ச்சி நடிகையாக வேண்டுமென்கிற கனவோடு தானா வந்தீர்கள்?''**

"நிச்சயமாக இல்லை. சாவித்திரி அம்மா போல் சிறந்த நடிகையாக நடித்துப் பேர் வாங்க வேண்டும் என்கிற எண்ணத்தோடுதான் வந்தேன். அதனால்தான் எனது பெற்றோரின் விருப்பத்தையும் மீறி கதாநாயகியின் கனவுகளோடு சென்னைக்கு வந்தேன்.''

**"உங்கள் பெற்றோரின் விருப்பம் என்ன?''**

"என் பெற்றோருக்கு நான் ஒரே பெண். எனக்கு ஒரு தம்பி. விவசாயம்தான் தொழில். சொந்த ஊர் ஆந்திராவிலுள்ள ஏலூர். சொந்தப் பெயர் விஜயலட்சுமி. ஒரு சராசரிக் குடும்பம் என்பதால், நான் பெரியவளானதும் எனக்குக் கல்யாணம் செய்து பார்க்க வேண்டும் என்கிற ஆசைதான் பெற்றோருக்கு. எனக்கோ கதாநாயகி ஆசை.''

**"அப்புறம் எப்படி கிளாமர் ரோல்களில் நடிக்க ஒப்புக் கொண்டீர்கள்?''**

''எனது பெற்றோரின் ஒத்துழைப்பு இல்லாத போதும் ஸ்கூல் படிப்பைக் கூட முடிக்காத எனக்கு, சினிமா ஆசை மட்டும் அளவு கடந்து இருந்ததால் எனது அத்தையை அழைத்துக் கொண்டு சென்னைக்கு வந்தேன். ஒவ்வொரு சினிமா கம்பெனியாகச் சென்று சான்ஸ் கேட்டேன். அப்போது நான் பொம்மை மாதிரி கொழுக்மழுக் என்று இருந்தாலும் சிறு பெண்தான். அதனால், 'உன்னைச் சிறு பெண் வேஷத்திலும் போட முடியாது. பெரிய பெண் வேஷமும் கொடுக்க முடியாது. போம்மா. திரும்பி ஊருக்குப் போகிற வழியைப் பார்!' என்று பலரும் எனக்கு சான்ஸ் தர மறுத்து விட்டார்கள். பெற்றோரின் விருப்பத்தை மீறி வந்த நான், திரும்பி ஊருக்குப் போவது கௌரவமாக இருக்குமா? அதனால் எப்படியாவது சான்ஸ் வாங்கியே தீரவேண்டும் என்பதை ஒரு சவாலாகவே எடுத்துக் கொண்டு மீண்டும் மீண்டும் முயற்சி செய்தேன். அப்போது பட்டினியெல்லாம் கிடக்க வேண்டியிருந்தது. அதையெல்லாம் தாங்கிக் கொண்டு

# சினிமாவில் சில்க்; வாழ்க்கையில் விஜயலட்சுமி!



முயற்சி செய்தேன். பெரிய பெண்ணாகத் தெரிய வேண்டுமே என்பதற்காகச் சேலையெல்லாம் கட்டிக் கொண்டு செல்வேன்! ஒரு வருஷ முயற்சிக்குப் பிறகு 'வண்டிச்சக்கரம்' படத்தில் சான்ஸ் கிடைத்தது. ஸ்மிதாவாக சினிமா பிரவேசம் செய்த நான், வண்டிச்சக்கரம் படத்தில் நான் ஏற்று நடித்த பாத்திரத்தின் பெயர் 'சில்க்'

**● ஆற்காட்டு நவாபு குதிரைகளைக் கட்டுகிற இடமாக இது விளங்கியதால் 'கோடாபாக்' என்று பெயர் வைத்தனர். 'கோடா' என்றால் குதிரை. 'கோடாபாக்' என்பதுதான் நாளடைவில் கோடம்பாக்கம் ஆகிவிட்டது!**

**தகவல் : எஸ். எஸ். பூங்கதிர்**

என்பதால் அந்தப் பெயரே நிலைத்து விட்டது.

**" 'அலைகள் ஓய்வதில்லை' படத்தில் நல்ல கேரக்டர் ரோலும் செய்திருக்கிறீர்களே! அப்படியிருந்தும் ஏன் கிளாமர் ரோல்களாகவே வந்தன?"**

"வண்டிச்சக்கரம் ரிலீஸான பிறகுதான் அலைகள் ஓய்வதில்லை ரிலீஸ் ஆனது. நான் இரண்டிலுமே சிறப்பாக நடித்திருப்பதாகப் பேசப்பட்டாலும் ரசிகர்களின் மத்தியில் நான் வண்டிச்சக்கரத்தில் நடித்த 'சில்க்' என்ற பாத்திரமே ஆழமாகப் பதிந்து விட்டது. எனவே தான், நான் மீண்டும் மீண்டும் கிளாமர் ரோல்களிலேயே நடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது."

**"இந்த நிர்ப்பந்தம் குறித்து நீங்கள் வருத்தப்படவில்லையா?"**

"சாவித்திரி அம்மாவைப் போலவே எனக்கும் பாப்புலாரிட்டி கிடைத்திருக்கிறதே!"

**"அதற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. வெளிப்படையாகச் சொன்னால், சாவித்திரியின் நடிப்பை ரசித்தார்கள். உங்களைப் பொறுத்தவரை, உங்களுடைய நடிப்பைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு கச்சிதமான உடலமைப்பைத்தான் முதலில் ரசிக்கிறார்கள் என்கிற வித்தியாசத்தை நீங்கள் உணரவில்லையா?"**

"எனக்கும் இது தெரியாமலில்லை. என்றாலும் வேறு வழியில்லை. முதல் படத்தைப் பார்த்துவிட்டு, ரசிகர்கள் எப்படிப்பட்டதொரு முத்திரையைக் குத்துகிறார்களோ, அதைக் கடைசி வரைக்கும் அழிக்கவே முடியாது என்பதை நான் மிகவும் தாமதமாகத்தான் தெரிந்து கொண்டேன். அதனால்தான் தமிழில் எனக்குக் கேரக்டர் ரோல்கள் கிடைக்கவில்லை. என்றாலும் அண்மையில் கூட மலையாளத்தில் அற்புதமான ஒரு கேரக்டர் ரோலில் நடித்து முடித்தேன். அந்த வகையில் நான் ஒருவாறு திருப்திப்பட்டுக் கொண்டு விடுகிறேன்!"

**"நீங்கள் படத்தயாரிப்பில் கூட இறங்கினீர்கள் இல்லையா?"**

"ஆமாம். அதுவொரு கசப்பான அனுபவம். அதை எனது கெட்ட நேரம் என்று சொல்வதா? விதி என்றுதான் சொல்வதா என்று இப்போதும் எனக்குப் புரியவில்லை. படத்தயாரிப்பு பற்றி எதுவுமே தெரியாத நான், எப்படியோ தயாரிப்பில் இறங்கியதால், என் சம்பாத்தியத்தையெல்லாம் இழந்து விட்டேன்... (மௌனம்). பசி, தூக்கம் பார்க்காமல் ஒரு நாளைக்கு மூன்று ஷிப்ட், நான்கு ஷிப்ட் என்று நடித்துச் சம்பாதித்த அத்தனையையும் இழந்து விட்டேன்... (மௌனம்). அந்த இழப்பு என்னை விரக்தியின் உச்சிக்கே கொண்டு போய் விட்டது. அதன் காரணமாக, 'இனி இந்த சினிமாவே வேண்டாம்' என்று இரண்டாண்டு காலம் ஒதுங்கியே இருந்தேன்."

**"பிறகு எப்படி மனம் மாறினீர்கள்?"**

"அப்போது டைரக்டர் மணிரத்னம் 'கீதாஞ்சலி' என்கிற தெலுங்குப் படம் ஒன்றை எடுத்துக் கொண்டிருந்தார். அதில் வரும் ஒரு கேரக்டருக்கு என்னைப் போட்டால்தான் சரியாக இருக்கும் என்று தயாரிப்பாளரிடம் சொல்லி விட்டார். அந்தத் தயாரிப்பாளர் என்னிடம் கேட்டபோது நான் மறுத்து விட்டேன். இருந்தும் அவர் விடவில்லை. அவரது மானேஜரைத் தினமும் அனுப்பி என்னைத் தொந்தரவு தர ஆரம்பித்து விட்டார். அந்தத் தொல்லை தாங்க முடியாமல் நானும் ஒப்புக் கொண்டேன். இப்படி ஒரு படத்துக்கு ஒப்புக் கொண்டதால் மற்ற படங்களுக்கும் ஒப்புக் கொள்ள வேண்டியதாகி விட்டது."

**"ஒரு காலகட்டத்தில், நீங்கள் கடித்துக் கொடுத்த ஆப்பிள் கூட ஆயிரக்கணக்கில் ஏலம் போனதாகச் செய்திகள் வந்தன. அப்போதெல்லாம் உங்களுடைய மனோநிலை எப்படி இருந்தது?"**

"அதையெல்லாம் ஒரு விளையாட்டுப் போல்தான் எடுத்துக் கொண்டேனே தவிர, சீரியஸாக எடுத்துக் கொண்டதில்லை. இன்றைக்குக் கூட ஒரு ரசிகர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அவர் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்தான் என்றாலும் நான் அவரைத் திருமணம் செய்து கொண்டால் என்னைக் கண்கலங்காமல் வைத்துக் காப்பாற்றுவதாக எழுதியிருக்கிறார். இதையெல்லாம் நான் என்னவென்று எடுத்துக் கொள்வது?"

**"எந்தப் படத்தில் நடிக்கும்போதாவது 'இதுபோன்ற காஸ்ட்யூம்களையெல்லாம் என்னால் போட்டுக் கொண்டு நடிக்க முடியாது' என்று நீங்கள் மறுத்த அனுபவம் உண்டா?"**

"இல்லை... (சிரிப்பு). காரணம், எனது காஸ்ட்யூம்களை நானேதான் டிசைன் செய்து கொள்கிறேன். எனது எந்த செலக்ஷனையும் இது வரை எந்த டைரக்டரும் மறுத்ததில்லை."

**"நடிப்போடு காஸ்ட்யூம் டிசைனும் செய்கிறீர்களா என்ன?"**

"மற்றவர்களுக்கு அல்ல. எனக்கு மட்டும் தான். அதோடு பழைய பொருட்களை எங்கு பார்த்தாலும் உடனடியாக வாங்கி வந்து விடு

# KALKI SHOPPING PAGE



## பாலசுப்பிரமணியன் மெட்டல்ஸ்

B S M

3-A, 4-வது மெயின் ரோடு, நங்கநல்லூர்,
(சிவன் கோயில் எதிரில்) சென்னை - 600 061. ✆ 2343344.

வீட்டுக்குத் தேவையான அனைத்து எவர்சில்வர், பித்தளை பாத்திரங்கள் மற்றும் மிக்ஸி, கிரைண்டர், குக்கர், பிரிட்ஜ், டி.வி, பர்னிச்சர் அனைத்தும் குறைந்த விலையில் வாங்க சிறந்த ஸ்தாபனம்!

**Authorised Dealers for :**

**Prestige, Sowbaghya, Grundig, Videocon, Khaitan, Preeti Mixie etc.**

கேஸ் அடுப்பு சர்வீஸ் செய்தும் மற்றும் வாடகைக்கும் தரப்படும்.

## NARAYANAPEARLS IIIRD ANNIVERSARY OFFERS




முத்து ஆபரணங்கள் பவளம், அமெரிக்கன் டைமண்டஸ், குந்தன் ஆபரணங்கள், துளசி செடலை (துளசி செட்ஸ்) குந்தன் ஆபரணங்களுடன்) Silver with Gherupolish (Antique Polish) Hyderabad Gold Foil Beeds எல்லாம் ஹைதராபாத் விலையில் கிடைக்கும் Special Arrangements for our IIIrd Anniversary Ruby, Emerald, and jade available here

## NARAYANA PEARLS

(HYDERABAD PEARLS MERCHANT)
4, Basement, Kasi Arcade, 116, Thyagaraya Road,
(Baag Road Junction) T. Nagar,
Madras-17. ✆ 82581714

**EVERY PURCHASE OF Rs.1000/-
YOU CAN GET ONE PAIR PERAL BANGLE FREE**



''அந்த ஆளுக்கு 'லஞ்ச புத்தி'....!''

''எப்படிச் சொல்றே...?''

'' 'கடனா' அம்பது ரூபா கேட்டதுக்கு இல்லேன்னு சொன்னவன்... 'லஞ்சமா' அம்பது ரூபா தாயேன்னு கேட்டதும் தந்துட்டானே...!''

– கே.ஜி.எஸ். கோவிந்தன்

---

வேன். புதுமையானதாக இருந்தாலும் வாங்கி வந்து விடுவேன்!"

**''உங்கள் வரவேற்பறை ஷோகேஸில் நிறைய சாம்பின் மதுபாட்டில்கள் இருக்கின்றனவே...''**

''அவற்றின் அழகுக்காக மட்டும்தான் வாங்கிவந்து வைத்திருக்கிறேன். அந்தச் சின்னச் சின்னப் பாட்டில்களின் அழகே தனிதான். மற்றபடி நான் குடிக்க மாட்டேன். நீங்கள் நம்பலாம். நான் விரும்பிக் குடிப்பது அருமையான ஃபில்டர் காப்பி. எதிர்வீட்டு மாமி மிக அற்புதமாகப் போட்டுத் தருவார். அடிக்கடி குடிப்பேன். என்னை வெளியில் பார்த்தாலே போதும், 'சில்க், வந்து காப்பி குடிச்சிட்டு போ!' என்பார்."

**"ஏன் உங்களுக்குக் கலக்கத் தெரியாதா?"**

"டிகாக்ஷன் இறக்கிக் காப்பி கலக்குவதென்பதே ஒரு தனி கலை. அது எனக்கு அவ்வளவாக வராது."

**"முன்பெல்லாம் உங்களோடு எப்போதும் ஒரு தாடிக்காரர் இருப்பதாகச் செய்திகள் வருவதுண்டு...''**

"ஆமாம். அவர் பெயர் ராதாகிருஷ்ணன். எனது சொந்தக்காரர். நான் ஆரம்பத்தில் சினிமாவில் சேர ஓர் அத்தையை அழைத்து வந்தேன் அல்லவா... பிறகு அவரது குடும்ப வேலைகள் காரணமாக என்னோடு வர இயலாமல் போன போதுதான் இவர் வந்தார். எனக்கு ஆரம்பத்தில் சினிமா உலகம் என்பது ஒரு புதிய அனுபவமாக இருந்ததால் துணைக்கு ஒரு ஆள் தேவைப்பட்டது. பிறகு இவரும் தமது வேலைகளைக் கவனிக்கச் செல்ல வேண்டியிருந்ததால், பிறகு ஒரு அழகுக்கலை நிபுணரான ஒரு பெண்ணை என்னோடு வைத்துக் கொண்டேன். அவர் வெளிநாடு போய் விட்டதால் வேணும்னு அடம்புடிக்கறாரு!" ஓய்வு பெற்ற ஓர் ஆசிரியை என்னோடு வந்தார். அவருக்கும் வயதானதால், அதே சமயம் சினிமா உலகத்திலும் அனைவருமே தெரிந்தவர்களாகி விட்டதால் நானே தனியாகச் செல்ல ஆரம்பித்து விட்டேன். இப்படி என்னோடு மூன்று பெண்களும் வந்திருக்கிறார்கள். அதையெல்லாம் எழுதாத பத்திரிகைகள் ராதாகிருஷ்ணன் வந்ததைத்தான் பெரிதுபடுத்திக் கிசுகிசு எழுதின. சரி, ஒரு சுவாரஸ்யதுக்காக எழுதுகிறார்கள் என்று நானும் அதற்கெல்லாம் பதில் சொல்லாமல் விட்டு விட்டேன்."

**"சில ஆண்டுகளுக்கு முன்பு 'அன்னை தெரசா போல் சேவை செய்ய வேண்டும் என்பதே என் ஆசை' என்று நீங்கள் சொன்னது பற்றிக்கூட விமர்சனங்கள் எழுந்தன...''**

"ஆமாம்! தெரியாமல்தான் கேட்கிறேன், எனக்கு அப்படியொரு ஆசை வரக்கூடாதா? மற்றவர்களுக்கு நான் உதவக் கூடாதா? படத்தில் பார்க்கிற 'சில்க்'கை ஏன் வாழ்க்கையிலும் பார்க்கிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை. சினிமா நிஜமல்ல; அது நடிப்பு. வாழ்க்கையில் எனக்கு நடிக்கத் தெரியாது. அதனால் சினிமா 'சில்க்'கோடு இந்த நிஜ விஜயலட்சுமியை ஒப்பிடக் கூடாது. நீங்கள் இப்படி வெளிப்படையாகப் பேசுவதால் நானும் இவ்வளவு காலமாக யாரிடமும் சொல்லாத ஒரு விஷயத்தை உங்களிடம் சொல்கிறேன். கடந்த பன்னிரண்டு வருடங்களாக ஒவ்வொரு பொங்கலின் போதும் நூற்றைம்பது பேருக்கு இலவசமாகத் துணிகள் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். ஒருவேளை நான் பொங்கலன்று சென்னையில் இல்லாமல் போய் விட்டால் தமிழ் வருஷப் பிறப்பான சித்திரை முதல் தேதியில் அதைக் கொடுப்பேன். இதையெல்லாம் நான் விளம்பரத்துக்காகவா செய்து கொண்டிருக்கிறேன்... இப்படியெல்லாம் விமர்சனம் செய்கிற போதுதான் என் மனம் மிகவும் கஷ்டப்படுகிறது."

**"உங்கள் திருமணம் எப்போது?"**

"இன்னும் இரண்டொரு ஆண்டுகளில்."

**"காதல் திருமணமா?"**

"ஆமாம். என்னைப் பற்றி முழுவதும் தெரிந்தவர் கணவராக வரும்போதுதான் பின்னாட்களில் பிரச்னைகள் வராமல் இருக்கும். முன் பின் தெரியாத ஒருவரைத் திருமணம் செய்து கொண்டால், 'ஐய்யோ.... நீ இப்படிப்பட்ட காஸ்ட்யூம்களில் கூடவா நடித்திருக்கிறாய்' என்றெல்லாம் கேள்விகள் வர வாய்ப்பிருக்கிறதே!"

**''அப்படியானால், மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்து விட்டீர்கள் என்று சொல்லலாமா?"**

"ஆமாம்."

**"யார்?"**

''அதை மாத்திரம் இப்போது சொல்ல மாட்டேன்."

சந்திப்பு : **இளங்கோவன்**

வண்ணப்படங்கள் : **யோகா**


# பொன் விளையும் பூமி

**கூடுவாஞ்சேரி:**

**அவ்வை நகர் (1121/95)**

**ராஜாஜி நகர் (532/95)**

**திருக்குறள் நகர் பகுதி I (1057/95)**



**ஃபோர்டு கார்**
**தொழிற்சாலை அருகே**

வேகமாக வளர்ச்சியடைந்து வரும் கூடுவாஞ்சேரியில் மதிப்பு வாய்ந்த வீட்டு மனைகளை உங்களுக்கு வழங்குகிறது டிஎல்வி. இந்நிறுவனம், இருபது ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு துறைகளில் தன் பெயரை நிலை நாட்டியுள்ளது.

மனைகளுக்கான பணம் செலுத்தும் போது வியப்பூட்டும் தள்ளுபடிகள் மற்றும் தங்கப் பரிசுகள் பெறலாம்.

15 தினங்களுக்குள் முழுத் தொகை - 11% தள்ளுபடி + 3 கிராம் தங்ககாசு.

30 தினங்களுக்குள் முழுத்தொகை - 10% தள்ளுபடி + 2 கிராம் தங்ககாசு

60 தினங்களுக்குள் முழுத்தொகை - 5% தள்ளுபடி + 1 கிராம் தங்ககாசு

**இலவசம். மனைக்கு செல்ல வாகன வசதி - காலை 6, 11 மணி. மாலை 3 மணி.**

*மேற்கொண்டு விபரமறிய எங்களை அணுகவும் :*

Quality is Our Strength

**டிஎல்வி ஹவுஸிங் & ஃபைனான்ஸ் (பி) லிமிடெட்,**

54, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, புவனேஸ்வரி தியேட்டர் எதிரில், சென்னை - 600 007.
போன்: 5325311/12/13 ஃபேக்ஸ் : 5325363

***20 ஆண்டுகளுக்கு மேலாக நன்மதிப்பை கட்டிக்காப்பவர்கள்***

**லக்ஷ்மி ஸ்டார் டெபாஸிட் திட்டம் பகுதி பணம் எடுக்கும் வசதியை தன்னுள் கொண்டது.**



LAKSHMI STAR LVB SCHEME

***சிறப்பம்சங்கள்:***

- காலஅளவு 30 நாட்கள்
- குறைந்த பட்ச டெபாஸிட் ரூ. 1000, மற்றும் அதன் பெருக்கங்கள்
- தானாகவே புதுப்பிக்கும் வசதி
- ரூ. 1000/- கொண்ட அளவுகளில் பகுதி பணம் எடுக்கலாம். இருப்புத் தொகை தொடர்ந்து வட்டி பெறும்.

**என்றென்றும் ஆனந்தம் மலர, இன்றே சேருங்கள்**

மேலும் விபரங்களுக்கு அணுகுவீர்:

**லக்ஷ்மி விலாஸ் பேங்க் லிமிடெட்.**
பதிவு மற்றும் நிர்வாக அலுவலகம்:
சேலம் ரோடு, காதப்பாறை
கரூர் - 639 006. தமிழ்நாடு

**ஜி.வி. ராவ்**
சேர்மன்

உயர்வான சேவையை நட்புடன் வழங்கும் LVB

ADWAVE/LVB/5187 TAM



# எங்கிருந்தோ வந்தான்

**கிருஷ்ணா**

கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னே வந்தான் அவன்.

க்ரூடு ஆயில் ஏற்றி வந்த லாரி, அந்த வீட்டின் மேல் மோதியபடி நின்று கொண்டிருந்தது.

லாரியின் மோதலால், வீட்டின் முன் பகுதி இடிந்து போயிருந்தது.

லாரியோ எக்குத்தப்பாய் சாய்ந்த படி பாதி சயனத்தில் இருந்தது.

எண்ணெய் அதிலிருந்து ஒழுகிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

'ஹைலி இன்ஃப்ளேமபிள்' என்று சிவப்பு நிறத்தில் லாரியின் பின்புறமுள்ள டாங்கரில் எழுதப் பட்டிருப்பதை நோக்கினான்.

"பாத்ரூமிலே பல் தேய்க்கக் கிட்டிருந்தேன். மடேல்னு சத்தம். போட்டது போட்டபடி ஓடி வந்து பார்த்தா இது நிக்குது வீட்டுக் குள்ளே. எமனோட வாகனமாச்சே இப்ப இது!"

லாரியை சுட்டிக் காண்பித்த படி பேசிக் கொண்டிருந்த பெரியவரை கவனித்தான் அவன்.

வேட்டி, பனியன், மேல் துண்டு, வழுக்கைத் தலை, ஒல்லியான தேகம். அறுபது வயதிருக்கும். அவர்தான் வீட்டுச் சொந்தக்காரராய் இருக்க வேண்டும்.

"எல்லாம் விதி! காலையிலே எழுந்ததுமே நஷ்டம்னு தலையெழுத்து!"

பெரியவரின் குரலில் கோபமும், விரக்தியும் வெளிப்பட்டது.

முப்பது, நாற்பது பேர் சுற்றி நின்று பெரியவர் பேச்சை சுவாரஸ்யமாய் கவனித்துக் கொண்டிருந்தனர்.

"டிரைவர் ஓடிட்டான் போலிருக்கு. நல்ல வேளை, கொஞ்சம் தள்ளி மோதியிருந்தா, என் பேத்தியும், பேரனும்.... நினைக்கவே பயமாயிருக்கு. அந்த ரூமில்தான் தூங்கிக்கிட்டிருந் தாங்க!"

பெரியவர் குரல் நடுங்கியது.

லாரியிலிருந்து ஒழுகும் எண்ணெயைக் கவலையுடன் பார்த்தான் அவன்.

"ஜி.எஸ்.டி. ரோடு ஓரம் வீடு கட்டினாலே பிரச்சனைதான். எப்ப, எது வந்து மோதும்னு சொல்ல முடியாது!"

"எல்லா டிரைவருமே இப்ப குடிச்சுட்டு தான் ஓட்டுறாங்க, கலிகாலம்!"

கைலி, சட்டையில் இருந்த ஒருவன் சிகரெட்டை எடுத்து வாயில் வைத்தபடி 'காலத்தைப்' பற்றிச் சொன்னதும், பதறிப் போனான் அவன்.

"சார், பத்த வைச்சிடாதீங்க!"

ஓடிப் போய் அவர் கையிலிருந்த தீப் பெட்டியைப் பிடுங்கினான் அவன்.

"என்னங்க, படிச்சவர் மாதிரி தெரியறீங்க. ஆயில் எப்படி கொட்டிக் கிடக்குது பார்த்தீங்களா? வீடும் லாரியும் குப்புனு பத்திக்கும், சின்ன தீப்பொறி பட்டாலும்."

இரைந்த குரலில் அவன் அதட்டியதும் எல்லோரா பார்வையும் அவன் மேல் பதிந்தது.

"இப்படி வேடிக்கை மட்டும் பார்த்தால் சரியாயிடுமா?"

பொதுப்படையாய் அவன் கேட்டான்.

"வேற என்ன பண்றதாம்?"

அந்த குண்டு ஆள் குத்தலாய்ப் பேசினான்.

அவன், வீட்டின் சொந்தக்காரரான பெரியவரை அணுகினான்.

"சார், வீட்டுல யார் இருந்தாலும் உடனே வேற இடத்துக்குக் கூட்டிட்டுப் போயிடச் சொல்லுங்க. எண்ணெய் எவ்வளவு சிந்திக் கிடக்குது பாருங்க? முன் ஜாக்கிரதை வேணாமா?"

பெரியவருக்கு ஆபத்து புரிந்து போய்ப் பதறினார்.

"என் பையன் வேற ஊரிலில்லே. மருமகளும், குழந்தைகளும் மட்டும்தான் இப்ப இருக்காங்க."

"அதனாலென்ன? பதறாம இருங்க. நான் இருக்கேன் கூட."

**அ**டுத்த ஐந்து நிமிடத்தில் தெரிந்தவர் மூலம் வீட்டு நபர்கள் அழைத்துச் செல்லப் பட்டனர் வேறிடத்துக்கு.

"பெரியவரே, பூட்டு, சாவி எங்கேயிருக்கு?"

"எதுக்கு தம்பி?"

"கூட்டம் வரவர அதிகமாயிட்டே போகுது. வீட்டு அறைகளைப் பூட்டிடலாம். முன்பக்கமா யாரும் உள்ளே புக முடியாதபடி லாரி நிக்குது. பின் பக்கம் கொல்லைக்கதவு இருக்கா? இருக்கற பொருளை காபந்து பண்ணிடறது நல்லது."

பெரியவர் சுறுசுறுப்பானார்.

"தம்பி, ரொம்ப நன்றிப்பா. எல்லாத்தையும் பூட்டிட்டேன். சமயசஞ்சீவியாய் வந்திருக்க!"

அவன் கையைப் பிடித்துக் கொண்டு தழுதழுத்தார்.

"போலீசுக்கும் தீயணைப்பு நிலையத்துக்கும் தகவல் கொடுக்கணும், போன் பண்ணிடலாம். பக்கத்துல போன் இருக்கா?"

"பெரியவரே, யாரையாவது அனுப்புங்க. போன் பண்ண ரூபாய் இருக்கா?"


"அது... உள்ளேயிருக்கு."

---

**"தொடர்ந்து இந்த இடத்தில ஏகப்பட்ட விபத்துக்கள் நடக்குதே, என்ன நடவடிக்கை எடுத்தீங்க?"**

**"பக்கத்தில பெரிய ஆஸ்பத்திரி கட்ட அனுமதி வழங்கிட்டோம்!"**

**— லலிதா செல்லப்பா**



"நோ ப்ராப்ளம்."

தன் பையிலிருந்து ஐந்து ரூபாயை எடுத்து நீட்டினான்.

பக்கத்து வீட்டுப் பையனைக் கூப்பிட்டு பெரியவர் போன் பண்ணச் சொன்னார்.

அதற்குள் அவனின் செயல்பாடு கண்டு கூட்டம் அவனை மதிப்பாய்ப் பார்த்தது.

அவன் சுற்றுமுற்றும் பார்ப்பதைக் கண்டு பெரியவர் கேட்டார்:

"என்னப்பா?"

"பக்கத்துல மண்... அதோ... ஏதோ கட்டட வேலை நடக்குது போலிருக்கே. ஆபத்துக்குப் பாவமில்லே."

அவன் நடக்க ஆரம்பிக்க, கூட்டம் வழி விட்டது. பின்னே ஏழெட்டு பேர் அவனைத் தொடர்ந்தனர்.

"தம்பி மட்டும் இல்லேன்னா கஷ்டமாயிருக்கும் பெரியவர் நிலைமை..."

"ப்ளீஸ், என் பெருமை இப்ப எதுக்கு? அதோ, வாட்ச்மேன் வராரே?"

குடிசையிலிருந்து வெளிப்பட்ட ஆளை நிறுத்தினான்.

"இவரிடம் பத்து, பன்னிரண்டு சட்டி இருக்கு. ஆளுக்கொரு சட்டியிலே மணலை எடுத்துட்டுப் போய் தேங்கிக் கிடக்கற எண்ணெய் மேலே கொட்டுவோம். நெருப்புப் பிடிக்கற வாய்ப்பு குறையுமே!"

மளமளவென்று வேலை நடந்தது.

"தம்பி, இனி நீயும் எனக்கொரு மகன்தான். வேடிக்கை பார்க்க ஆயிரம் பேர் கூடுவாங்க. ஆனால் சமயத்துல இப்படி கை கொடுத்து உதவுறது..."

**போ**லீசும் தீயணைப்பும் பெரியவர் பேச்சை நிறுத்தியது.

"நல்லா செயல்பட்டிருக்காங்க சார். எங்களுக்கு அதிகமா வேலையே இல்லை."

தீயணைப்பு ஆபீசர் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் பாராட்டினார்.

போலீஸ் தன் வழக்கமான பணியைத் தொடர்ந்தது.

பெரியவரிடம் விசாரணை, லாரி நம்பர், பெயர் குறித்தல், லாரி மோதியதால் ஏற்பட்ட சேதம் பற்றிய குறிப்பு என்று எல்லாம் வழக்கப்படி நடந்தது.

"இன்ஸ்பெக்டர் சார், இந்த தம்பி இல்லைன்னா ரொம்ப திண்டாட்டமாயிருக்கும்."

பெரியவரும் மற்றவர்களும் சொல்ல, கூச்சமாய் நெளிந்தான் அவன்.

"வெல்டன் மிஸ்டர்! யாரு நீங்க?"

இன்ஸ்பெக்டரின் கேள்விக்கு, பதில் சொல்லத் தயங்கி, சுற்று முற்றும் பார்த்தான்.

"நான்தான் இந்த லாரியோட டிரைவர்" என்றான் மெதுவாய்.

# ஏ.டி.எம்முக்கு ஒரு நடை...



**வா**ரம் ஏழு நாள், ஒரு நாளைக்கு இருபத்தி நாலு மணி நேரம் பணம் எடுக்க, செலுத்த ஏற்படுத்தப்பட்ட வங்கி சேவைதான் ஏ.டி.எம். (Automated Teller Machine) என்ற தானியங்கிக் காசாளர்.

ஏ.டி.எம்களை நிறுவி இந்த சேவை அளிக்கும் வங்கிக்கு ஒரு நடை போய் இதற்கான கணக்கைத் திறந்து, பணத்தை முதலீடு செய்தால் ஒரு பிளாஸ்டிக் அட்டை தருவார்கள். இந்த ஏ.டி.எம் அட்டையை வாங்கிக் கொண்டதற்கு அப்புறம் திரும்ப வங்கிக்குள்ளேயே நுழைய வேண்டிய அவசியம் இல்லாமல் கடைத்தெருவிலோ, ரயில்வே ஸ்டேஷனிலோ வைத்த ஏ.டி.எம் மூலம் கொடுக்கல் வாங்கலை நடத்திக் கொண்டு போகலாம்.

ஒவ்வொரு ஏ.டி.எம் அட்டைக்கும் ஒரு எண் உண்டு. இது தவிர அட்டை வைத்திருக்கும் நபருக்கு பிரத்யேக அடையாள எண்ணும் உண்டு. ஏ.டி.எம்மில் அட்டையை நுழைத்து, பின் (pin) என்ற இந்த சங்கேத எண்ணையும் சரியாகக் கொடுத்தால்தான் பணம் எடுக்க, செலுத்த முடியும்.

இந்தப் பாதுகாப்பு தவிர, பணம் எடுக்கும் போது அந்த வாடிக்கையாளரைப் படம் பிடித்து, தேதி, மணி, நிமிடம் விவரத்தோடு பதிந்து வைக்க வீடியோ கேமராவும் ஏ.டி.எம்மோடு இணைக்கப்பட்டிருக்கும். பின்னால் ஏதாவது தகராறு வந்தால், இவர்தான் பணம் வாங்கியது என்று நிரூபிக்க இது உதவியாக இருக்கும்.



• தொடு திரை

வாடிக்கையாளர் ஏ.டி.எம்மை இயக்கிப் பணம் எடுக்க கம்ப்யூட்டர் டெர்மினல் போன்ற அமைப்பு ஏ.டி.எம்மில் இருக்கும். தொடுதிரை (Touch Screen) என்ற இந்த அமைப்பில், கீபோர்ட் தேவையே இல்லாமல் திரையிலேயே ஆங்காங்கு தொட்டுக் காரியம் நடத்தலாம்.

உதாரணமாக ஆயிரம் ரூபாய் பணம் எடுக்க வேண்டும் என்று வைத்துக் கொள்வோம். 'பணம் எடுக்க' என்று திரையில் உள்ள கட்டத்தைத் தொட்டுத் தேர்ந்தெடுத்து எவ்வளவு என்ற விவரத்தையும் அதேபடி தர வேண்டியது.

• திறந்த ஏ.டி.எம்.

கணக்கு எண் மற்றும் எடுக்க விரும்பும் தொகை விவரம் ஏ.டி.எம்மோடு இணைக்கப்பட்ட வங்கி கம்ப்யூட்டருக்கு மின்னலாக சங்கேதமாக அனுப்பப்படும். அங்கே கணக்கில் உடனுக்குடன் பற்று எழுதப்பட்டு, பணத்தைத் தாராளம் என்று கம்ப்யூட்டர் ஏ.டி.எம்முக்கு அனுமதி தரும். வங்கி ராத்திரியில் மூடப் படும்போது இந்தக் கம்ப்யூட்டரிலிருந்து



''ஆனாலும், மாப்பிள்ளைப் பையன் இவ்வளவு சந்தேகப் பேர்வழியா இருக்கக் கூடாது!''

''என்ன சொல்றீங்க?''

''பாருங்களேன்; தாலி கட்டின கையோடு, மொய் எழுதற இடத்துல தானே வந்து உட்கார்ந்து, மொய்ப் பணத்தை கணக்கு எழுதிக்கிட்டு இருக்காரு!''

— வி. ரெங்கநாதன்

😐😐😐😐😐😐😐😐😐😐😐😐😐😐😐😐😐😐

"என்னைத்தான் திருமணம் பண்ணிக்குவேன்'னு நேற்று கூட சொன்னீங்க. அதுக்குள்ளேஅதை மறந்துட்டீங்களா?"

''அதுக்குள்ளே மறந்துடுவேனா? இன்னும் கொஞ்சம் 'டயம்' கொடு....!''

— ஜூனியர் தேஜ்



● முதல் தரமான மனிதர்கள் கருத்துக்களைப் பற்றிப் பேசி விவாதிக்கிறார்கள். சாதாரண மனிதர்கள் நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசி விவாதிக்கிறார்கள். மட்டமான மனிதர்கள் மட்டுமே தனி நபர்களைப் புறம் பேசி விவாதிக்கிறார்கள்.

— சீனப் பழமொழி

தகவல் : ஆர். பார்த்திபன்



குறைந்தபட்ச விவரங்களை இறக்குமதி செய்து கொண்டு இன்னொரு சிறிய கம்ப்யூட்டர் வேலையைத் தொடர்ந்து, விடிந்ததும், 'பெரிசு... இந்தா பிடி' என்று பைசா சுத்தமாகக் கணக்கு ஒப்படைத்து விடும்.

பணத்தை எடுக்க உள்ள வசதி போல, பணம் செலுத்தவும் ஏ.டி.எம்மில் வழிவகை உண்டு. ஏ.டி.எம் நீட்டும் காகித உறையில் செலுத்த வேண்டிய பணத்தை வைத்து, பண வங்கி (Depository) என்ற ஏ.டி.எம் பகுதிக்குள் போட்டால், கவரைப் பெற்றுக் கொண்டதாக ரசீது வந்து விடும். சாவகாசமாக வங்கிக்காரர்கள் வந்து கவரைப் பிரித்து எண்ணி, கணக்கில் வரவு வைப்பார்கள். பணம் போலவே, கணக்கில் வரவு வைக்கக் காசோலைகளையும் செலுத்த முடியும்.

ஏ.டி.எம் எப்படிப் பணம் வழங்குகிறது? அதன் உள்ளே கணிசமான பணம், பணப் பெட்டிகளில் (Currency casettes) நிறைத்து வைக்கப்படும். ஐநூறு ரூபாய் நோட்டுக்களுக்காக ஒரு பெட்டி, நூறு ரூபாய் தாள்களுக்காக ஒரு பெட்டி, ஐம்பது ரூபாய் கரன்சிக்காக இன்னொன்று என்று ரகவாரியாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கும். எந்தப் பெட்டியில் எந்த வகை நோட்டு என்பதை ஏ.டி.எம்மில் பதித்து வைப்பதில் ஏதாவது தவறு என்றால், ஐம்பது ரூபாய் என்று 'நினைத்து' ஐநூறு ரூபாய்த் தாளாக எடுத்து ஏ.டி.எம் ஏக தாராளமாக வழங்கி விடும்!

பணப் பெட்டிகளிலிருந்து தேவையான பணத்தை எடுத்து எண்ணி வழங்க ஏ.டி.எம் உள்ளே இருக்கும் அமைப்பின் பெயர் பண வழங்கி (Dispenser).

வெற்றிடத்தை உருவாக்கிப் பணம் எடுப்பது (vacuum pick), உராய்வு முறையில் எடுப்பது (friction pick) என்ற இரண்டு வேறுபட்ட தொழில் நுட்பங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்ட டிஸ்பென்ஸர்கள் புழக்கத்தில் உள்ளன.

ஒட்டை விழுந்த, கசங்கிய அழுக்கு நோட்டுக்களையும் (நம்மூரில் இவைதான் அதிகம்) ஏ.டி.எம்மில் எண்ணி எடுத்து வழங்க, கையால் எண்ணுவது போல அழுத்தி எடுக்கும் உராய்வு முறைதான் மேலானது என்று ஒருசாரார் அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறார்கள்.

பணம் மட்டுமில்லாமல், அயல்நாடுகளில் உள்ளது போல இங்கேயும் ஏ.டி.எம் மூலம் கனமான காகிதத்தில் அச்சடித்த விமான டிக்கெட்களையும், சின்ன சைஸ் தபால்களையும் கூட வழங்க வெற்றிட முறைதான் சாலச் சிறந்தது என்று எதிராளிகள் கொடி பிடிக்கிறார்கள்.

ஸ்டாம்ப் எல்லாம் வேண்டாம்.... 'இந்தியன்' மாட்னி ஷோ டிக்கட் ஏ.டி.எம்மில் கிடைக்க வழி செய்தால், அரசாங்கக் கட்டடத்துக்குள் எல்லாம் டிக்கட்டுக்காக ஏறி இறங்கத் தேவை இருக்காது!

— இரா. முருகன்

புதிய பகுதி

# செய்திகள், விமர்சனம் செம்மையன்....



ஆயுட்காலம் எவ்வளவோ, அதற்குள் நிறைய சாதிக்கனும் என்ற பரபரப்புடன் செயல்பட்டவர் மணியன். எழுத்தாளர், பத்திரிகை அதிபர், சினிமா தயாரிப்பாளர், வீடியோ உரிமையாளர் என்று பல திக்குகளிலும் பாய்ந்தவர். வெற்றி தோல்விகளை சமமாகக் கருதிய திட சித்தம் படைத்தவர். சிட்டுக் குருவி சின்னத்துடன், இளமை, இனிமை, புதுமை என்று இதயம் பேசுகிறது தொடங்கி, நாளாவட்டத்தில், "ஞானபூமி மணியன்" என்று அழைக்கப்படுவதிலேதான் பெருமை கொண்டார் என்பது அவரது பரிணாம வளர்ச்சியை உணர்த்தும். எங்களிடையே கருத்து மோதல்கள் இருந்ததுண்டு. ஆனால் பள்ளித் தோழமையில் தொடங்கிய நட்பு இறுதி வரை நீடித்தது. அவருடைய சாதனைகள் பல என்றாலும், அவர் இந்த உலகைச் சுற்றினாரா அல்லது உலகம்தான் அவரைச் சுற்றி வந்ததா என்று பிரமிக்கும் அளவுக்கு அவர் எழுதிய பயண இலக்கியங்கள் நிரந்தரப் புகழ் தரும். "இந்த உலகில் எல்லாம் பார்த்து எழுதியாச்சு; இப்ப மறு உலகம் காணப் போயிருக்கார்" என்ற ஓவியர் கோபுலுவின் இரங்கல், நூற்றில் ஒரு வார்த்தை. Fax - ல் கட்டுரை வந்தால் வியப்பதற்கில்லை!




'அழகாக இருக்கிறார்; பெரிசா என்ன சாதித்து விடப் போகிறார்?' என்று சட்டமன்ற நியமன உறுப்பினர் ஆன்டிமான்டி பற்றி நினைத்தது தப்பாப் போச்சு! எடுத்த எடுப்பிலேயே பட்ஜெட்டின் ஒரு முக்கிய குறைப்பாட்டை சுட்டிக் காட்டி கவனத்தைக் கவர்ந்து விட்டார்! 'விளையாட்டுத் துறையை இந்த அரசு கவனிக்கவே இல்லையே' என்று சிக்ஸர் அடித்தார். கலைஞரும் இல்லி தாண்டு, கோலி விளையாடியவர்தான். ஒன்டே மேட்ச் என்றால் டி.வி முன் உட்காருகிறவர்தான். விளையாட்டுத் துறையை விட்டுக் கொடுக்க மாட்டார். ஆரம்பமாக ஜெ. கட்டி வைத்திருக்கிற ஏரான ஸ்டேடியம்களை நன்கு பராமரிக்கவும் பயன்படுத்தவும் ஆவன செய்தாலே போதும். வள்ளுவர் கோட்டம், பூம்புகார் முதலியவற்றை ஜெ. அலட்சியம் செய்தது போல் திமுக அரசும் நடந்து கொள்ளக்கூடாது. ஸ்டேடியங்கள் விழுங்கியது மக்களுடைய பணம்!

பழைய ஆட்சியின் அவலங்கள் அம்பலத்துக்கு வருகின்றன; ஒரு அவலம் தொடர்கிறது. தொடர விடக்கூடாது. அது, பத்திரிகையாளர்களுக்கு 'கவர்' கொடுப்பது. நிருபர்கள் - போட்டோகிராபர்கள், மாநாடோ/கூட்டமோ பத்திரிகை ஆசிரியரால் அனுப்பப்பட்டுத்தான் வருகின்றனர். செலவுகளை அந்தப் பத்திரிகை ஏற்பதுதான் முறை. சமீபத்தில் நடந்த த.மா.கா. மாநாட்டில் கூட ஒருவர், 'கல்கி பத்திரிகை பிரதிநிதி' என்று பிலாவிட்டு, கவர் வாங்கியிருப்பதாகத் தெரிய வருகிறது. பத்திரிகை சுதந்தரத்தையே கேலிக்குரியதாக்கும் கொடிய பழக்கம். முடிவுகட்ட மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சியில் உள்ள கட்சிகள் தீவிரம் காட்ட வேண்டும்.

தமிழகத்தில் தொழில் வளம் பெருக்க ஆர்வமாயிருக்கிறது தி.மு.க. அரசு. வேலை வாய்ப்பு, பொருளாதார மேம்பாடு எல்லாமே அதில் அடக்கம். தடையாக நிற்பது மின் பற்றாக்குறை. இதற்கு இந்தியத் தொழிலகங்களின் கூட்டமைப்பு (தென் பிராந்தியம்) தமிழக முதல்வரை சந்தித்து அரியதொரு யோசனை கூறியுள்ளது. 'புதிய மின் நிலையங்களை உருவாக்கி, மின் உற்பத்தி செய்வதை விடவும் இருக்கிற மின் நிலையங்களை மேம்படுத்துவதன் மூலம், குறைந்த செலவில் அதிகப்பலன் அடையலாம்' என்ற அதன் கருத்தை முதல்வர் அக்கறை கொண்டு ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும். பனை ஓலை விசிறி பட்ஜெட், சீக்கிரமே மின் விசிறி பட்ஜெட்டாகவும் பிறகு ஏஸி பட்ஜெட்டாகவும் மாற வேண்டாமா!

**உயிரே உயிரே ஹரிஹரன்!– இப்படிச் சொன்னால் சினிமா ரசிகர்களுக்குப் புரியும். கர்நாடக சங்கீதத்தில் ஊறித் திளைத்த இந்த பம்பாய் தமிழர் உஸ்தாத் குலாம் முஸ்தபா கானிடம் ஹிந்துஸ்தானி இசை பயின்ற கஜல் பாடகர். அமிர்தவாஹினி அமைப்பு இவரது கஜல் கச்சேரியை முதன் முறையாகத் தமிழகத்தில் நடத்தியது (சென்னை, மதுரை). ரசிகர்கள் வற்புறுத்தலுக்காக அந்த மேடையில் 'உயிரே உயிரே'வும் பாடினார் ஹரிஹரன்! உயிரே உயிரே ஹரிஹரனைப் பேட்டி காண, உயரே உயரே வளர்ந்து வரும் கர்நாடக இசைக் கலைஞரான அனுராதாவை அழைத்திருந்தோம். (அனுராதா, சங்கீத கலாநிதி கே.வி. நாராயணசாமியின் மகள்) கடைசி நிமிஷத்தில் ஹரிஹரன் உடல்நிலை சரியில்லாததால் பேட்டி கான்சலாகிவிட, நம்மைக் காட்டிலும் ஏமாற்றம் அனுவுக்கு... இரண்டு தினங்கள் கழித்து, 'பேட்டி கேட்டீர்களே..?' என்று அமிர்தவாஹினி அமைப்பினர் மீண்டும் அழைக்க, ஒரே ஒரு மணி நேரமே முன்னறிவிப்பு தந்தும் தமது ஸ்கூட்டரில் ஆஜர் ஆனார் அனு!**



**அனுராதா:** வணக்கம்! உங்களை சந்திக்கிறதுல ரொம்ப மகிழ்ச்சி. இப்போ உடல் நிலை சரியாயிருக்கீங்களா? ஹோமியோபதி டாக்டர்கிட்டே போனதாச் சொன்னாங்க. நானும் ஹோமியோபதி மருத்துவத்துல நம்பிக்கையுள்ளவ.

**ஹரிஹரன்:** ஆமாம். ஹோமியோபதி மருந்துகள்னால பின் விளைவுகள் இல்லாம இருக்கு. அதனாலே அந்த ட்ரீட்மெண்ட் சௌகரியமா இருக்கு. இப்போ உடம்பு குணமாயிடுத்து.

**அனுராதா:** எனக்கு ரொம்ப தெளிவா ஒரு விஷயம் நினைவிருக்கு. சில வருஷங்கள் முன்னாடி, டி.வி.யில் உங்க கச்சேரி. எங்க அப்பா... சாப்பிட்டிண்டிருந்தவர் அப்படியே எச்சில் கையோட எழுந்து வந்துட்டார். 'அந்த குரல் எப்படி இழையறது பார்த்தியா?'ன்னு ரொம்ப ரசிச்சு முழுக்க கேட்டார். அவர் சாதாரணமா அவ்வளவு வெளிப்படையா யாரையும் பாராட்டிப் பேசறவர் இல்லே...

**ஹரிஹரன்:** நானும் கூட உங்க அப்பாவினுடைய பரம ரசிகன்தான். ரொம்ப துல்லியமான, சுத்தமான சங்கீதம்.

**அனுராதா:** கர்நாடக சங்கீதப் பின்னணி



யுள்ள ஒரு குடும்பத்துல பிறந்து வளர்ந்து, இப்படி கஜல் பாடகராகி, பின்னாலே சினிமாவிலேயும் பாட ஆரம்பிச்சீங்க...?

**ஹரிஹரன்:** என் பெற்றோர் (எச்.ஏ.எஸ். மணி, அலமேலு மணி) கர்நாடக இசைக் கலைஞர்கள். என்னுடைய வேர்கள் கர்நாடக சங்கீதத்தில்தான்.. ஆனா, வீட்டில் எல்லா விதமான சங்கீதமும் ஒலிக்கும். அமீர் கான் சாப், படே குலாம்அலிகான்சாப் போன்றவர்களுடைய இசையை நிறைய கேட்டிருக்கேன். மராத்தி நாடகமேடை சங்கீதமும் கேட்டு வளர்ந்தேன். எங்க குடும்பத்தைப் பொறுத்த வரைக்கும், இரண்டு விதமான சங்கீதம்தான்

சந்திப்பு:

# உயிரே உயிரே' ஹரிஹரன் உயரே உயரே' அனுராதா!

"என் குதிரைவால் ஹேர் ஸ்டைல் வெறும் ஃபாஷனுக்காக இல்லை. இது ஒருவிதமான சக்தியைக் கொடுக்குது..."



உண்டு- good music, bad music. இப்படி ஒரு பரந்த நோக்கு இருந்ததனாலே நான் ஹிந்துஸ்தானி பாடகரானதோ, சினிமாவிலே பாடறதோ பெரிய கலாசார வேறுபாடா தெரியலை.

**அனுராதா:** கர்நாடக இசைப் பாடகர்களும் உங்களை நிறைய பாதிச்சிருப்பாங்க இல்லையா..?

**ஹரிஹரன்:** ஆமாம். என் அம்மா, பிருந்தாம்மாவிடம் (டி.பிருந்தா), சங்கீதம் கத்துக்கிட்டாங்க. அந்தப் பாணி... பிருந்தாம்மா, பாலாம்மா (பாலசரஸ்வதி) எனக்கு ரொம்பப் பிடிச்ச பாணி.. எம்.டி. ராமநாதன், ராம்நாட் கிருஷ்ணன், மாலி சார்... இவங்க பாட்டெல்லாம் நிறைய கேட்டிருக்கேன். பாதிச்சிருக்கு. ஒரு முறை பம்பாய் ஷண்முகானந்தா சபாவிலே மாலி கச்சேரி. ராகமாலிகை வாசிச்சுண்டிருந்தார். திடீர்னு 'அடுத்து என்ன ராகம் வாசிக்கட்டும்?'னு கேட்டார். எனக்கு அப்ப ஏழெட்டு வயசு இருக்கும். எழுந்து நின்னு "வராளி வாசியுங்கோ.."ன்னு சொன்னேன். அவரும் "வராளியா? சரி..."ன்னு உடனே வாசித்தார். அந்த சம்பவத்துக்கப்புறம் தேவகோட்டை நாராயண ஐயங்கார் (வீணை வித்வான்) என்னை 'டேய் வராளி!'ன்னுதான் செல்லமா கூப்பிடுவார்...

**அனுராதா:** பிருந்தாம்மா சொல்லிக் கேட்டிருக்கேன். 'அந்தப் பையன் நான் என்ன பாடறேனோ அதை அப்படியே திருப்பிப் பாடிடுவான்...' அப்படின்னு ஆச்சரியப்பட்டு உங்களைப் பற்றிப் பேசியிருக்காங்க.

**ஹரிஹரன்:** ஒரு வருஷம் முன்னாடி பிருந்தாம்மா பம்பாய் வந்திருந்தப்போ எங்க கூடதான் தங்கியிருந்தார். திடீர்னு என்னைக் கூப்பிட்டு "ரவி! ஹார்மோனியத்தை எடுத்துண்டு வா! பாடு...!"ன்னார். (ரவி என்பது ஹரிஹரனின் செல்லப்பெயர்- ஞாயிற்றுக்கிழமை பிறந்ததால்...) எனக்குக் கொஞ்சம் உதறல்தான். இருந்தாலும் சரசாங்கி ராகத்துல நான் அமைச்சதைப் பாடிக் காட்டினேன். இப்போ பிருந்தாம்மா ரொம்ப உடம்பு முடியாம இருக்காங்கன்னு கேள்விப்பட்டேன். அவங்களைப் போய்ப் பார்க்கணும்...

**அனுராதா:** ஆமாம். உங்களைப் பார்த்தா நிச்சயமா அவங்களுக்கு ஆறுதலா இருக்கும்... ரஹ்மானுக்கு நீங்க நிறைய பாடியிருக்கீங்க... அந்த அனுபவம் எப்படி...?

**ஹரிஹரன்:** ரஹ்மான் ஓர் அற்புதமான கலைஞர். இன்னொரு கலைஞரிடம் எப்படி வேலை வாங்கறதுன்ற விஷயம் தெரிஞ்சவரும் கூட... நம்மிடமிருந்து முழுமையான ஆற்றலை வெளிக் கொண்டு வந்துடுவார்; டியூன் போட்டார்னா அதை தெளிவா, நெளிவு சுளிவுகளோட விளக்குவார். ஏதாவது ஒரு இடத்துல நம்மை அறியாம சொந்தமா கொஞ்சம் நகாசு பண்ணிட்டா "வாவ்! இது நல்லா இருக்கே.. இப்படியே பாடுங்க.." அப்படின்னு பாராட்டுவார். அவருக்காகப் பாடறது எனக்கு ரொம்பப் பிடிச்ச, சந்தோஷமான விஷயம். மேலும் சினிமாவிலே என்னுடைய கமர்ஷி



''சே, வர, வர யாருக்கு, என்ன பட்டம் தர்றதுன்னு விவஸ்தையில்லாமப் போச்சு!''

''ஏன், என்னாச்சு?''

''பிக்பாக்கெட் பீதாம்பரம் தன்தொழிலை ஆரம்பிச்சு இன்னியோட இருபத்தியஞ்சு வருஷமாகுதாம்! அதுக்காக அவனுக்குப் 'பிக்பாக்கெட் திலகம்'னு நம்ம ஊர்ல போலீஸ் காரங்க பட்டம் தர்றாங்க.''

– டி.என். பாலகிருஷ்ணன்

யல் வெற்றிக்குக் காரணம் ரஹ்மான்தான். 'ரோஜா', 'பம்பாய்' படங்கள்ல அவர் எனக்குக் கொடுத்த டியூன்கள் என் திறமைகளை ஒரு ஷோகேஸ்ல வைச்ச மாதிரி எடுத்துக் காட்டியது...

**அனுராதா:** அடிப்படையில் கஜல் பாடகரா இருந்துட்டு சினிமாவுக்குப் பாடற அனுபவம் எப்படி இருக்கு...?

**ஹரிஹரன்:** சினிமாவிலே கூட நிறைய 'ghazalish' பாடல்கள்தான் நான் பாடியிருக்கேன். அடிப்படையில் சுவரசுத்தம், குரலைப் பயன்படுத்தற முறை... எந்த சங்கீதத்துக்கும் ஒரே மாதிரிதான். ஆனால் ஒரு முக்கியமான வித்தியாசம்– கஜல் பாடும்போது– இசையையும் கவிதையையும் குழைச்சு நம்ம மனோ தர்மப்படி வெளிப்படுத்தறோம். (பாடிக் காண்பிக்கிறார்...) சினிமாவிலே வேற ஒரு பாத்திரத்தினுடைய சார்பிலே பாடறோம் என்கிறதை மறக்காம, அந்த கதாபாத்திரத்தோட மன நிலையிலயிருந்து பாட வேண்டியிருக்கு... வார்த்தைகளை வெளிப்படுத்தும்போது– குறிப்பா இதை முக்கியமா நினைவு வைச்சுக்க வேண்டியிருக்கு– இப்படி: 'குச்சி குச்சி ராக்கம்மா பொண்ணு வேணும்...' (மீண்டும் பாடிக் காண்பிக்கிறார்...)

**அனுராதா:** உங்க குரலை எப்படி இவ்வளவு வசப்படுத்தி வைச்சிருக்கீங்க...? என்ன சிறப்புப் பயிற்சி எடுத்துக்கிட்டீங்க? உணவுப் பழக்கங்கள்ல ரொம்பக் கட்டுப்பாடா இருக்கணுமா...? காரம் சாப்பிடாம...?

**ஹரிஹரன்:** எந்த உணவுமே மிதமா சாப்பிடணும். மற்றபடி கட்டுப்பாடு எதுவும் பெரிசா வைச்சுக்கறதில்லை. ஆனா குரலை வசப்படுத்தறதுங்கறது என்ன...? கீழ் 'ப'விலேருந்து மேல் 'ப' வரைக்கும் பாடற ஆற்றலை பயிற்சி மூலமா கொண்டு வந்துடலாம்...

**அனுராதா:** இயற்கையிலேயே அந்த ஆற்றல் இருக்கணுமா? இல்லை சாதனை மூலமா அடையலாமா? சொன்னால், எங்களை மாதிரி இளம் பாடகர்களுக்கு உதவியா இருக்கும்.

**ஹரிஹரன்:** பெரும்பாலும், சாதனையலதான் அடைய முடியும். நுரையீரல் சக்தியைத் திரட்டி, அதைக் கட்டுப்பாட்டோட பயன்படுத்தி, குரலை வெளிப்படுத்தறது தான் அந்த சாதனை. பிராணாயாமம் மாதிரி.... நாபியைப் பயன்படுத்திப் பாடணும்... கர்நாடக சங்கீதத்துலே ஏராளமா சவுக்க கால கீர்த்தனைகள் இருக்கே... அதையெல்லாம் முறையா கற்றுக் கொண்டு பாடினாலே குரல் வசப்பட்டுப் போகும். அதைவிட என்ன voice training வேணும்...!

**அனுராதா:** ஆமாம். அந்த மாதிரி கீர்த்தனைகளை என் அப்பா பாடக் கேட்கும் போது அவருக்கு முதுகுப் பக்கத்திலே ஸ்பெஷலா இன்னும் இரண்டு நுரையீரல் இருக்கோன்னு ஆச்சரியம் வரும்!

**ஹரிஹரன்:** நீங்க இப்போ தனியா கச்சேரிகள் பண்ண ஆரம்பிச்சிருக்கீங்க... உங்க கணவருக்கு இசையில ஆர்வம் இருக்கா...?

**அனுராதா:** என் இசைக்கு ரொம்ப ஆதரவு கொடுப்பார். ஆனா 'ஸ'வுக்கு அர்த்தத்தை டிக்ஷனரியிலே தேடக் கூடியவர்! – சுத்தமா சங்கீத ஈடுபாடு கிடையாது. இப்ப கொஞ்சம் விஷயம் தெரிஞ்சு 'அனு... இதை நீ எப்பவும் போலப் பாடலேயே...'ன்னு விமர்சிக்க ஆரம்பிச்சிருக்கார்...

**ஹரிஹரன்:** உங்க அப்பாவிடமிருந்து ஒரு பெரிய பாரம்பரியத்தை நீங்க இயல்பா அடைஞ்சிருக்கீங்க. அது உங்களுக்குக் கிடைச்சிருக்கிற மிகப் பெரிய வாய்ப்பு... கர்நாடக சங்கீதம் ஒரு மகத்தான கலை. அதைப் பாதுகாத்து அடுத்தடுத்த தலைமுறைகளுக்குத் தரவேண்டிய கடமை பாடறவங்களுக்கு மட்டுமில்லே; ரசிகர்களுக்கும் சபாக்களுக்கும் அமைப்புகளுக்கும் இருக்கு... இங்கே தெற்கிலே வித்வான்களுக்கு இன்னும் நிறைய சன்மானம் கொடுக்கணும். கலை தழைக்கணும்னா கலைஞன் கவலையில்லாம இருக்கணும். அடுத்த வார செலவைப் பத்தி கவலைப் பட்டுண்டு கல்யாணி பாட முடியாது...

ஹரிஹரனின் அடுத்த அப்பாயிண்ட்மெண்ட் இசையமைப்பாளர் வித்யாசாகருடன். அவர் புறப்படத் தயாராக...

**அனுராதா:** நன்றி. உங்களைச் சந்திச்சதுல எனக்கு ரொம்பப் பெருமை, மகிழ்ச்சி. மிஸ்டர் வித்யாசாகரைப் பார்த்தால் கட்டாயம் சொல்லுங்க– 'தர்பாரி கானடா' ராகத்திலே அவர் இசையமைச்சிருக்கிற 'மலரே மௌனமா' பாட்டு ரொம்ப அற்புதமா வந்திருக்கு...

**ஹரிஹரன்:** கட்டாயம் சொல்றேன்.

படங்கள். **யோகா.**

# காவிரிக் கரையில் கால் ஏக்கர் நிலம், முதலீட்டாளர்களுக்கு காய்கறி இலவசம்



தொடர்ந்து 7 ஆண்டுகளுக்கு
ஒவ்வொரு 7 நாட்களுக்கு ஒருமுறை
உங்களுக்கு 7 கிலோ காய்கறி தர

## வருகிறான்

## காய்கறிகாரன்

- விலைவாசி ஏற்றத்தின் பாதிப்பின்றி நீங்கள் விரும்பும் 7கிலோ காய்கறிகள் உங்கள் இல்லம் தேடி இலவசமாக வருகிறது. அல்லது விவசாய வருமானமாக ஆண்டுக்கு ரூ. 3000/- முன் தேதியிட்ட காசோலையாக வழங்கப்படும்.
- கால் ஏக்கர் நிலத்தை 7 வருடங்களுக்குப்பிறகு வீட்டுமனைகளாக நல்ல விலைக்கு விற்கலாம்.
- முதலீட்டிற்கு சிறந்த வருமானம் - வருமான வரி விலக்கு உண்டு.

### முதலீட்டுத் திட்ட விவரம்

| திட்டம் 'A' சுலப தவணைத்திட்டம் | | திட்டம் 'B' * குறுகிய தவணைத்திட்டம் | | திட்டம் 'C' * ஒரே தவணைத்திட்டம் |
|---|---|---|---|---|
| முன்பணம் | ரூ. 3,200/- | முன்பணம் | ரூ. 11,000 | ஒரே தவணை |
| மாதத் தவணை | ரூ. 2,400/- | மாதத்தவணை | ரூ. 10,000 | ரூ. 30,200/- |
| மாதங்கள் | 12 | மாதங்கள் | 2 | |

* B மற்றும் C திட்டத்தில் சேருபவர்களுக்கு உடனடியாக காய்கறி வழங்கப்படும். பதிவுக் கட்டணமாக ரூ. 2,500/- கூடுதலாக செலுத்த வேண்டும்.

BK ESTATES

**B K எஸ்டேட்ஸ்**
109, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை 600 034
தொ.பேசி 8266978, 8277234
பேக்ஸ் : 91-044-8282792

கிளை : A-3, S V V காம்ப்ளக்ஸ், 9,சாஸ்திரி சாலை,
தில்லை நகர், திருச்சி - 620 017. போன் : 33076.

**சிறப்பு பரிசு!**

ஆகஸ்ட் 1 முதல் 31 தேதிக்குள் எங்கள் B&C திட்டங்களில் சேரும் முதல் 100 நபர்களுக்கு ரூ.1,400/- மதிப்புள்ள காபி மேக்கர் அன்பளிப்பாக தரப்படும்.

JEGI/BKE/3296

**ரூ. 20 பரிசுக் கடிதம்**

♦ பெருகி வரும் மக்களின் வெள்ளத்தையும், வாகனங்களின் ஓட்டத்தையும் கட்டுப்படுத்த போக்குவரத்துப் போலீஸார் எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பதை "கமிஷனரோடு ஒரு நேரடி விசிட்" தெளிவாக விளக்கி விட்டது. அண்மையில் ஹாலந்து, ஸ்விட்சர்லாந்தில் சுமார் 4 மாதங்கள் இருந்தபோது போக்குவரத்து விதிகளை அவர்கள் மதிக்கும்விதம் என்னை வியப்படையச் செய்தது. பாதசாரிகள் பச்சை விளக்கைப் பார்த்துத்தான் சாலையைக் கடக்கிறார்கள் என்றாலும், காரில் பறப்பவர்கள் சமயங்களில் பாதசாரிகளுக்குப் பணிவாக வழிவிட்டு அவர்களது 'நன்றி'யைப் பெற்றுக் கொள்ளும் அழகே அழகு! ஹார்ன் சப்தமே இடையாது! மறைவில் உள்ள காமிரா - போக்குவரத்தைக் கண்காணிக்கிறது. போக்குவரத்துப் போலீஸாரை வெகு அபூர்வமாகப் பார்க்கலாம்! பஸ், டிராம், ரயிலில் அடித்துப் பிடித்து இடித்து ஏறாமல், இறங்க வழிவிட்டு அமைதியாக ஏறும்போது, எனக்கு தமிழ்நாட்டின் பல்லவன் பஸ் பயணம் நினைவுக்கு வந்து பயமுறுத்தியது! நம் நாட்டுக்கு இந்த ஒழுங்கும் கட்டுப்பாடும் எப்போது வரும்?

மேற்கு மாம்பலம்,
ராஜலக்ஷ்மி ரங்கநாதன்.

♦ முதல்வருடைய காரே சிக்னல்களை அனுசரித்துப் போகிற நிலையில், அமைச்சர் ஜெனிஃபர் சந்திரனின் கார் மஞ்சள் கோட்டைத் தாண்டியபடி செல்கிறதா! படிக்கும்போதே இதயத்தில் ஒரு சின்ன அரிப்பு.

திருநெல்வேலி, ஏ. பாலமுருகன்.

♦ தேவேகௌடாவுக்கெதிராக மேனகா காந்தி பல கடுமையான புகார்களைச் சொல்லி விளாசியிருந்தது படிப்பதற்குப் படு சுவாரஸ்யமாக இருந்தது. சுற்றுச் சூழல் பாதுகாப்பில் இந்தியாவிலேயே அவர் ஒருவருக்குத்தான் அக்கறை இருப்பதைப் போலப் பேசியிருக்கிறார். ஜனதா தளக் கட்சியின் சார்பாகத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர், அந்தக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருக்கும்போது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து விட வேண்டியதுதானே? அவரது பேட்டி விரக்தியும், கோபமும் கொண்ட பெண்மணியின் புலம்பலாகத் தானிருக்கிறது. மத்திய அமைச்சரவையில் அவரும் இடம் பெற்றிருந்தால் வாயை மூடிக் கொண்டு பேசாமலிருந்திருப்பார்!

சிறுமுகை,
ஜி. கதிரேசன்.

♦ ஒவ்வொரு மந்திரியாய் உள்ளே போய்க் கொண்டிருக்கும் நிலையில் 'இப்ப வருமோ! (அரெஸ்ட் வாரண்ட்) எப்ப வருமோ' என்று நடுங்கிக் கொண்டிருக்கும் நிலையில்... கட்சி 'கை'நழுவிப் போனாலென்ன! 'கால்' நழுவிப் போனாலென்ன!

சுப்பராயர்புரம்,
பெற்றோர் நேசன்.

♦ "கருணாநிதிக்கு இரட்டைத் தலைவலி" தலையங்கம், கல்கி, தமிழக முதல்வருக்குத் தக்க நேரத்தில் வழங்கியுள்ள ஆக்கபூர்வமான ஆலோசனை.

ராமநாதபுரம், பி. சீனிவாசன்.

♦ மாமியார் உடைத்தால் மண்குடம் பழமொழியையும், ஊருக்குத்தான் உபதேசம் என்ற பழமொழியையும் தெற்கே 'ஜெ'யும் வடக்கே ராவும் கச்சிதமாக நிரூபித்து வருகின்றனர் என்பதை தலையங்கம் தெளிவாகப் புரிய வைத்து விட்டது!

அரவக்குறிச்சிப்பட்டி,
எம். அசோக்ராஜா.

♦ "புலால் இன்னொரு உயிரோட புண்...!" - சாட்டையாய் ராமலிங்கத்தின் வார்த்தைகள். மாமிச உணவை மறக்கச் செய்யும், மனதை உலுக்கிய வரி...! நந்தனின் - "நான் மிருகமல்ல" சிறுகதைகளின் மகுடம்!

திருவிடைமருதூர்,
எம்.ஆர். சிவா.

# தங்கப்பேனா தரலாம்!

♦ 'முதியோர் இல்லங்கள்; சூப்பர் பிஸினஸ்' என்ற தலைப்பில் 30-6-96 கல்கி இதழில் பிரசுரமான கட்டுரை படித்தேன். வசதியுள்ள ஆனால் கவனிப்பா ரற்ற முதியோர்களைக் கொண்ட இல்லங்களை மனதிற்கொண்டு எழுதப்பட்டிருக்கிறது. இந்த இல்லங்களை 'சூப்பர் பிஸினஸ்' என்று குறையாக விமர்சித்தது சரியாகத் தோன்றவில்லை. வசதியுள்ளவர்கள், தாங்கள் நிர்ப்பந்தமில்லாமல், தன்னிச்சையாக வாழ நினைப்பதில் ஒரு தவறுமில்லை. எல்லா முதியோர்களும் ஏழைகளல்ல. பண வசதிக்கு ஏற்ப வெவ்வேறு சௌகரியங்களுடைய முதியோர் இல்லங்களுக்குத் தேவை இருக்கிறது. சேவை மனப்பான்மை சமூகத்தில் பரவலாகவும், எல்லாவித வேலைகளிலும் இருந்தால்தான் முதியோர் இல்லங்களிலும் இருக்கும்.

சென்னை - 4, எஸ். சரஸ்வதி.

♦ சிறுகதைகள் மூன்றும் முத்துக்கள். குறிப்பாக 'எனக்கென்று என்ன தந்தாய் அம்மா' எழுதிய அனுராதா ரமணனுக்கு திரையுலகம் கலைஞருக்கு தந்தது போல் ஒரு தங்கப் பேனா தரலாம்!

செங்குன்றம், ரமேஷ்ராமன்.

# முத்துவேல் இண்டஸ்ட்ரீஸ்

(முத்துவேல் குரூப் நிறுவனங்கள்)

பொது மக்களின் வேண்டுகோளை ஏற்று பிக்சட் டெபாசிட் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படுகிறது.

## ஆண்டுக்கு

உங்கள் பிக்சட் டெபாசிட்டுக்கு கணக்கிடப்படும் வட்டி விகிதம்

**24%**

குறைந்தபட்ச முதலீட்டுத் தொகை ரூ. 10,000/-

உங்கள் குமுலேட்டிவ் டெபாசிட்டுகளுக்கு முதிர்வு தொகை அட்டவணைப்படி அளிக்கப்படும்

| மாதங்கள் | ரூ. 10,000-க்கு முதிர்வு தொகை |
|---|---|
| 12 | 12,600 |
| 24 | 15,876 |
| 36 | 20,004 |
| 48 | 25,205 |
| 60 | 31,756 |

குறைந்தபட்ச டெபாசிட் ரூ. 10,000/-

- முதல் டெபாசிட்டிற்குதான் குறைந்தபட்ச தொகை. அதே பெயரில் மீண்டும் டெபாசிட் செய்தால் ரூ. 1000/- அதற்கு மேலும் அனுப்பலாம்.
- மக்கள் சேவையில் 49 ஆண்டுகள்.
- 75% வரை கடன் பெறும் வசதி.
- முதிர்வு தேதிக்கு முன்பே முழுத்தொகை தேவையானாலும் பெற்றுக்கொள்ளலாம்.
- முதிர்வு தேதிக்கு 10 தினங்கள் முன்னதாக நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்படும்.
- நம்பிக்கையும் துரித சேவையும் எமது தாரக மந்திரங்கள்.

வியாபார வளர்ச்சிக்கு கைராசியான சேவல் மார்க் பைல்களையே எப்போதும் உபயோகியுங்கள்.
TAG FILE, CLIP FILE, LEVER FILE
COMPUTER FILE, FIBRE BOARD FILE, WRITING PAD.

COCK BRAND FILE
TRADE MARK
MUTHUVEL

## MUTHUVEL INDUSTRIES

Mfrs. of COCK BRAND OFFICE FILES
Angappa Chettiar Industrial Complex,
20-A, Round Road, Post Box No. 32,
DINDIGUL - 624 001. TAMILNADU.
Ph: Off: (0451) 26850 & 27637.
Res : 26858 & 27011 Grams: COCKFILE

## உங்கள் முன்னேற்றமே எங்கள் வளர்ச்சி

"ரிசர்வ் வங்கி சட்டம் அத்தியாயம் IIIC பிரிவு 45S-ன் கீழ் விதிக்கப்பட்டுள்ள வரம்புக்குட்பட்டு டெபாசிட்களைப் பெறுகிறோம்".

ADWAVE/MI/5247

# திருமுருகா ரியல் எஸ்டேட் - பைனான்ஸ் மற்றும் தொகுப்பு நிறுவனங்கள்

73, ரங்கநாதன் தெரு, வி.கே.கே. டிரேட் சென்டர், 2வது மாடி, தி. நகர், சென்னை-17. போன்: 4347833/6260079.

கிளை: H-58/59 South Extension Part I, P.S. House,
புது டெல்லி - 110 049. போன்: 4644179

ரூ.10,000/-
1 வருட டெபாசிட்
செய்பவர்களுக்கு சிறப்பு
ஊக்கத்தொகையாக (Incentive)
31.8.96 வரை
ஒரு கிராம் தங்க நாணயம்
(1gm Gold Coin)
வழங்கப்படும்.

ரூ.5000/-
ஒரு வருட
டெபாசிட்
செய்பவர்களுக்கு
ஒரு (Wall Clock)
சுவர் கடிகாரம்
வழங்கப்படும்.



| காலம் | குறைந்த பட்ச டெபாசிட் | வட்டி | ஊக்கத் தொகை |
|---|---|---|---|
| 3 மாதம் | ரூ. 5000 | 24% | 2% |
| 6 மாதம் | ரூ. 5000 | 26% | 3% |
| 9 மாதம் | ரூ. 5000 | 28% | 4% |
| ஒரு ஆண்டும் அதற்கு மேலும் | ரூ. 5000 | 30% | 6% |

**பொதுஜனம் :** என்னையா செய்தி தாளை பிரித்தால் ஒரே பைனான்ஸ் கம்பெனி அட்வர்டைஸ்மென்டாக இருக்கு. இதிலே எவன் ஏமாற்றுக் காரன் எவன் நல்லவன் என்றே தெரியவில்லை. ஒரே குழப்பமா இருக்கு.

**திருமுருகா :** குழம்பாதிர்கள் சார். திருமுருகா இருக்கு சார். நீங்கள் டெபாசிட் செய்வதற்கு, பாதுகாப்பான நிறுவனம்.

ஏன் திருமுருகாவில் டெபாசிட் செய்ய வேண்டும்.

(1) திருமுருகா நிறுவனத்திற்கு கோடிக்கணக்கான சொத்துக்கள் உள்ளது.

(2) டிபாசிட்தாரர் என்று வேண்டுமானாலும் டிபாசிட் தொகையில் 75% உடனடி கடனாக பெறலாம். தவிர்க்க முடியாத காரணம் இருப்பின் டிபாசிட் முதிர்ச்சி ஆவதற்கு முன்பே ஊக்கத் தொகையை பிடித்துக்கொண்டு பணத்தை திருப்பி கொடுக்கிறோம்.

(3) 29.09.96 குலுக்கலில் உங்களுக்காக 50 பரிசுகள் காத்திருக்கிறது.

(4) திருமுருகா Fibre-Glass Industry, Heat Treatment Industry, Netlon Agency, வீட்டுமனை விற்பனை, லாபகரமாக நடக்கிறது.

(5) விருப்ப ஓய்வு பெற்ற அரசு அதிகாரியால் நடத்தப்படுகிறது.

# சுஜாதா பக்கம்



அண்மையில் 83 வயதில் காலமான என் சிற்றப்பா திரு கே. சடகோபாச்சாரி, இன்கம் டாக்ஸ் அப்பெல்லேட் ட்ரைப்யுனலில் பிரசிடெண்டாக இருந்து ஓய்வு பெற்றவர். நான் பிறந்த போதிலிருந்து என்னை அறிந்தவர். "ஒல்லியாக போஷாக்கு குறைவாக இருந்த இந்தக் குழந்தை பிற்காலத்தில் இத்தனை பிரபலமடைவான் என்று எதிர்பார்க்கவில்லை" என்று அடிக்கடி பிறந்த தினக் கடிதங்களில் வியந்து கொள்வார். (நானும் எதிர்பார்க்கவில்லை) அவரிடமிருந்து என் சகோதரர்களுடன் நான் பெற்ற வாழ்க்கைப் பாடங்கள் பல. அவைகளில் முக்கியமானது அலுவலகப் பணியில் மிகுந்த நேர்மை. ஒரு மிகப் பெரிய மதத் தலைவரை தரிசிக்கச் சென்றபோது அந்த மகான் தன் பக்தர் ஒருவர் பெயரைக் குறிப்பிட்டு 'இவர் இன்கம்டாக்ஸ் கேஸ் உங்களிடம் அப்பீலுக்கு வந்திருக்கிறது, கவனித்துக் கொள்ள முடியுமா' என்று கேட்டதற்கு, மறுத்ததுமல்லாமல் அன்றிலிருந்து அவரை மகான் என்று கருதுவதை நிறுத்தி விட்டார்.

சந்திக்கும் போதெல்லாம் படித்த ஏதாவது புத்தகத்தை அல்லது கட்டுரையைக் குறிப்பிடுவார். தவறாமல் "இன்கம்டாக்ஸ் கட்டிரு. அப்ப தான் நிம்மதியா தூங்க முடியும்" என்று அறிவுரை தருவார்.

இப்பக்கத்தில் அவரைப் பற்றி எழுதுவதற்கு முக்கியமான காரணம் அவருடைய நிறைவேறாத ஆசை ஒன்று. என் சிற்றப்பா பிறந்த சில மாதங்களுக்குள் தன் தந்தையை இழந்து விட்டார். அவர் பெயர் பி. கிருஷ்ணமாச்சாரி. பச்சையப்பன் கல்லூரியில் மிக இள வயதில் கணித ஆசிரியராக இருந்தவர், எனக்கு தந்தை வழிப் பாட்டனார். அவர் ஒரு கணிதப் புத்தகம் எழுதிப் பதிப்பித்திருக்கிறார். நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட அப்புத்தகத்தின் ஒரு பிரதி எங்கள் குடும்பத்தில் இருந்தது. பார்த்திருக்கிறேன். அதைப் பல்வேறு இடப் பெயர்ச்சிகளினால் இழந்து விட்டோம். தேடும் முயற்சியை என் சிற்றப்பா இறுதிவரை செய்து வந்தார்; கிடைக்கவில்லை. 'உனக்குத்தான் நிறைய வாசகர்கள் இருக்கிறார்களே, அவர்கள் யார் வீட்டிலாவது அந்தப் புத்தகம் இருக்குமா கேட்டுப் பாரேன்' என்றார். புத்தகத்தின் பெயர் "காலேஜ் அல்ஜிப்ரா". பி. கிருஷ்ணமாச்சாரி, பி. பார்த்தசாரதி இரு சகோதரர்கள் எழுதியது. முதல் அத்தியாயம் SURDS என்று லேசாக ஞாபகம் இருக்கிறது.

வாசகர்கள் தத்தம் தாத்தாக்களைக் கேட்டு அவர்கள் வீட்டுப் பரணில் அல்லது பழைய கள்ளிப் பெட்டிகளில் இந்தப் புத்தகம் இருந்து தூசுதட்டி அனுப்பினால் அவர்களுக்கு சகல சௌபாக்கியங்களும் ஏற்பட சீரங்கநாதனிடம் சிபாரிசு செய்வதுடன் அன்பளிப்பாக ஆயிரம் ரூபாய் அனுப்பவும் சித்தமாயிருக்கிறேன்.

'பிஸினஸ் லைன்' பத்திரிகையின் சனிக்கிழமை கூட்டத்தில் அதன் இளம் பத்திரிகையாளர்களுடன் கலந்துரையாட சந்தர்ப்பம் கிடைத்தது. டெக்னாலஜியின் அபார முன்னேற்றம், குறிப்பாக இண்டர்நெட் எவ்விதத்தில் பத்திரிகைத் துறையை பாதிக்கும் என்பது பற்றி கொஞ்ச நேரம் பேசியபின் கேள்வி நேர விவாதம் டெக்னாலஜியைக் கடந்து, இந்திய ஜனநாயகத்துக்கு நழுவியது. நான் என் செல்லக் கருத்தான ஜனநாயகம்தான் இந்தியாவின் மிகப் பெரிய வீண் செலவு என்பதை வெளியிட்டு, சாட்சியாக இத்தனை வருஷம் ஜனநாயகம் செயல்பட்டும் இன்னும் ஏன் நம் குழந்தைகள் தெருவில் பிச்சையெடுக்கிறார்கள், ஏழ்மைக் கோட்டின் அடியில் அனேகம்பேர் இருக்கிறார்களே ஏன், என்று கேட்டபோது ஒரு பெண்மணி ஜனநாயகம் இல்லாவிடில் நாம் இம்மாதிரி சுதந்தரமாக கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள முடியுமா, என்ன பேசுகிறீர்கள் என்று ஆச்சரியப்பட்டார். இதற்கு உடனே என்னால் பதில் சொல்ல முடியவில்லையெனிலும் திரும்ப வீட்டுக்கு செல்லும் போது பதில் தோன்றியது. 'நாம்' என்று குறிப்பிட்டது மக்கள் தொகையில் ஒரு விழுக்காட்டிற்கும் குறைவான, படித்த அறிவு ஜீவிகளை. அவர்களுக்கு பேச்சு சுதந்திரம் முக்கியமா, அந்த சுதந்திரத்தைப் பயன்படுத்த நேரமில்லாத பெரும்பான்மையினரை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டு வருவது முக்கியமா என்பதுதான் என் அடிப்படை சந்தேகம். அடிக்கடி இந்தியாவில் நினைவு கொள்ள வேண்டியது, நாமெல்லாம் பாக்கியசாலிகள்; நம்மால் பேசி நடிக்க முடிகிறது. ஏஸி அறைகளில் கணிப்பொறிகளின் முன் தேசத்தின் ஏழ்மையை அலச முடிகிறது. ஆனால் ஒரு மௌனப் பெரும்பான்மை வெளியே தெருக்களிலும் குடிசைகளிலும் தம் உரிமை என்ன என்பதையே அறியாமல் தின வாழ்வின் போராட்டத்தில் உழல்கிறது என்பதை மறக்கவே கூடாது.

(மீண்டும் அடுத்த வாரம்)



## 31. பிரமித்தாள் ருத்ராம்பாள்!

பொத்தப்பியின் கோட்டை அமளி துமளிப்பட்டுக்கொண்டிருந்தது. புரவிகளின் கனைப்பொலிகளும் உபதலைவர்களின் கூச்சல்களும் வீரர்கள் அளித்த பதில்களும் ஒரு புறம் ஒலித்தன. விற்களும் வாட்களும் ஈட்டிகளும் பெரும் பாரிவண்டிகளில் ஏற்றப்பட்ட ஓசை, கடகடவென்று உருண்டு வாயிலை நோக்கி விரைந்த ரதங்களின் சப்தம் என்று எல்லாம் சேர்ந்து கோட்டையை நிரப்பிக் கொண்டிருந்தன.

வெளியே சென்று பார்க்க முயன்ற விஜயனை வாயிலில் நின்ற வீரர்கள் தடுத்தனர். எங்கும் வெளியே செல்ல அனுமதியில்லையென்பதை அறிவித்தனர். தாங்கள் காவலில் இருப்பதை உறுதி செய்து கொண்ட விஜயன், அதைக் குறித்து லவலேசமும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. காவலரிடம் உணவுக்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொண்டு ஆதித்யனிடமும் வந்து அறிவித்தான். வெளியில் படைகளின் ஆரவாரம் அதிகரித்துக் கொண்டேயிருக்க, காவலில் இருந்தவர்களுக்கு உணவு, முதல் ஜாமத்தில் வந்தது. அந்த சோழ நாட்டு உணவைப் பெரிதும் ரசித்து அருந்திய விஜயன், இரண்டொரு முறை பரிமாறியவர்களை அழைத்துப் பாராட்டவும் செய்தான். உணவருந்திய பின்னர் அறையின் ஒரு மூலைக்குச் சென்று கால்களை நீட்டிப் படுத்து உறங்கவும் முற்பட்டான்.

# இந்திர தனுசு

விஷ்வக்சேனன்

பஞ்சணையில் படுத்த ஆதித்யனுக்கு உறக்கம் எளிதில் வர மறுத்தது. நல்ல உணவும் மலைக்காற்றும் சுகமான மஞ்சமும் இதமளித்தாலும் உறக்கம் என்பதை மனநிலையைப் பொறுத்ததாக வைத்துவிட்ட இயற்கை, அவன் சித்தத்தில் எழுப்பிவிட்ட எண்ண அலைகள் மீண்டும் மீண்டும் எழுந்து தாக்கியதால் விழிகளை அரைவாசியே மூடிக்கிடந்த ஆதித்யன், பாதி விழிப்பிலும் பாதி உறக்கத்திலுமாகக் கிடந்தான். ஏதோ தெளிவற்ற கனவுகளில் மூழ்கிக் கிடந்த ஆதித்யனின் கால்களைப் பலமாக அசைத்து எழுப்பிக் கொண்டிருந்தான் விஜயன். திடுக்கிட்டு எழுந்த ஆதித்யன், அறை இருளடித்துக் கிடப்பதையும், சாளரங்களும் கதவுகளும் விரியத் திறந்து கிடப்பதையும், வாயிலிலிருந்த காவலர்கள் தரையில் உருண்டு கிடப்பதையும் கண்டான். விஜயனை அடுத்து நிழலுருவங்களாக ஐந்தாறு மனிதர்கள் நிற்பதும் புலப்பட்டது. "இளவரசே வாருங்கள், சீக்கிரம்!" விஜயனின் குரல் அடங்கி ஒலித்தது.

**மா**ளிகையின் பின்புறத்து வாயிலின் வழியே ஆதித்யனை அழைத்துச் சென்றவர்கள், மலைச் சரிவையொட்டியிருந்த கட்டடங்களின் பின்பகுதியினூடே நுழைந்து, ஒதுங்கி, சந்தேகம் எழாதவாறு நடந்து அந்த வரிசையின் இறுதியில் புகையும் கரியும் மண்டிக் கிடந்த பெரும் மடைப்பள்ளியாகத் தெரிந்த கட்டடத்தினுள் நுழைந்தனர். உள்ளே நுழைந்த ஆதித்யன், தனக்காகக் காத்துக் கிடந்தவர்களைக் கண்டதும் பிரமித்தான். ஐம்பதுக்கும் குறையாத சோழநாட்டுப் பரிசாரகர்கள் கரியும் புகையும் அழுக்கும் படிந்த உடைகளுடன் நின்று ஆதித்யனைக் கண்டதும் வணங்கினர். அந்தக் கூட்டத்தில் பெண்களும் குழந்தைகளும் கூட இருந்தனர். விறகும் பாத்திரங்களும் உணவுக்குத் தேவையான இதர பொருட்களும் நிரம்பிக்கிடந்தன அந்த இடத்தில். சோழநாட்டின் சுவைமிக்க உணவைப் படைக்கும் அந்தக் கலைஞர்கள், போசளரின் அதிகார உருட்டல்களுக்கு அஞ்சி பொத்தப்பி நாட்டில் வந்து நடத்திக் கொண்டிருந்த அவல வாழ்வைக் கண்ட ஆதித்யனின் உள்ளம் உருகியது. அவர்களின் தலைவராகத் தோன்றிய முதியவர், முன்னே வந்து விஜயனை அணுகினார்.

"விஜயா, மடப்பள்ளியின் பின்புறம் மலையைச் சுற்றிச் செல்லும் பாதையிருக்கிறது. பாதையின் இறுதியில் சித்திராவதி நதி மலையை அணைத்துப் பிரியுமிடத்தில் படகு ஒன்றும் தயாராக இருக்கிறது. நதி பெண்ணையாற்றில் கலக்குமிடத்தை விடிவதற்குள் அடைந்து விட்டால் பிறகு அபாயமேதுமில்லை. பெண்ணாற்றின் ஓட்டத்திலேயே சென்றால் நெல்லூர்புரத்தை அடைந்து விடலாம்" என்றார் அந்த முதியவர்.

விஜயன் தன் கச்சையிலிருந்து சிறுமுடிப் பொன்றை எடுத்து அவர் கரங்களில் திணித்தான். "பெரியவரே. இதை மறுக்காதீர்கள். சோழ நாடு போசளரிடமிருந்து விடுபட்டு விட்டது. நீங்கள் நாடு திரும்ப வழிச் செலவிற்கு இது உதவும்" என்றான் விஜயன்.

புரிந்து கொண்ட ஆதித்யனும் தன் கழுத்திலிருந்து வீரச் சங்கிலியொன்றைக் கழற்ற முற்பட்டான். கரி படிந்து அழுக்கேறிய இரு முதிய கரங்கள் அவனைத் தடுத்தன.

"இளவரசே, எங்கள் சோழ நாட்டை போசளரிடமிருந்து மீட்டது ஒன்றே போதும். உங்களுக்கு உதவ சந்தர்ப்பம் கிடைத்ததே எங்களுக்குப் பெரும் பரிசு. இனி நாங்களும் விரைவில் நாடு திரும்பி விடுவோம்" என்றவர், ஆதித்யன் கரங்களைக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்ட ஆதித்யனும் விஜயனும் பின்புறத்து வழியினூடே மலைச்சரிவில் நடக்க ஆரம்பித்தனர். மலைக் காற்று அந்த இரவில் குளிரை அள்ளி வீசிக் கொண்டிருந்தது. நரிகளும் சர்ப்பங்களும் குறுக்கில் ஓடி மறைந்தன. மலையை அப்பிரதட்சணமாகச் சுற்றிச் சென்ற பாதையின் இறுதியில் நதி சலசலத்து ஓடும் ஒலி கேட்டது. அலைக் கரங்களில் ஆடியபடி

# மங்கையர் மலர்

ஆகஸ்ட் '96

- **தேவை மீண்டும் ஒரு சுதந்தரப் போராட்டம்!**
- **வரம் தரும் வக்கிரகாளி.**
- **எப்போது இந்தப் பெண்கள் மாறுவார்கள்?**

  – ஒரு பெண்ணின் முறையீடு
- **குழந்தை சிறக்க சில டிப்ஸ்!**
- **யாருக்கு எந்த நகை பொருந்தும்?**



*மற்றும்*

**வழிகாட்டிகள்**

**இளம் மாணவியருக்கு ஒரு போட்டி!**


படகு ஒன்றும் அங்கு தயாராக நின்றிருப்பதைக் கண்ட விஜயனின் முகம் மலர்ந்தது. ''இளவரசே, இனி அபாயமேதுமில்லை. நாளை உச்சிப் பொழுதிற்குள் நாம் நெல்லூர்புரத்தை அடைந்து விடலாம்'' என்றான் அவன்.

நூறு காதங்களுக்குமேல் ஓடிவந்த களைப்பு கடலரசனை நெருங்கிவிட்டதால் நீங்கிவிடவே, பெண்ணாற்றின் பிரவாகம் துள்ளிக் குதித்து கிழக்கு நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தது. இல்லம் நெருங்கியதும் பெரியவர்களைப் பிரிந்து முன்னால் ஓடும் சிறுவர்களைப் போல் நதியிலிருந்து பிரிந்த சிற்றாறுகள் கடலை நோக்கி ஓடின. காலைக் கதிர்கள் பட்டுப் பளபளத்த நீர் மட்டத்திலும், கரைகளைத் தாக்கிச் சிரித்த அலைகளிலும் நதியின் மகிழ்ச்சி பிரதிபலித்தது. காலை வேளையில் நதியில் நீராடி வேதமோதியபடி திரும்பிக் கொண்டிருந்த அந்தணர்களின் மந்திர ஸ்ருதியும், குடங்களில் நீரை ஏந்தி வந்து கொண்டிருந்த மங்கையரின் வளையல்களும் தண்டைகளும் எழுப்பிய இன்னிசையும், அவ்வப்பொழுது அவர்கள் நகைத்த இன்ப ஒலிகளும், கூப்பிடு தூரத்தில் துறை முகத்தை நோக்கிச் சென்ற பாதையில் பொதிகளை இழுத்துச் சென்ற காளைகளின் கழுத்து மணி ஒலிகளும், சக்கரங்கள் மண்ணில் பதிந்து எழுந்த கரகரத்த ஒலிகளும் காற்றில் நிரம்பி கரைநெடுக ஒலித்து, கரையை ஒட்டியிருந்த அந்த மாளிகை வரையிலும் கூட எட்டிக் கொண்டிருந்தன.

சாளரத்தினருகே நின்று நதியை வெறித்து நோக்கிக் கொண்டிருந்த காகதீய இளவரசி ருத்ராம்பாளின் சித்தம் நதியின் பிரவாகத்தை விட வேகமாக ஓடிக் கொண்டிருந்ததால், எதிரே விரிந்த இன்பக் காட்சிகளையோ, செவிகளில் விழுந்த ஒலிகளையோ அவள் கவனித்ததாகத் தெரியவில்லை. வீரர்களுக்குரிய உடையுடனும் வாளுடனும் சதா வளைய வரும் அவள் தோற்றமும் சற்று மாறியிருந்தது. அவள் உடலைச் சுற்றி வளைந்த சிளத்து நீலப்பட்டு, வீரர் உடைக்கு எந்தவகையிலும் குறையாத ஒரு கம்பீரத்தை அளித்துக் கொண்டிருந்தது. நகைகளிலோ, அரச மகளிர் அணியும் ஆபரணங்களிலோ அதிகம் விருப்பமில்லாத இளவரசியின் கழுத்தில் பெரும் முத்துச் சரம் ஒன்று மட்டும் புரண்டு கொண்டிருந்தது. அதிக நீளமில்லாமல் அடர்ந்து சுருண்டு கிடந்த குழல்களைக் கட்டியிருந்த பட்டுக் கயிறு, தன் பணியைச் சரிவர செய்ய இயலாததால் இரண்டொரு குழல்கள் முன்னால் வந்து அலைபாய்ந்து

# " ருமடாய்டு ஆர்த்ரைட்டிஸ் வலியின்றி ஒரு வருடம். . . "



திரு. S.K. ஹாண்டா

"8 வருடங்களாக ருமடாய்டு ஆர்த்ரைட்டிஸ் காரணமாக எல்லா மூட்டுகளிலும் வீக்கம் மற்றும் வலியினால் அவதிப்பட்டேன். உட்கார்ந்தாலும், வேலை செய்தாலும் தூங்கினாலும் வலி எப்போதுமே இருந்தது. எந்த சிகிச்சையும் பலனளிக்கவில்லை.

1994-ம் வருடம் ஜுலை மாதம் என் மகள் மூலம் TABE-விளம்பரங்களை செய்தித்தாள்களில் கண்டு அங்கு சிகிச்சையை ஆரம்பித்தேன். ஒரு வாரத்திலேயே சிகிச்சையின் பலனை உணர ஆரம்பித்தேன். சிகிச்சை 60 நாட்கள் என்றாலும் 30 நாட்களிலேயே எனக்கு வலி வீக்கத்திலிருந்து முழு நிவாரணம் கிடைத்துவிட்டது. "இன்று சிகிச்சை முடிந்து 1வருடத்திற்கு மேலாகியும் கூட வலி வீக்கம் ஏதுமின்றி இருக்கிறேன்". ஆர்த்ரைட்டிஸினால் அவதிப்படும் அனைவருக்கும் TABE இத்தகைய நிவாரணம் கிடைக்கச் செய்யும் என்று நம்புகிறேன்."

S.K. Handa

பிளாட் எண் 15, 5வது குறுக்கு தெரு, ஆபீசர்ஸ் காலனி, ஆதம்பாக்கம், சென்னை - 88.

★ காலத்தால் சோதிக்கப்பட்ட ஆயுர்வேத **மூலிகை பவுல்டீஸ்** (poultice) மூலம் நாங்கள் விரிவானதொரு வெளிப் பிரயோக சிகிச்சை திட்டத்தை **ஆர்த்ரிட்டிஸ், ஸ்பாண்டிலிட்டிஸ், தோள்பட்டை வலி, இடுப்பு வலி, குதிகால் வலி** போன்றவைகளுக்கு தகுதி வாய்ந்த ஆயுர்வேத மற்றும் அலோபதி டாக்டர்களின் மேற்பார்வையின் கீழ் வழங்குகிறோம்.

★ "இரு வேறு நபர்கள் ஒன்றுபோல் இருப்பதில்லை" என்பதை **TABE கேர் கிளினிக்ஸ் (பி) லிமிடெட்** நன்கு உணர்ந்துள்ளது. எனவே, காலம் மற்றும் விளைவுகளைப் பொறுத்தவரை சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம்.

TABE/336

**கலந்து ஆலோசிக்க, இப்போதே தொடர்பு கொள்க: தொலைபேசி: 8553772**

1, ஸ்ரீரங்கம் அவின்யூ, 53, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 8

காலை 9.00 மணி முதல்; இரவு 7.00 மணி வரை. வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.
அனைத்து முக்கிய கிரெடிட் கார்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

TABE CARE CLINICS (P) LIMITED

**TABE சிகிச்சை நிலையங்கள் இப்பொழுது TABE கேர் கிளினிக்ஸ் (பி) லிமிடெட்**

---

NATIONAL COUNCIL FOR LABOUR MANAGEMENT · MADRAS

# NATIONAL COUNCIL FOR LABOUR MANAGEMENT

**NOTIFICATION No. 13/96**

**Offers the following Diploma Courses by Correspondence.**

| | |
|---|---|
| BUSINESS MANAGEMENT | (1 Year) |
| FINANCIAL MANAGEMENT | (1 Year) |
| MARKETING MANAGEMENT | (1 Year) |
| HUMAN RESOURCES DEVELOPMENT | (1 Year) |
| ADVERTISING & PUBLIC RELATIONS | (1 Year) |
| TOTAL QUALITY MANAGEMENT & ISO 9000 | (1 Year) |
| PORTFOLIO ANALYSIS & INVESTMENT MANAGEMENT | (1 Year) |
| BUSINESS ADMINISTRATION | (6 Months) |
| OFFICE ADMINISTRATION | (6 Months) |
| SALES & MARKETING | (6 Months) |
| INDUSTRIAL RELATIONS & PERSONNEL MGMT. | (6 Months) |
| LABOUR LAWS | (6 Months) |
| QUALITY ASSURANCE & ISO 9000 | (6 Months) |
| PRODUCTION MANAGEMENT | (6 Months) |
| INDUSTRIAL SAFETY | (6 Months) |
| ENVIRONMENTAL MANAGEMENT | (6 Months) |
| QUALITY CONTROL & ISO 9000 | (6 Months) |

No formal qualifications is required. Course Fee Rs. 1200/- (1 Year) & Rs. 600/- (6 Months). Examination centre at all major cities. For registration form and prospectus, kindly send Rs. 3/- postal stamp to **NATIONAL COUNCIL FOR LABOUR MANAGEMENT** 23/13, Rameswaram Road, Narayana Apartments, Second Floor, T. Nagar, Madras - 600 017. Phone : 044-4851854 Fax : 044-4933259.



Dr.C.K.M.சபாபதி

# சிறுநீரகக் கோளாறா! புற்றுநோயா!
# சர்க்கரை வியாதியா! ஆஸ்த்மாவா!
# அல்சரா! மூட்டுவலியா!
## இனி கவலையே வேண்டாம்!



Dr. C.K.M. குருபரன்

நமது உணவு பொருட்களில் நாள்தோறும் சேர்க்கும் ரசாயனப் பொருட்களாலும், T.B., B.P., Sugar, Asthma போன்றவைகளுக்காக உபயோகிக்கும் இரசாயன மாத்திரைகளை அதிகம் உபயோகிப்பதாலும் நமது உடலில் உள்ள சிறுநீரகங்களில் தற்காலிக அடைப்பு ஏற்பட்டு விடுகிறது. இவ்வாறு தற்காலிக அடைப்பு ஏற்பட்டு செயல்படாமல் இருப்பதை நிரந்தரமாக சுருங்கி பழுதடைந்து (Kidney Failure) விட்டதாக முடிவு செய்து டயாலிசிஸ் செய்து கொண்டிருப்பவர்களும், உடனடியாக டயாலிசிஸ் செய்ய வேண்டும் என்ற நிலைமையில் உள்ளவர்களும், மாற்று சிறுநீரகங்களை தேடி அலைந்து கொண்டிருப்பவர்களும் உடனே கவலையை விட்டு விடுங்கள்.

சிவனுக்குரிய வில்வ இலை, சக்திக்குரிய வேப்பிலை, பிரம்மாவுக்குரிய அத்திஇலை, விநாயகருக்குரிய அருகம்புல், திருமாலுக்குரிய துளசி இலை, கங்கைக்குரிய மாவிலை போன்ற தெய்வீக மூலிகைகளுடன் அற்புத மருத்துவ குணம் கொண்ட பக்க விளைவு, பின்விளைவுகளை ஏற்படுத்தாத ஆடாதொடை, கீழாநெல்லி, குப்பைமேனி, தும்பை ஆகியவைகளையும் பொடி செய்து தக்க அளவில் கலந்து உட்கொண்டும் இயற்கை உணவுகளான பச்சையாக சாப்பிடும் காய்கறிகள், பழங்கள் போன்றவைகளை உட்கொண்டு வருவதாலும் சிறுநீரகங்களில் ஏற்பட்டுள்ள தற்காலிக அடைப்பினை நீக்கி மீண்டும் சீராக செயல்பட செய்திடலாம். மேலும் நீரிழிவு, மூட்டுவலி, அல்சர், ஆஸ்த்மா, புற்றுநோய் போன்ற நோய்களில் இருந்து விடிவுத்தக்க வகையில் விடுபடவும் விரிவான ஆலோசனையை கீழ்கண்ட முகாம்களில் தெய்வீக மூலிகை வைத்தியர் Dr. C.K.M. சபாபதி அவர்களிடம் நேரில் ஆலோசனை பெறலாம்.

ஆலோசனைக்கு :

சென்னை முகவரி:

**Dr.C.K.M. சபாபதி,**
**S/o. Dr.C.K. மாணிக்கவாசகம்**
115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை
(ரெடிமணி ஷாப் எதிரில் உள்ள சந்தில்)
கெல்லீஸ், சென்னை - 600 010.
போன் : 6424285, 6427638



Dr.C.K.M.

திருப்பத்தூர் முகவரி:

ஞானோதய தெய்வீக மூலிகை வைத்தியர்
**Dr.C.K.M. குருபரன்**
**S/o. Dr.C.K.மாணிக்கவாசகம்**
P.B. No: 30, (காலேஜ் எதிரில்)
திருப்பத்தூர் (N.A.A.) 635 601
போன் : 04179-20469, 22329.

**வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மூலிகைப்பொடிப் பெற : 1996ம் வருட புதிய முகாம் விவரம்.**
**(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)**

| | |
|---|---|
| 2ந் தேதி - வேலூர் (N.A.) | : பிற்பகல் 1 to 2 மணி வரை ஹோட்டல் கல்யாண, 16, ஆஃபீசர்ஸ் லைன், ஃபோன் : 0416 / 23060. |
| 3 & 19 ந்தேதி - சென்னை | : காலை 9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ஃபோன் : 044 / 6424285, 6427638. |
| 4-ந் தேதி - கடலூர் (S.A.DL) | : காலை 9 to 11 ஆதனூர் கட்லண்ட்ஸ் ஹோட்டல், ஃபோன் : 04142 / 20707. |
| 4-ந் தேதி - விழுப்புரம் | : பிற்பகல் 2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில், ஃபோன் : 04146 / 22952. |
| 4-ந் தேதி - திருவண்ணாமலை | : மாலை 5 to 6 ராஜா லாட்ஜ் பஸ் நிலையம் எதிரில் ஃபோன்: 04175 / 22536. |
| 9-ந் தேதி - பெங்களூர் | : காலை 11 to 12.30 ஹோட்டல் பிராட்வே, கல்பனா தியேட்டர் அருகில் கெம்பே கவுடா ரோட் ✆ : 2266374 |
| 9-ந் தேதி - ஓசூர் | : மாலை 3 to 4 கீர்த்தனா லாட்ஜ், பாகலூர் ரோட், ஃபோன் : 04344 / 22899. |
| 9-ந் தேதி - கிருஷ்ணகிரி | : மாலை 5 to 6 அமராவதி லாட்ஜ், ஃபோன் : 04343 / 22120. |
| 12-ந் தேதி - சேலம் | : காலை 11.30 to 12.30 ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ஃபோன் : 0427 / 449333. |
| 12-ந் தேதி - ஈரோடு | : மாலை 4 to 5 ஹோட்டல் ஆக்ஸ்ஃபோர்டு, பஸ் நிலையம் எதிரில், ஃபோன் : 0424 / 70761. |
| 13-ந் தேதி - கோயம்புத்தூர் | : காலை 9.30 to 12.30 சேரன் பேலஸ் லாட்ஜ் சாந்தி தியேட்டர் பின்புறம் ஃபோன் : 0422 / 302211, 302220 |
| 14-ந் தேதி - மதுரை | : காலை 9 to 11 ஹோட்டல் கிராண்ட் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு, ✆ 0452 / 543940. |
| 14-ந் தேதி - தஞ்சாவூர் | : மாலை 5 to 6 ஆசோகா லாட்ஜ், ஃபோன் : 04362 / 20021. |
| 15-ந் தேதி - திருச்சி | : காலை 9 to 11 ஹோட்டல் ஆனந்த், சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில், ஃபோன்: 0431 / 460545. |
| 15-ந் தேதி - நாமக்கல் | : பிற்பகல் 2.30 to 3.30 ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, ஃபோன் : 04286 / 21336. |
| 18-ந் தேதி - ஆம்பூர் | : காலை 10 to 11 சம்பங்கி லாட்ஜ், ஃபோன்: 04176 / 4331. |
| 18-ந் தேதி - காஞ்சிபுரம் | : மாலை 4 to 5 ராஜம் லாட்ஜ், பஸ் நிலையம் அருகில் 9, காமராஜர் தெரு, ஃபோன் : 04112 / 22519. |
| 19-ந் தேதி - சென்னை | : காலை 9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ஃபோன் : 044 / 6424285, 6427638. |
| 22-ந் தேதி - தர்மபுரி | : காலை 9 to 10 ஸ்ரீ பார்வதி லாட்ஜ், ஃபோன்: 04342 / 60226. |
| 22-ந் தேதி - திருப்பூர் | : பிற்பகல் 2 to 3 ராமகிருஷ்ணா லாட்ஜ், ஃபோன் : 0421 / 20418. |
| 22-ந் தேதி - உடுமலைப்பேட்டை | : மாலை 6 to 7 குறிஞ்சி லாட்ஜ், பஸ் நிலையம் எதிரில் ஃபோன்: 04252 / 24353. |
| 23-ந் தேதி - திண்டுக்கல் | : காலை 9 to 10.30 ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் பின்புறம் ஃபோன்: 0451 / 31006, 27017. |
| 23-ந் தேதி - தூத்துக்குடி | : மாலை 5 to 6 ஹோட்டல் ஆசியன், தேவர் புரம் ரோடு, ஃபோன் : 0461 / 22780. |
| 24-ந் தேதி - திருநெல்வேலி | : காலை 8.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ சீதாபதி, மதுரை ரோடு, ஃபோன் : 0462 / 23312. |
| 24-ந் தேதி - நாகர்கோவில் | : பிற்பகல் 2 to 3 ஹோட்டல் சுபிக்ஷா, மீனாட்சிபுரம், ஃபோன்: 04652 / 25689. |
| 25-ந் தேதி - விருதுநகர் | : காலை 9 to 10 ஆண்டவர் லாட்ஜ், மதுரை ரோடு, ஃபோன் : 04562 / 43837. |
| 25-ந் தேதி - கரூர் | : பிற்பகல், 2.30 to 3.30 மணி வரை அரசி லாட்ஜ், ஜவகர் பஜார், ஃபோன் : 04324 / 61663, 63763. |

கொண்டிருந்தன. என்றும் அவளை விட்டுப் பிரியாத அவளது உடைவாள் மட்டும் தனித்து சற்றுத் தள்ளியிருந்த பலகைமீது ஏக்கத்துடன் காத்துக் கிடந்தது. வீரம் சொட்டும் கூர் விழிகள் பெரும் சிந்தனையைக் காட்டின.

சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தவளின் தோளில் வலிய கரமொன்று பதிந்தது. "என்ன பலமான யோசனை மகளே?" என்ற கரகரத்த கனமான குரல் ஒன்றும் பின்புறமிருந்து எழுந்தது.

அந்த ஸ்பரிசமும் குரலும் அவள் சிந்தனையைப் பட்டென்று அறுத்ததால் விழிகள் சிந்தனையை விடுத்து அன்புக்கு இடம் கொடுத்தன. திரும்பியவள் எதிரில், ஆறடிக்குக் குறையாத உயரத்துடனும், இடைவிடாத பயிற்சியைக் காட்டிய உடலமைப்புடனும், கூரிய நாசியின்மேல் வல்லூறின் விழிகளைப் போல் ஜொலித்த கண்களுடனும் நின்றிருந்தான் காகதீய கணபதி.

''ஒன்றுமில்லை தந்தையே'' என்றபடி எழுந்த ருத்ராம்பாளை நோக்கிய மன்னன் விழிகளில் பரிவிருந்தது.

"ஏதோ இருக்கிறது மகளே, இந்தக் காலை வேளையில் உன்னைப் பயிற்சிக் கூடத்தில் காண்பதுதானே வழக்கம். உன்னைக்காண அங்கு சென்றுவிட்டுத்தான் திரும்புகிறேன்'' என்றான் மன்னன்.

''தெற்கிலிருந்து முன்னுக்குப் பின் முரணாக வந்த செய்திகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன், தந்தையே.'' ருத்ராம்பாளின் குரலில் இலேசாக குழப்பம் ஒலித்தது.

"என்ன முரணான செய்திகள்?''

''முதலில் சோழ எல்லையில் போசளர் படைகள் அழிக்கப்பட்டதாக செய்தி வந்தது.''

"சரி."

"பின்னர் கொங்கு நாட்டில் போர் நடப்பதாக நம் ஒற்றர்கள் தெரிவித்தார்கள்.''

''உண்மைதான்.''

''நாம் பலமுறை போரிட்ட சிங்கணனையும், அப்பணனையும் பாண்டியர் கொன்றுவிட்டதாகவும் கூறினார்கள்.''

''ஆம். கொங்கு நாட்டுப் போரும் முடியும் தறுவாயிலிருக்கிறது.''

''படைபலமற்ற சோழ நாட்டிற்குள் பாண்டியர் ஏன் இன்னும் நுழையவில்லை? நம் ஒற்றர்கள் தனித்துச் சென்றால் கூட சோழ எல்லைக்குள் நுழைய முடியவில்லை. ஆனால் காஞ்சிக்கு சோழ தூதர் வந்ததாகச் செய்தி வந்தது. இடையேயிருந்த சிற்றரசர்கள் என்ன வாயினர்?''

காஞ்சியைப் பற்றிய பேச்சு எழுந்ததும் மன்னன் முகத்தில் கடுமை தெரிந்தது. "மகளே, தெற்கே யாரோ ஒரு பெரும் ராஜ தந்திரியின் அறிவு அனைத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிறது. என் யூகம் சரியானால் காஞ்சியில் கண்டகோபாலன் பலமாக ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறான். ஆனால் வந்தது உண்மையில் சோழ தூதரானால் கண்டகோபாலன் இத்தகைய சந்தர்ப்பத்தை நழுவ விடவும் மாட்டான்'' என்றான் மன்னன்.

''விளங்கவில்லை தந்தையே.''

"சரி, காஞ்சியிலிருந்து செய்தி கொண்டு வந்தவன் எங்கே?''

குழப்பம் நிறைந்த விழிகளுடன் வாயிலிலிருந்த வீரனை அழைத்த இளவரசி காஞ்சியிலிருந்து வந்தவனை அழைத்து வரப் பணித்தாள்.

சற்று நேரத்தில் உள்ளே நுழைந்து வணங்கியவனை நோக்கிய மன்னன், ''வீரனே, காஞ்சியில் நடந்தவற்றை ஒன்றுவிடாமல் விவரமாகக் கூறு'' என்று உத்தரவிட்டான்.

''மன்னா, தஞ்சைத் துறவியாரிடமிருந்து தூதரை அனுப்புவதாக முதலில் ஓலை வந்தது.''

''பிறகு?''

வழக்கமாக வரும் முதியவருக்குப் பதில் இளைஞன் ஒருவன் தூதனாக வந்தான். கண்ட கோபாலர் அவனுக்கு அளித்த வர


GO BANANAS!


96 pages for just Rs. 5!

WITH THE AUGUST '96 ISSUE OF

GOKULAM

The monthly magazine for children

GOKULAM, EKKADUTHANGAL, MADRAS - 600 097.



**"நீ விரும்பின பெண்ணைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்க ஒரு டிடக்டிவ் ஆசாமியை நியமிச்சியே, என்ன ஆச்சு?"**

**"நாளைக்கு அவங்க இரண்டு பேருக்கும் கல்யாணம்!"**

**— வெ.ராஜாராமன்**

வேற்பு அபரிமிதமாக இருந்தது."

"சொல் மேலே."

"வந்தவன் சோழ மன்னரின் உறவினன் என்பதை அறிந்தபின்பு உபசரிப்பும் அதிகரித்தது. கண்ட கோபாலர் தனித்து அவனிடம் நெடு நேரம் பேசினார். அதுமட்டுமல்ல..."

"தயங்க வேண்டாம். எதுவானாலும் சொல்."

"தூதர், கண்ட கோபாலருடனிருந்த நேரத்தைவிட இளவரசி ஸ்வர்ணமுகியுடன் கழித்த நேரம் அதிகம் பிரபு!"

மன்னன் விழிகளும் ருத்ராம்பாளின் விழிகளும் ஒருமுறை சந்தித்து மீண்டன.

வீரன் தொடர்ந்தான்: "இளவரசியுடன் தூதர் சிற்ப மண்டபத்தில் நெடுநேரம் கழித்தார். நேற்றைய முன்தினம் தூதர் இங்கு வருவதாகக் கூறிப் புறப்பட்டு விட்டார். ஆனால் இன்னும் வந்து சேரவில்லை."

"சரி, நீ போகலாம்" என்று வீரனுக்கு உத்தரவிட்ட மன்னன், ருத்ராம்பாளை நோக்கித் திரும்பி "மகளே, இப்பொழுது புரிகிறதா?" என்றான்.

ருத்ராம்பாளின் விழிகளில் கேள்விகளே நிரம்பிக்கிடந்தன.

"மகளே, நம் விரல்களை மீறி வளரும் நகங்கள் சில சமயம் நம்மையே காயப்படுத்தி விடும். அதை அகற்றித்தான் தீர வேண்டும். கண்டகோபாலனை அகற்ற வேண்டிய சமயம் நெருங்கி விட்டது."

"அப்படியானால் தந்தையே, கண்டகோபாலன் சோழ தூதருக்குத் தன் மகளை..." ருத்ராம்பாள் முகத்தில் திகைப்பு தெரிந்தது.

"ஆம், உன் யூகம் சரியானதுதான் மகளே. விஷயங்களைத் தொகுத்துப்பார். ஓராண்டாக கண்டகோபாலன் நமக்கு கப்பப்பொருட்களை சரிவர அனுப்பவில்லை. படைகளையும் வளர்த்திருக்கிறான். தூதனாக வந்தவன் இளைஞன். சோழ மன்னனுக்கும் உறவினன். உதவிகேட்டு வந்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தன் மகளை தூதனுக்கு மணமுடித்து விட்டால், நேரடி வாரிசு இல்லாத சோழ ராஜேந்திரனுக்குப்பின் அவனை சோழ அரியணையில் அமர்த்தலாம். சோழ நாடு மெள்ள கண்ட கோபாலனின் வசப்பட்டு விடும். போசளர் அதிகாரத்தால் சாதித்ததை கண்ட கோபாலன் திருமணத்தின் மூலம் சாதிக்க நினைக்கிறான்."

ருத்ராம்பாளின் முகத்தில் பிரமிப்பு தெரிந்தது. "அப்படியானால் கண்ட கோபாலன் நம்மையே பிறகு எதிர்க்கத் துணிவான் என்கிறீர்களா தந்தையே?"

"ருத்ரா, சோழ நாட்டு மண் சுண்டெலியையும் பாயும் வேங்கையாக்கி விடும். அவர்கள் சின்னமே அதுதானே? ஆனால் தூதனாக வந்தவனைப் பற்றி எனக்கொரு சந்தேகமிருக்கிறது. சோழ நாட்டின் உண்மை நிலை பற்றித் தெரிந்தால் இது பற்றி முடிவு செய்யலாம். ஆனால் தூதன் ஏன் இன்னும் வந்து சேரவில்லை?" என்றான் மன்னன். மன்னனின் சந்தேகம் இளவரசியின் சித்தத்தில் ஒரு நினைவைப் பளிச்சிட வைத்தது.

"தந்தையே, சோழ எல்லைப்புறத்து சிற்றரசன் ஒருவனின் தூதன் உங்களைக் காண நேற்று முதல் காத்துக் கொண்டிருக்கிறான்" என்றாள் இளவரசி.

"நேற்றுமுதல் காத்திருக்கிறானா? ஏன்? யார் அவன்?"

"நான்தான் யோசனையாக இருந்ததில் கூற மறந்துவிட்டேன் தந்தையே. இதோ அவனை அழைக்கிறேன்" என்ற ருத்ராம்பாள் வீரனைக் கூப்பிட்டு, வந்திருக்கும் தூதனை அழைத்துவர உத்தரவிட்டாள்.

சற்று நேரத்தில் காடவராயனின் ஓலையுடன் அந்தக் காளாமுக உபதலைவன் உள்ளே நுழைந்து வணங்கினான்.

காகதீய மன்னன், சோழ தூதரைப் பற்றிக் கொண்டிருந்த சந்தேகத்திற்கு விடை அந்தக் காளாமுகனிடம் இருந்தது.

அதே சமயத்தில் ஆதித்யனையும் விஜயனையும் சுமந்து பெண்ணையாற்றில் வந்து கொண்டிருந்த படகு நெல்லூர்புரத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

(தொடரும்)

# அஞ்சல் வழி
# அக்கவுண்டன்சி பயிற்சி

அக்கவுண்டன்ட் தேவை என்ற விளம்பரங்கள் நாள் தோறும் செய்தித்தாள்களில் வருவதைப் பார்த்திருப்பீர்கள். காரணம் இவ்வேலைக்கு திறமையும் அனுபவமும் ஒருங்கிணைந்த ஆட்கள் கிடைப்பது அரிதாகி விட்டது. பள்ளி, கல்லூரிகளில் படித்து வரும் மாணவர்கள் பலருக்கு போதிய செயல்முறை அனுபவம் இல்லை. இதனை கருத்தில் கொண்டுதான் இப்பயிற்சிக் கான பாடங்களை நாங்கள் கணக்கர் துறையில் உயர்ந்த பதவிகளில் இருக்கும் அனுபவம் நிறைந்தவர்களை கொண்டு எளியாக புரிந்து கொள்ளும் முறையில் தகுந்த விளக்கங்களுடன் பாடங்களாக தயாரித்துள்ளோம். இப்பயிற்சியை படித்தவர்கள் மிகவும் உபயோகமுள்ளதாக இருக்கிறது என்று கூறுகின்றனர். ஆடிட்டர்கள் கூட இப்பயிற்சியை பாராட்டி உள்ளனர். பயிற்சியின் மூலம் பயனடைந்த சிலர் வெளிநாடுகளில் மிக உயர்ந்த நிலையில் உள்ளனர். பயிற்சியை முடித்ததும் இறுதித்தேர்வு நடத்தி சர்டிபிகேட் வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் நீங்கள் எவரது உதவியுமின்றி எந்த நிறுவனத்தின் கணக்குகளையும் எழுத முடியும். பயிற்சிக்கான பாடமுறையில் உள்ளவற்றில் சில:

குறிப்பேடு, பேரேடு, கேஷ்புக், பாங்க் நடைமுறை IT & ST, Trial Balance, உண்டி, பாலன்ஸ் ஷீட், மற்றும் பல பயிற்சிக்கான பாடங்கள் அனைத்தையும் V.P.P.யில் பெற விரும்பினால் கீழ்கண்ட கூப்பனை கத்தரித்து அனுப்புங்கள். தகவல் (Prospectus) புத்தகத்தை பெற விரும்பினால் ரூ. 10/-க்கான ஸ்டாம்பை தெளிவான முகவரியை கவரில் எழுதி வைத்து அனுப்பவும்.

## பயிற்சி சேர கூப்பன்

பயிற்சிக்கான பாடங்கள் அனைத்தையும் கீழ்கண்ட முகவரிக்கு V.P.P.யில் அனுப்பி வையுங்கள் போஸ்ட் மேனிடம் ரூ. 300/- கொடுத்து பெற்று கொள்கிறேன்.

பெயர் : ..................................................

தெளிவான முகவரி : ..........................................

..................................................

.............................. Pin Code ..............................

கத்தரித்த கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி

## அக்கவுண்ட் ஸ்டடிஸ் இன்ஸ்டிட்யூட்

(இது அமெரிக்கன் இன்ஸ்டிட்யூட் சார்பு ஸ்தாபனம்)

(அரசு பதிவு பெற்றது)

எல்லீஸ் நகர் (PO), மதுரை – 10



# BUSINESS! MONEY! BUSINESS!



# YOUR INTEREST & OUR KNOW-HOW

*Will work wonder for a highly Profitable Business for you*

## COME......

759/96

**SHARE OUR EXPERIENCE & EXPERTISE TO START A SURE WINNER of a business**

CHOSE from the following range of products....

YOU CAN MANUFACTURE WITH OUR CONSULTANCY

1. **Pan Masala & Tobacco Products** (Chewing Tobacco, Gutkha Quimam, Khaini, Sweet Supari & Mouth Freshner etc.)



2. **Perfumery Products & Flavour's** (Incense Sticks, Dhoop, Havan Samagri, All type Perfume & Flavours.




3. **Cosmetics & Tolietery products** (Hair Oils, Detergents, Bath & Washing Soaps etc.)



4. **Foods Products & Aditives** (Jam & Jelly, Soups, Churan, Chutney's Sherbet's, Thandai Achar & Murabba etc.)



We have the necessary Infrastructure and technical Know-how and do-how to tell you the right composition & contents for the above Products.

**WE PROVIDE TIPS ON MARKETING AS WELL**

## INTERESTED?

*Then write immediately, in English/ Hindi, with full details (Name of Product / Products etc.).*

*You would love to see in to*

***Post Box No.1519 G.P.O., Delhi-6***



கடலோரக் கொலைகள்
புதிய பகுதி
பெனிட்டோ குமார்
படம் : சசி
உவரி– நீலக்கடலின் கரையில் நீண்டு கிடக்கும் கிராமம். திருச்செந்தூரிலிருந்து முக்கால்மணி நேர பஸ் பயணம்.
ஊரின் முக்கியத்துவம் சுயம்புலிங்கசுவாமி கோவில். திருவிழா சமயம் ஜேஜே!
அக்ரஹாரத்தில் பண்ணையார் வாசுதேவன்.
சரசு! நேத்து ஒரு கடுதாசு வந்துதே. நந்து கிட்டே குடுத்தியா?
கல்லூரிக்குக் கிளம்பிய நந்தகோபால்...
அடேடே! பென் ஃப்பிரெண்ட் தேவைன்னு பத்திரிகைல விலாசம் கொடுத்திருந்தேன்...
நாகர்கோவில் ஐமிந்து கல் லூரியில் நான் விரிவுரை யாளன். ஐந்தாம்தேதி காலை பத்து மணிக்கு உங்க ஊருக்கு வரு கிறேன். முக்கிய வேலை. என்னுடன் இரு பிரபலங்கள் வருகிறார்கள்.
– நாகராஜன்


ஹைய்யா! இன்னிக்குத்தானே ஐந்தாம்தேதி! காலேஜுக்கு மட்டம்தான்!
எதுக்குடா தேன் குடிச்ச நரியாட்டம்...
இது ஒரு வகைக் காதல் அம்மா! என்னை அவருக் குத் தெரியாது. அவரை எனக்குத் தெரியாது. ஆனாலும் ஒரு துண்டு காகிதத்தின் மூலம் நண்பர்களாகிட்டோம்!
தங்கை சீதா...
என்னண்ணா?
பென் ஃப்ரெண்ட் நேரிலேயே வராரு. அது வும் ரெண்டு பிரபலங்களோட...
நான்போய் அவங்களை ஊர் எல்லை யிலேயே சந்திச்சு அழைச் சிட்டு வரேன். வீட்டை சுத்தப் படுத்தி அலங்காரமா வை!
ஊர் எல்லையில்...
பஸ்ல வருவாங்களா? இல்ல டாக்ஸியா? அதோ ஒரு அம்பாஸிடர்... ஒரு வேளை...



டாக்ஸி நெருங்கி....
மிஸ்டர் நந்தகோபால் வீடு தெரியுமா?
நான் தான். நீங்க... நாகராஜுனா?
முதல் லெட்டர்லயே ரொம்ப நெருங்கி வந்துட்டோம்.
சந்தோஷம், ஏகப்பட்ட சந்தோஷம்...!
வா, என் ஃபிரெண்ட்ஸை மீட் பண்ணு...
பிரபலங்கன்னு எழுதியிருந்தீங்க...
இவர் பிரதீப் பேட்கர். பெரிய எழுத்தாளர்; ஆராய்ச்சியாளர்... இவங்க அவரோட மனைவி ஆஷா பேட்கர்...
ஹௌ டு யு டு?
ஹேப்பி! ரொம்ப ஹேப்பி... ஹி...ஹி...


(தொடரும்)

• உள்நாட்டுப் போரால்
பாதிக்கப்பட்ட ஆப்கானியர்....



# அமைதித் தேவதைகளே, ஆப்கான் வருவீர்களா?

ஆப்கானிஸ்தானத்திற்கு காபூல் தலை நகரம் மட்டுமல்ல. நாடி, நரம்பு, இருதயம் எல்லாமே அதுதான்.

காபூலை யார் வசப்படுத்திக் கொள்வது? இதுதான் அங்கே காலம் காலமாகப் போராட்டம்.

இஸ்லாமிய சமூகத்தினர்தான் என்றாலும் அவர்களுக்குள்ளேயே பத்து விதமான வெவ்வேறு 'பதவி ஆசை' அணிகள். எல்லோர் குறியும் காபூல் மீதே.

இந்தப் பத்து அணிகளும் ஒன்றாகச் சேர்ந்து போராடின, போராடின, அப்படிப் போராடின. எதற்கு? கம்யூனிஸ்டுகளை காபூலிலிருந்து விரட்ட.

கடைசியில் பதினான்கு வருடப் போராட்டத்துக்குப் பிறகு விரட்டியே விட்டன 1992ல்.

அப்புறமும் இன்னும் போராடிக் கொண்டிருக்கின்றன. யாரை எதிர்த்து, தெரியுமா? தங்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் எதிர்த்து. பதவி ஆசைதான்.

விளைவு? நாடெங்கும் ரத்த ஆறு. துப்பாக்கிச் சத்தமே கிட்டத்தட்ட ஆப்கானிஸ்தானின் தேசிய கீதமாகி விட்டது.

பேராசிரியர் புர்ஹானுதீன் ரபானிக்கும், குல்புதீன் ஹெக்மதியாருக்கும் இடையேதான் பிரதான மோதல்.

ரபானி, ஆப்கானிஸ்தானத்தின் ஜனாதிபதி. ஒரு காலத்தில் ஹெக்மதியார் பிரதமராகவும் இருந்தார். இருந்தாலும் இரண்டு பேருமே எலியும் புலியும்தான்.

இரண்டு பேரின் கட்சிகளிலும் துப்பாக்கியை நேசிக்கும் வன்முறையாளர்கள் ஏராளம். மீதியுள்ள உதிரி அணிகளில் கொஞ்சம் அங்கே, கொஞ்சம் இங்கே என்று ஆதரவு தந்து கொண்டிருக்கின்றன.

இவர்கள் சண்டையில் ஆப்கானின் கஜானாவும், களஞ்சியமும் காலியாகி வருகிறது.

1993- மார்ச் 7ம் தேதி இஸ்லாமாபாத் ஒப்பந்தம் என்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது- 'போர் ஓய்வு' என்று ஒப்புக்கு அறிவித்தார்கள். உண்மையில் அது தங்களை ரீ-சார்ஜ் செய்து கொள்வதற்காக இரண்டு அணிகளும் எடுத்துக் கொண்ட ஓய்வுக்காலம் என்பது பின்னர் தெரிந்தது.

நடுவில் தாலிபான் என்ற இஸ்லாமிய, தீவிர இயக்கம் இரண்டு அணிகளுக்கும் தலைவலியாய் உருவானது. கொரில்லா போர் முறையில் இந்த இயக்கம் திடீர் தாக்குதல்கள் நடத்தியது.

இதற்கிடையே, பாகிஸ்தான் ஹெக்மதியாருக்கு ஆதரவாகச் செயல்பட்டது. ஏன் என்று கேட்டால் 'இந்தியாவின் ஆதரவு ரபானிக்கு இருப்பதாகத் தெரிகிறது' என்று பதில்.

அல்லாவே வந்தாலும் ஆப்கானிஸ்தானத்தைக் காப்பாற்ற முடியாது. இனி அது 'அதோகதிதான்' என்று கை கழுவி விட்ட நிலையில் தான் இந்த ஆண்டின் துவக்கத்தில் அந்த அதிசயம் நிகழ்ந்தது!

ரபானியும் ஹெக்மதியாரும் திடீரென கை குலுக்கிக் கொண்டார்கள்! ஒற்றுமை ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டார்கள்! ஹெக்மதியார் பிரதமரானார்.

'ஜாக்கிரதை. மரியாதையாக ஒதுங்கிப் போய் விடுங்கள். இனி உங்கள் ஜம்பம் சாயாது!' என்று தாலிபான் இயக்கத்தை உரத்த குரலில் ஹெக்மதியார் எச்சரித்திருக்கிறார்.


இன்னும் சொல்லப்போனால் 'ரபானி, ஹெக்மதியார் ஆகிய இருவரின் இந்த திடீர் 'தேன் நிலவு' கூட தாலிபானை ஒடுக்க மேற்கொள்ளப்படும் ராணுவ நடவடிக்கைக்கான ஒத்திகைதான்' என்றே அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

ஒரு ஐ.நா. அதிகாரி சொன்னார்: அமைதித் தேவதைகள் காபூல் வானத்தின் பக்கம் தவழ்ந்து வந்தால் அங்கே தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அவைகளும் துப்பாக்கி வைத்துக் கொள்ளவே வேண்டியிருக்கும்."

அந்த அமைதித் தேவதைகள் துப்பாக்கியை வீசிவிட்டுவானிருந்து கீழிறங்கி வந்து காபூலை அணைத்துக் கொள்ள மாட்டார்களா என்று ஆப்கான் மக்கள் ஆவலோடு காத்திருக்கிறார்கள்.

- ராஜமைந்தன்





# வாடகைக்குக் கிடைக்கும் பசுமை!

**ம**ஞ்சரி!

உள்ளே நுழையும் போதே பசுமையைக் கண் குளிரக் காண முடிகிறது. வண்ணப் பூக்கள் கண் சிமிட்டிச் சிரிக்கின்றன.

பிரம்மாண்டமான, வளைந்த, நுண்ணிய கம்பிவலையிலான மேற்கூரை. அதன் மீது மூங்கில் தட்டி. அதன் மீது பாலிதின் ஷீட். ஈரமாக்கப்பட்ட தரை. வெயில் உச்சத்துக்குப் போகும் நாட்களில் செயற்கை முறையில் வெப்பம் குறைக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையை பசுமை இல்லம் - கிரீன் ஹவுஸ் என்று குறிப்பிடுகிறார்கள்.

உள்ளே ஏ.சி. செய்யப்பட்டது போன்ற உணர்வு. வரிசை வரிசையாய் கொலுப்படிகள் போல அமைத்து, பிளாஸ்டிக் மற்றும் மண் தொட்டிகளில் விதம் விதமான செடிகள். ரோஜா, சாமந்தி, குரோட்டன்ஸ் தவிர, வாயில் பெயர் நுழையாத தாவரவியல் பெயர்களைக் கொண்ட நூற்றுக் கணக்கான வெரைட்டிகள்.

ஸ்பிக் நிறுவனத்தின் 'திசு கல்சர்' திட்டத்தின் புதிய முயற்சிதான் இந்த மஞ்சரி! திசு கல்சர் முறையில் வீரியமான பல்வகைச் செடிகளையும் உற்பத்தி செய்து, ஏற்றுமதி, உள்நாட்டு விற்பனை மட்டுமின்றி, வாடகைக்கும் தருகிறார்கள் மஞ்சரிக்காரர்கள்!

அதென்ன திசு கல்சர் (Tissue Culture)?

வழக்கமாய். விதையிலிருந்தோ, வேர், தண்டு, போன்ற செடியின் பாகங்களிலிருந்தோதான் புதிய செடிகள் உருவாகின்றன. ஆனால், ஸ்பிக் நிறுவனம் தனது சோதனைச் சாலையில் திசு கல்சர் முறையில் செடிகளை உருவாக்குகிறது. தரமான தாய்ச் செடியின் திசுவை எடுத்து, விஞ்ஞான முறைப்படி, அதிலிருந்து செடியை உருவாக்கி, படிப்படியாய் பூமியிலிருந்து வளர்ந்து, பயன் தரக் கூடியதாய் அதனை மாற்றுகிற முறைதான் திசு கல்சர்! இத்தகைய செடிகளுக்கு எக்ஸ்போர்ட் மார்க்கெட்டில் ஏக கிராக்கி.

உதவி மானேஜர் வீரசேகரன் சொல்கிறார்: "எங்களுக்குச் சென்னை நகரில் மட்டும் சுமார் மூவாயிரம் வாடிக்கையாளர்கள். இவர்களுள் பெரும்பான்மையும் தனியார் கம்பெனிகளே! அலுவலகங்களில், செயற்கைத் தாவரங்களை வைக்கவும் இஷ்டமில்லை; இயற்கையான செடி கொடிகளை வைத்தாலும் பராமரிப்பு கஷ்டம் என்று பல கம்பெனிகள் நினைக்கின்றன. எனவே எங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறார்கள். வாரம் ஒருமுறை புதிய செடிகளை வாடிக்கையாளர்களது இடத்தில் கொண்டு போய் வைத்து விட்டு, கையோடு, பழைய செடிகளை எடுத்துக் கொண்டு வந்து விடுவோம். அப்படி எடுத்துவரப்படும் செடிகளை சுமார் ஒரு மாதம் வரை எங்கள் கிரீன் ஹவுஸில் வைத்துப் பராமரித்துவிட்டு, மறுபடி வேறு ஒரு கம்பெனிக்கு அளிக்கிறோம். வாடிக்கையாளர்கள், தம்மிடம் இருக்கும்போது செடிகளுக்குத் தண்ணீர் விட வேண்டும் என்ற அவசியம் கூட இல்லை. எங்களிடமுள்ள ஆயிரக் கணக்கான வகைச் செடிகளிலிருந்து, வாடிக்கையாளர்கள், தமக்கு விருப்பமானதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் உரிமை உண்டு" என்கிறார்.

வாடகை அதிகம் இருக்குமோ?

ஒரு செடிக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்! அதைக் கொடுக்கவும் ஆட்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

— எஸ். சந்திரமௌலி

வண்ணப்படம் : பேஜர் கே. மூர்த்தி

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன். ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

# YOGAKSHEMAM

*(a welfare organisation in association with)*

## யோகக்ஷேமா நிரந்தர நிதி லிமிடெட்

(மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டது)
23, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம்
சென்னை - 600 033. ☎ : 4848652

## கல்யாண யோகம் (முகூர்த்த நிதி)

உங்கள் அன்புக்கும், ஆசைக்கும் உரித்த பெண்ணின் திருமணத்தை பற்றிய கவலை இனி உங்களுக்கு தேவையில்லை.

ரூ. 1500 ஒரே முறையிலோ அல்லது 12 மாதத்திற்கு ரூ.125, வீதமோ கட்டி ரூ.1,00,000 திருமணத்திற்காக பெறுங்கள்.

## பிஸி மணி பாலிஸி

இனி நீங்கள் பணத்தேவைக்காக சீட்டு கம்பெனியை நாடிச் செல்ல வேண்டாம். மாதம் ரூ. 1,250 வீதம் 12 மாதங்கள் கட்டினால் போதும். குறைந்த வட்டியில் ரூ. 1,00,000 கடனாக பெறலாம்.

## நிரந்தர ஓய்வூதியம்

ஒரே ஒரு முறை ரூ. 250, அல்லது 500 செலுத்தினால் போதும். மாதம் ரூ. 1,000 பென்சனாக நாங்கள் தருகிறோம்.

## ஆத்ம சாந்தி

ரூ. 1,000 செலுத்தினால் அந்திம கிரியைக்காக ரூ. 5,000 குடும்பத்தில் ஒவ்வொரு நபருக்காகவும் வழங்குகிறோம்.

**வாருங்கள், சேருங்கள், பயன்பெறுங்கள்**

**எங்களது சேவைப்பிரிவு**

பிரன்ஜ் எக்ஸ்பிரஸ்,
5, சுக்குராம செட்டி தெரு 2வது மாடி, சென்னை - 01

திரு.நாகராஜன் RD
30A/ 6வது தெரு, பாலாஜி நகர்,
நங்கநல்லூரர், சென்னை 61.

திரு. வீரராகவன் RD
5, ராஜராஜேஸ்வரி நகர்,
கூத்தப்பாக்கம், கடலூரர் - 02

**P. Murugesh, 1/1-D, Mohender Roy Lane,
Calcutta - 700 046. Ph : 2402470**



அழகு! அழகு! அழகு!
சாரதா'ஸின் கடை அழகு!
சாரதா'ஸின் உடை அழகு!
நகரிலே நூறழகு!!
சாரதா'ஸ் தான் பேரழகு!!
சாரதா'ஸ்
முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
827, அண்ணா சாலை,
தன்பில்டிங், சென்னை - 2
போன் : 852 11 77
32, என்.எஸ்.பி.ரோடு,
திருச்சி - 2
போன் : 27077
சாரதாஸ் திருச்சி - 2, சென்னை - 2
தவிர வேறு எங்கும் கிளைகள் கிடையாது